# கனகதுர்க்கை அந்தாதி



கூடலூர் நாகராஜன்

# க ன க து ர் க் கை

# அ ந் தா தி

கூடலூர் **நாகராஜன்**

## BIBLIOGRPHICAL DATA

*Title of the Book* : **KANAKA THURKAI ANTHATHI**
கனகதுர்க்கை அந்தாதி
*Author* : *Koodaloor* **Nagarajan**
*Language* : **Tamil**
*Year of Publication* : **2004**
*Edition* : **First Edition (1000 copies)**
*Copyright* : **Author.**
Copy right of all digital colour pictures is with Ealing Thurkai Amman Temple and shall not be used for any other purposes.
*Nature of Paper used* : 80 gsm Bank paper
*Size of Book* : 215 X 145
*Size of Font* : 11
*No of pages* : 152+VIII colour.
*Price* : **By donation** (அடியார்கள் அன்பளிப்பு மூலம்)
All Proceeds to go to the Blind People in Tamil Ealam through the "*Kanagathurkai Amman Annaikum Karangal Charity*"
*Layout & Design* : **Dream Station**
255H, Galle Road, Colombo-6, Sri Lanka.
Tel: +94 11 255 9789
*Printers* : **Kumaran Press Private Limited,**
201, Dam Street, Colombo-12. Sri Lanka.
*Binding* : Stitching.
*Publishers* : **The Elders Forum, Kanagathurkai Amman Temple.**
No. 5 Chapel Road,
West Ealing ,
London W13 9AE.
Tel : (020) 8810 0835
(020) 8840 0485

ஓம்
கணபதி துணை


# கனகதுர்க்கை அந்தாதி

கூடலூர்
நாகராஜன்

இவ்வந்தாதி
5, பிளாசா பரேட், 29-33 ஈலிங் றோட், வெம்பிளி, இலண்டன்,
**வெஸ்ரன் ஜூவல்லர்ஸ் & ரெக்ஸ்டைல்ஸ்**
**(Western Jewellers & Textiles)**
நிறுவனத்தின் ஆதரவில் வெளியிடப்படுகிறது.



சுவாமி ஞானானந்த கிரி




ஸ்ரீ ஹரிதாஸ் கிரி சுவாமி



ஸ்ரீ நாமானந்தகிரி சுவாமி



# சற்குரு உரை

**சுவாமி நாமானந்த கிரி**
**ஞானாந்த கிரி பீடம்**
**தென்னாங்கூர்**



**ஸ்ரீ சற்குரு நாதர் துணை நிற்க**

அன்புடையீர்,

*ராதே கிருஷ்ணா!*

"எல்லாம் வல்ல சற்குருநாதரின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்கப்பெற்று யாவரும் என்றும் இன்புற்றிருக்க வேண்டுவோம்."

இந்த ஜகத்தினைப் படைத்தருளி ஜகத்தினரைக் காத்து அருளி பரிபாலித்துவரும் பராபட்டாரிகையான ஆதிபராசக்தியின் அருள் வெள்ளத்தின் ஒரு துளியாக விளங்கும் ஸ்ரீ கனக துர்க்கை அம்மனின் அருளால் தூண்டப்பட்டு உள்ளுணர்வின் எழுச்சியால் பக்தி மேலிட்டு அம்மாளின் அருளை தான் பெறுவதோடு மட்டும் அல்லாமல் பக்தப்பெருமக்கள் அனைவரும் பெற்று உய்யும் எண்ணத்துடன் அன்பர் நாகராஜா அவர்கள் எழுதிய "கனகதுர்க்கை அந்தாதி" என்ற புத்தகத்தைப் படிப்பவர்கள் அனைவருக்கும் ஸ்ரீ சற்குரு ஞானாந்தப் பெருமானின் அனுக்கிரகமும் குருஜி ஹரிதாஸ்கிரியின் அருளாசியும் இணைந்து சர்வேஸ்வரியான கனகதுர்க்கையின் அருள் கிடைக்கப்பெற்று என்றும் எப்பொழுதும் மனமகிழ்வுடன் இருக்க வேண்டியும் மேலும் பக்தி மார்க்கத்தில் ஈடுபட வேண்டியும் சற்குருநாதரைப் பிரார்த்திக்கின்றோம்.

*ராதே கிருஷ்ணா!*

**சுவாமி நாமானந்தகிரி**
6-10-2003



ஸ்ரீ கனகதுர்க்கை அன்னை




## என்னுரை

### கற்றிலேன் கற்றவருடனும் உற்றிலேன்

''கற்றிலேன் கலைகள் ஞானம், கலைகள் ஞானம் கற்றவர் தம்மோடு உற்றிலேன் ஆதலால் வெறும் உணர்வுக்கும் சேயன் ஆனேன்'' என்ற தேவாரத்தின் முதல் இரு அடிகளில் கூறியவாறு அடியேன் சாஸ்திரங்களையோ இதிகாச நூல்களையோ படித்துப் பட்டம் பெற்றிலேன். மேலும் கற்றவர் தம்மொடு உற்றுக் கலைஞானத்தைப் பெற்றிடும் சிறந்த நிலைதானும் அன்று பெற்றிலேன். கல்விப் பொதுத்தராதரத்தில் மட்டுமே எனது தமிழறிவும் சமய அறிவும் அமைந்துள்ளது. கணித விஞ்ஞான அறிவைப்பெற்று தொழில் நுட்பக்கலையாக கணக்கியல் பயின்று 1975 - 1985 வரை கணக்கு லிகிதனாகக் கடமையாற்றி 1985இல் புலம் பெயர்ந்து இந்நாட்டில் குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறேன்.

## எனது ஆத்மீக விழிப்பு

எனது தந்தையர் தமிழிலும் சைவத்திலும் மிக்க ஈடுபாடு கொண்ட ஒரு தமிழ் ஆசிரியராகக் கடமையாற்றி சைவநெறியில் ஆர்வம் கொண்டு சமூகசேவையில் தன்னை ஈடுபடுத்தியவர். அவருக்குத் துணையாக என் அன்னையார் தனது இளவயதிலிருந்தே செயற்பட்டு இறைபக்தியுடன் விளங்கினார். அவர்களுக்கு சிரேஷ்ட புத்திரனாகப் பிறந்த பொழுதே கண் இமை திறவாது வைத்தியர்கள் கண்காணிப்பில் இருந்தேன். அந்நேரத்தில் எனது தாயார் நயினை நாகபூஷணியை வேண்டி முறையிட்டு பிரார்த்தனை செய்து சில நாட்களிலேயே அடியேனின் கண்விழிகளும் திறந்தன. எனது தாயாரும் நயினை நாகேஸ்வரி அம்மனின் திருவருளை நினைந்து நாகராஜா என்ற பெயரை எனக்குச் சூட்டி மகிழ்வுற்றாள். இதுவே எனக்கும் என் ஆத்மிகத்தாயாகிய அம்மனுக்கும் ஏற்பட்ட தெய்வீக உறவின் சங்கல்ப்பம் என எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். பிற்காலத்தில் என் கண்பார்வை மீண்டும் குறைந்து கொண்டு போக நான் பிறந்தவுடன் நடந்தவற்றையும் அம்மனின் அருளையும் என்னை வளர்த்த அன்னை நினைவூட்டி அம்மனை வழிபடும்படி கூறியதும் அடியேனுக்கு ஞாபகம் வர இதனை ஏழையின் அருட்பாக்களில் இணைத்திருக்கின்றேன்.

## இளமையும் இறைவழிபாட்டின் உதயமும்

மேலும் தாய் தந்தையார் அருள்வழியினால் என் ஊரான வேலணைசார் அயலூரான புளியங்கூடல் இந்தன் விநாயகரைக் குலதெய்வமாகவும் மகா மாரியை இஷ்டதெய்வமாகவும் பூசித்து வந்தேன். சிறு வயதிலே தனிமையில் மண்விளையாட்டிலும் தெய்வங்களின் பொம்மைகளையும் வாகனங்களையும் செய்து பந்தலிட்டு பூசை செய்வதிலும் மகிழ்ந்தேன் என்று இப்பொழுது நினைக்கும் பொழுது என் உள்ளம் நெகிழ்கின்றது. பத்து வருட காலங்களுக்குப்பின் என் பெற்றோர்கள் எனக்கு இரு சகோதரர்களைப் பெற்றெடுத்தனர். இளம் வயதில் என் வீட்டில் வளர்த்த பசுவினையும் கன்றினையும் பரிவோடு பராமரித்து மகிழ்ந்ததையும் இன்று நினைக்கும்போது என் நெஞ்சம் சிலிர்க்கின்றது. இவையெல்லாம் தாய்தந்தை வழியாக

"கருவுற்ற நாள் முதலாக உன் பாதமே
காண்பதற்கு உருகிற்று"

என்ற அடிக்கும்

"கருவாய்க் கிடந்தும்
கழலே நினையும் கருத்துடையேன்"

என்ற அப்பரது தேவாரத்துக்கும் அமையப் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது அடியேன் கருவில் இருக்கும் பொழுதே என் பெற்றோர்கள் இறை பக்தியுடன் வாழ்ந்தமையால் ஆரம்பத்தில் இருந்தே தெய்வீக உணர்ச்சியைப் பெற்றேன் என்பதையுணர்ந்தேன்.

## புலம் பெயர்ந்தேன்

1978ம் ஆண்டில் விவாகம் செய்து இல்லற வாழ்க்கையில் புகுந்தேன். என் வாழ்க்கைத் துணைவியாக இணைந்த என் அருமை மனைவியும் அன்னையின் அருளால் எளிமையும் ஆத்மீக அருள் பெற்ற தாயாகவும் வாழ்க்கையில் வேறு வழிகளில் தடம்புரளாது தெய்வீக பக்தி வளர்ந்துவர உறுதுணையாக இருக்கின்றாள் என்று கூறுவதில் பெருமைப்படுகிறேன். என் சிரேஷ்ட புத்திரன் பிறந்து குழந்தைப் பருவத்திலேயே இறைவனடி சேர்ந்துவிட்டான். பின்னர் இரு பெண் குழந்தைகளைப் பெற்று இலண்டனில் புலம் பெயர்ந்த தமிழ் மகனாக வாழ்ந்துவருகிறேன். நான் இலண்டனில் இருக்கும் பொழுது ஈழத்தில் அமைதியின்மை காரணமாக 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் அனலை தீவிலிருந்து எனது பெற்றோர்களும் சுற்றத்தினரும் சேர்ந்த 84 அகதிகள் படகொன்றில் இந்தியாவுக்கு சென்ற பொழுது படகு கடலில் தாழ்ந்துவிட எனது தந்தைதாயரும் இரு சகோதரரும் பல சுற்றத்தினரும் அகால மரணமடைந்தனர். இவ்விபத்தில் உயிரிழந்த உறவுகள் சாந்தியடைய என் அன்னையின் அருளை வேண்டுகிறேன்.

## கண்பார்வை இழந்தேன்

இங்கு வேலை பார்க்கும் பொழுது முதல்முறையாக என் கண்பார்வை குறைந்து வருவதையறிந்து கவலையுற்றேன். மருத்துவ பரிசோதனையும் எனது கண்பார்வை சிறிது சிறிதாகக்குறைந்து காலகட்டத்தில் பார்வையற்ற நிலையேற்படும் என்பதை

உறுதிப்படுத்தியது. இதனால் இரவில் வேலை செய்வதை நிறுத்தி பகலில் வேலை பார்க்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

## புறக்கண்ணை இழந்து அகக்கண்ணில் இறைவனைக் கொண்டேன்

ஆறு மாதங்களின் பின்னர் (1988 புரட்டாதி 12ம் திகதி) வேலை முடிந்து பேருந்தியில் வீடு திரும்பி பேருந்தி நிற்பாட்டும் இடத்தில் அதிலிருந்து லேடி மாகறற் தெருவில் இறங்கி நடந்து வரும்பொழுது கண்பார்வை திடீரென மங்கியதால் வீதியருகில் வீழ்ந்தேன். அப்பொழுது நான் இறங்கிவந்த பேருந்தியே என்னை மெதுவாக முட்டி நிற்பதையுணர்ந்து இறைவனருளால் தப்பிப்பிழைத்தேன் என்று நினைத்து எழுந்து பார்த்தபோது வீதியருகிலேயிருந்த மகாவிஷ்ணு கோபுரம் கண்ணுக்குத்தெரிந்தது. பின்னர் அடியேன் பகவானே என்னை வந்து காத்தருளினார் என்ற மன உறுதியுடன் வீடு சென்றேன். மறுநாள் வைத்தியரிடம் சென்று பரிசோதனை செய்த பொழுது இதற்கு ஒரு சிகிச்சையும் செய்ய இயலாது இது பிறப்பின் பொழுதே உடன் வந்த நோய் என்று அனுதாபம் கூறி பார்வையற்றோர் பட்டியலில் பதியப்பட்டேன். அதன் பின்னர் எல்லாம் வல்ல என் இறைவன் என்னை வழி மாற்றி நிரந்தர இறைவழிபாட்டில் ஈடுபட சங்கல்ப்பம் செய்துவிட்டான்.

## விஷ்ணு பகவானின் பகவத் கீதையைக்கண்டேன்

இச்சம்பவத்தின் பின் அடுத்த நாள் ஒருமுறை லேடி மாகறெற் தெருவிலுள்ள விஷ்ணு ஆலயத்தில் வழிபட்டுக்கொண்டு இருக்கும் வேளை எனக்குள்ளே கண்பார்வை இருந்தபோது பல நல்ல நூல்கள் இருந்தும் அவற்றை நான் கற்றிடவில்லையே இனி நான் என் செய்வேன் என்று திடீரென சிந்தித்து பயமுற்று மனம் தளர்ந்து நிற்கும் நிலை ஒரு கணம் ஏற்பட்டது. மறுகணம் பகவான் அருளால் இன்று முதல் நல்லதைப் படி நல்லதை உண் நல்லதைப் பேசு நல்லதைக்கேள் என்ற உணர்ச்சிகள் என் நெஞ்சில் ஊற்றெடுத்துப் பாய்வது போன்ற ஒரு நிலை ஏற்பட்டதை அறிந்தேன். இதன் வழியாக ஏதாவது நூல்களைப்படிக்க வேண்டுமென்ற ஆசை கொண்டபோது கவிஞர் கண்ணதாசனுடைய

அர்த்தமுள்ள இந்துமதம் என்ற நூலை என் உறவினர்கள் தர வாசித்து மகிழ்ந்தேன். அதன் வழியாக பகவத் கீதையின் சிறப்பையும் அறிந்து பகவத் கீதையை வாசிக்கவேண்டுமென்றும் காஞ்சிப்பெரியவருடைய ஆசியை பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் உள்ளத்தில் உறுதி கொண்டேன். மறு நாளே எனது நண்பர் திரு. இரங்கநாதன் அவர்கள் வீட்டிற்கு வந்த பொழுது தான் இந்தியாவுக்கு போகவிருப்பதாகக் கூறினார். அப்போது அடியேன் அவரிடம் எனக்கு ஒரு பகவத் கீதை புத்தகம் வாங்கி வரும்படியும் காஞ்சிப்பெரியாரைத் தரிசித்து அவரிடம் பிரசாதம் வாங்கி வரும்படியும் கேட்க அவரும் சம்மதித்து வாங்கி வந்தார்.

## கீதையில் சற்குருவைக் கண்டு தேடிப்பெற்றேன்

சிறிது நாட்களின் பின் சற்குருவின் வழிபாட்டின் முக்கியத்தை கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்குப்போதிக்கும் பகுதியை பகவத் கீதையில் படித்தவுடன் என்னையறியாமலே என் சற்குருநாதனை நான் தேடவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அன்று இரவு பகவத் கீதையை திறந்து பார்த்தபொழுது அதனுள்ளே ஸ்ரீரமண மகாரிஷியின் உருவப்படம் இருந்ததைப்பார்த்து அதை வழிபட்டு நித்திரைக்குச் சென்றேன். அடுத்த நாள் எனது நண்பர் இரங்கநாதன் அவர்கள் விம்பிள்டன் விநாயகர் ஆலயத்தில பூசை செய்வதாக அழைப்பு விட்டு இருந்தார். அதன்படி குடும்பமாக மறு நாள் விம்பிள்டன் சென்று விநாயகரை உள்ளத்தில் எனக்கு ஒரு சற்குரு வேண்டும் என்று நினைத்தபடி வழிபட்டுக்கொண்டிருந்தேன். என்ன ஆச்சரியம்! எனது மூத்த மகள் ஜனனி (வயது 9) ஒரு துண்டுப்பிரசுரத்தை விநாயகப்பெருமானிடம் சற்குருவைப்பெற வேண்டி நிற்கையில் என்னிடம் கொடுக்க அதில் ஸ்ரீ குருஜி வருகையும் விளக்குப்பூசையும் என்ற தலைப்பில் குரு வழிபாட்டை பற்றிய விளக்கம் இருப்பதைக்கண்டு இறைவனைப் பிரார்த்தித்தேன். இதன் பலனாக இன்னொருதடவை குருஜி சுவாமி ஹரிதாஸ்கிரி அவர்களை விநாயகர் சந்நிதியில் தரிசித்து அவர் அருளைப்பெற்று அவரது பக்தனாக ஈடுபட்டு அருள்வழியை வளர்க்க ஆரம்பித்தேன். இவ்வாறு

அருள்பெற்ற வரலாறுகளையும் அடியேனின் பாடல்களில் குறிப்பிட்டுள்ளேன்.

## அடியேனுக்கும் சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாருக்கும் ஏற்பட்ட ஆன்மீகத்தொடர்பு

கிட்டத்தட்ட 35 ஆண்டுகளுக்கு முன்பாக நான் இளைஞனாக இருந்த போது எனது கிராமத்திலிருக்கும் புளியங்கூடல் மகாமுத்துமாரியம்மன் ஆலயத் திருவிழாவில் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் ஆற்றிய சொற்பொழிவு இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. அச்சொற்பொழிவில்

> ''கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும்
> ஒளியே! ஒளிரும் ஒளிக்கு இடமே! எண்ணில் ஒன்றுமில்லா
> வெளியே! வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே!
> அளியேன் அறிவிற்கு அளவானது அதிசயமே! ''

என்ற அபிராமி அந்தாதிப் பாடலை அம்மையார் பாடி அதன் விளக்கத்தைக் கூறி அன்னையின் அருளால் அறிவு பெருகும் என்று உருக்கத்துடன் ஆற்றிய பிரசங்கத்தைக் கேட்டதிலிருந்து அடியேன் மனதில் அம்மையாரின் ஆன்மீகத் தொடர்பை இணைத்துக் கொண்டேன். அம்மையார் அப்பொழுது தெல்லிநகர் துர்க்கை அன்னை ஆலயத்தை உருவாக்கும் பணியில் இணைந்து ஆலயங்கள் தோறும் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றி அடியார்களிடம் காணிக்கை சேர்ப்பதில் ஈடுபட்டிருந்தார். அந்தத்திருவிழாவில் நிதியைப் பொற்கிளி என்று அடியார்கள் அவரிடம் கொடுத்ததையும் நினைவுறுகிறேன். அவ்வேளை எனக்கு அபிராமி அந்தாதியைப்பற்றிய அறிவோ அல்லது பெரும் பக்தியோ இருக்கவில்லை. இருந்தாலும் சாதரணமான இளைமைப்பருவ இறை பக்தி ஒன்றே இருந்தது. காலப்போக்கில் அடியேன் விவாகம் செய்து இல்லற வாழ்வில் ஈடுபட்டு தெல்லி நகர் ஆலயம் உருவாகிய பின்பு முதன்முதலாகக் கௌரிக்காப்புப் பூசையை அம்மையாரின் ஆலயத்திலேயே முழுநாளும் இருந்து விரதம் அனுஷ்டித்து காப்புக்கட்டியதை நினைக்கும்போது இன்னமும் உள்ளம்

அருள்வசப்பட்டு மெய் சிலிர்க்கிறது. மேலும் புலம் பெயர்ந்து இலண்டனில் வசிக்கும் போது கிட்டத்தட்ட 93 ஆம் ஆண்டில் இலண்டன் கனகதுர்க்கை ஆலய ஆரம்பத்திலிருந்து அம்மன் வழிபாட்டில் கலந்துகொண்டேன். அதற்குமுன்பாக 90ஆம் ஆண்டில் அடியேனுக்கு சற்குருவாக அமைந்த ஸ்ரீ ஹரிதாஸ் (குருஜி) அவர்களின் உபந்நியாச ஒலி நாடாவில் ஸ்ரீ லலிதா நவரத்தின மாலை விளக்கம் கூறியபோது சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரும் எனது சற்குருவின் உத்தம பக்தையாக இருந்ததை அறிந்தேன். தெல்லிநகர் ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகத்தின் போது சுவாமிகளையும் அழைத்து மக்களுக்கு திரு அருளையும் குரு அருளையும் வழங்கியதை அறிந்து மேலும் அம்மையாரின் ஆத்மீகத்தொடர்பு பெருகியது. தொடர்ந்து 1994ம் ஆண்டு குருஜி இலண்டன் வந்த பொழுது கனகதுர்க்கை ஆலயத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவிலும் கலந்து கொள்ள ஒழுங்கு செய்திருந்தோம். அம்மையார் ஈழத்தில் சமய சமூகப்பணிகளில் தன்னை முற்றாக ஈடுபடுத்தி அளப்பரிய அருட்சேவை ஆற்றிவருவது உலகம் அறிந்ததே. அடியார்களினது பூரண அபிமானத்தையும் பக்தியையும் பெற்ற அம்மையாரின் பிறந்த தின வைபவத்தை 2003ம் ஆண்டு ஜனவரி 7ம் திகதி ஈலிங் கனகதுர்க்கை அன்னை ஆலயத்தில் மாலைப்பூசை நேரத்தில் கொண்டாடி அடியார்களுடன் அம்பிகையைப் பிரார்த்தித்து இவ்வந்தாதி முதல் இரண்டு பாடல்களையும் பாடி அம்பிகையிடம் சமர்ப்பித்து அன்றைய தினத்தை அன்னையின் அருள் பெற்ற நாளாக ஆனந்தமடைந்தேன். இந்த அருட்பாக்களை முறையாக அம்மையாரிடம் அந்தாதியாக வெளியிட்டுச் சமர்ப்பிக்க முடியாததால் இன்று இவ்வந்தாதியை ஆலய முதியோர் சபையின் உதவியால் வெளியிட்டு அம்மையாரிடம் மானசீகமாகச் சமர்ப்பித்து அவரின் ஆசியைப்பெற விரும்புகின்றேன்.

## குருவருளையும் திருவருளையும் அள்ளித்தரும் கனகதுர்க்கை

1994ம் ஆண்டு குருஜியின் அடியார்கள் நவராத்திரி பூசையில் சவுத்தோல் (Southal) ஷக்கில்டன் மண்டபத்திற்கு சுவாமியை அழைத்து ஆலயம் உருவாக ஆசி பெற ஒழுங்கு செய்திருந்தோம். அவ்வேளையில் ஒருவரும்எதிர்பாராத விதமாக 1994 செப்டம்பர் மாதம் 4ம் திகதி சுவாமி

ஹரிதாஸ்கிரி இமயமலைச்சாரலின் உருத்திர பிரயாக்கைச் சேரந்த கோடீஸ்வரர் சிவதலத்தின் அருகில் உள்ள அலகநந்தா நதியில் ஜலசமாதியடைந்தார். அதைத்தொடர்ந்து சுவாமி ஸ்ரீ ஹரிதாஸ்கிரியினால் சந்நியாசி தீட்சை பெற்று அவரின் பிரதம சிஷ்யனாக ஞானாநந்தகிரி பீடத்தின் பீடாதிபதியாக அமர்ந்திருக்கும் ஸ்ரீ நாமானந்தகிரி (நாமாஜி) 1996ம் ஆண்டு இலண்டன் வருகையின் போது ஈலிங் ரோட்டில் அமைந்துள்ள மண்டபத்தில் மங்கள வாரத்தில் ஸ்ரீ கனகதுர்க்கை அம்பிகையின் பூசையில் கலந்து சிறப்பித்து அடியார்களுக்கு ஸ்ரீ லலிதா நவரத்தின மாலையை ''ஞான கணேசா சரணம்'' என்று தொடங்கி பக்தியுடன் பாடி வாருங்கள் என்று ஆசி கூறினார்.

அதைத்தொடர்ந்து 1997ம் ஆண்டு இலண்டன் ஈலிங்கில் தற்போது அமைந்திருக்கும் ஸ்ரீ கனகதுர்க்கை ஆலயத்தின் இடம் வாங்கப்பெற்று அதில் ஆலயம் கட்டுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. அச்சமயத்திலும் சுவாமி நாமாஜி இலண்டன் வருகையின் போது அங்கு பூசையில் கலந்து அடியார்களுக்கு அருளாசி வழங்கி சிறப்பித்தார். அதைத்தொடர்ந்து 6-6-99ல் கோயில் அமைந்து மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்த வைபவத்தின் போது வைபவத்தில் சுவாமி நாமாஜி கலந்து அருளாசி வழங்கியதை நினைக்கும்போதும் குருவருளும் திருவருளும் ஒன்றாகச்சேர்ந்து அருளொளி வீசும் ஸ்ரீ கனகதுர்க்கை அன்னையை நினைந்து என் உள்ளம் நெகிழ்கின்றது. அதனால் எனது இரு விழிகள் புற ஒளியை இழந்தாலும் அடியேன் குருவருள் ஒளியும் அன்னையின் அருள் ஒளியும் அகத்தினில் அமையப்பெற்று ஆனந்தத்தைப் பிறப்பிப்பதாக உணர்கின்றேன். அடியேன் இதனை நினைந்து ''கண் ஒளி இழந்தாலும் கருணையுடன் ஞான ஒளி தந்த ஞானேஸ்வரியே'' என்று ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளேன். மேலும் 2003ஆம் ஆண்டு ஆடி மாதம் சங்கடகர சதுர்த்தி தினத்தில் கனகதுர்க்கை அந்தாதியின் முதல் இரு பாடல்களின் கருத்துரையை எழுதத்தொடங்கினேன். பின் தொடர்ந்து பாடல்களின் கருத்துரைகளை ஆடிமாத ஆசாட ஏகாதசி வரை எனது சற்குருவின் இலண்டன் ஹரிதாஸ்கிரி ஆச்சிரமத்தில் எழுதினேன்.

தொடர்ந்து இறுதிப்பாடல்களின் கருத்துரைகளை இவ்வந்தாதியை அச்சிடுவதற்கு உறுதுணையாக நின்று உதவிய கவிஞர் இராஜசிங்கம் அவர்களின் இல்லத்தில் வேத வியாச குருபூர்ணிமா அன்று எழுதி முடித்தபோது குருவருளும் அன்னையின் திருவருளும் சேர்ந்து செயல் பட்டிருப்பதை எண்ணி என் அகம் அருள் வசப்பட்டது.

## கனகதுர்க்கை அம்மன் தரிசனம்

என் கண் பார்வையிழந்த நிலையில் துர்க்கை அம்மனை ஈலிங் மண்டபத்திலும் சவுதோல் மண்டபத்திலும் வழிபடப்பட்டு வருவதை அறிந்து இரு இடங்களிலும் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுவந்தேன். தற்போது ஈலிங் ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் கனகதுர்க்கை அம்மனின் பொற்சிலை முதன்முதலாக பிரதிஷ்டை செய்து கண்திறத்தல் வைபவம் சவுதோல் மண்டபத்தில் நடைபெற்றபோது லேடி மாகிறற் தெருவில் உள்ள விஷ்ணு மந்தர் ஆலயத்தில் சில மணித்தியாலங்கள் சந்தர்ப்ப வசமாக மகாவிஷ்ணுவின் அருகில் வைக்கப் பட்டிருந்ததையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இங்கு இதனைக் குறிப்பிடுவதற்குக் காரணம் என்னவென்றால் இப்பாடல்கள் புத்தகமாக பதிவுசெய்யப்படு முன் இப்பாடல்கள் எனது மனதில் வரும் வேளைகளில் விஷ்ணு மந்தர் ஆலயத்திலுள்ள துர்க்கை அம்பிகையின் முன் படித்து மகிழ்ந்ததை நினைவு கொள்ள ஏதோ தொடர்பு இருப்பதை நினைவுற்று என் உள்ளம் நெகிழ்கிறது. காலப்போக்கில் ஈலிங் ஆலயத்தில் எழுந்தருளிய துர்க்கை அம்மனையே மிகப்பக்தியுடன் தரிசிக்க ஆரம்பித்தேன். இந்த ஆலயத்திலே குமார் குருக்கள் அபிஷேகத்தின் பின் அடியேனுக்கு தந்த தீர்த்தப்பாலை ஒருமுறை அருந்தியவுடன் அபிராமி அந்தாதியில் உள்ள பால் அமும்பிள்ளைக்கு நல்கின பேரருள் என்ற பாடல் நினைவுக்கு வந்தது. அடியேனுக்கு விழியிழந்து பார்வை இல்லாத இந்நிலையில் அபிராமி அந்தாதிப் பாடல்களை மனப்பாடம் செய்வதுதான் நலம் எண்ணுணர்ந்து சீர்காழி கோவிந்தராஜன் பாடல் பதிவுகளை வாங்கிக் கேட்டு மனப்பாடம் செய்ய ஆரம்பித்தேன். சீர்காழியின் பாடல்களை கேட்கும் போதெல்லாம் கண்களில் நீர்மல்கி உணர்ச்சி மேம்படுவதையும் அறிந்தேன். நாளடைவில் என் மனதில் உணர்ச்சி உண்டாகும் வேளைகளிலெல்லாம் இருக்கும்போதும் நடக்கும்போதும் கட்டிலில்

துயிலும்போதும் அபிராமி பாடல்களை மனதில் பதிக்க முயற்சித்தேன். அதன்படியே என் மனத்தினுள்ளே நீர் ஊற்றுப்போல் அருள் எண்ணங்கள் உதயமாகிக் கொண்டிருப்பதை அறிந்து கொண்டேன். அபிராமி அந்தாதிப் பாடல்களை அடியேன் படிக்கும் போது கோயில் சிவாச்சாரியார் ஒருவர் என்னை கலியுகப்பட்டர் என்று அன்று கூப்பிட்ட குரல் இன்றும் என் காதில் ஒலித்துத் திகைக்கவைத்தது நினைவில் வருகிறது. அபிராமி பட்டருடைய பெயரைக்கேட்டு ஆனந்தமடைந்தேன் அதே நேரத்தில் அப்பெரியாரை என்னுடன் ஒப்பிடுதல் நன்றல்ல என்று கூறமுடியாத என்னுடைய நிலையையும் எண்ணி மனம் நொந்தேன்.

## இது கனவா நினைவா?

இச்சம்பவத்தின் பின்னர் ஒரு செவ்வாய்க்கிழமை கனகதுர்க்கை அம்மாளின் இராப்பூசை முடிந்ததும் வீடுதிரும்பிச் சென்று புதன்கிழமை அதிகாலையில் பின்வரும் அருள்தரும் ஆனந்தக்கனவினை கண்டு மனம் நெகிழ்ந்தேன்:

கனவில் துர்க்கை அன்னையின் பொற்சிலையை ஒரு குழந்தை வைத்து விளையாடுவதையும் அதன் முன் ஒருவர் தியானத்தில் அமர்ந்து கொண்டிருப்பதையும் கனகதுர்க்கை பொற்சிலையும் தியானத்தில் இருப்பவரும் மின் இணைப்பால் மின்கலத்துடன் இணைந்திருக்கும் காட்சியும் கண்டேன். அப்பெண்குழந்தை அந்த மகானுக்கும் பொற்சிலைக்குமிடையே தெர்ப்பபப்புல்லை வைத்த கணத்தில் கனகதுர்க்கை அம்மனின் பொற்சிலையின் முகத்தில் மின் ஒளி பிரகாசித்தது. மின் ஒளி பிரகாசிக்கக்கண்டதும் அடியேன் கண்விழித்தேன். இது கனவா அல்லது நினைவா என்ற முடிவை வாசகர்களுக்கு விட்டுவிடுகிறேன். இக்கனவு என்னை திகைக்க வைத்ததுமன்றி என் அடிநெஞ்சத்தில் படிந்து அருட்சிந்தனைகளை உருவாக்கத்தொடங்கியது. இக்கனவு பட்டர் தியானத்தில் இருக்கையில் இப்படியாகத்தான் அபிராமி தன் அருள் ஒளியைக்காட்டியிருக்க அந்தப்பிரகாசத்தில் மூழ்கியே பட்டர் மன்னன் கேட்ட திதிக்குப் பூரணப்பிரகாசம் என்று சொல்லியிருப்பாரோ என்ற சிந்தனை அடியேன் மனதில் ஊற்றெடுக்கத் தொடங்கியது. இந்த ஊற்றில் வந்த சிந்தனைகளே என் அன்னையின் அருட்பாடல்களாக மலர்ந்தன.

## கனகதுர்க்கை அந்தாதி

இக்காட்சிகளை அபிராமியாக வந்து காட்டி புறக்கண்ணில் ஒளியிழந்த பேதையெனை பாட்டிசைக்க வைத்த என் அருட்தாய் கனகதுர்க்கை அம்மனின் பாடல்களை நான் பாடி மாலையாகக்கோர்த்து அவள் கழுத்தில் சாத்தி அன்னையின் அழகை அடியேனின் அகக்கண்ணாலாவது பார்த்து மகிழாது இருக்க முடியுமா? இதன்பின் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தில் நடக்கும் முக்கியமான விழாக்களும் பூசைகளும் அறநெறிகளும் அடியேன் நெஞ்சில் நினைவுவர அவற்றை அருட்பாடல்களாக இணைத்துக் கொண்டேன். ஸ்ரீகனகதுர்க்கை ஆலயத்தின் இரண்டாவது ஆண்டு திதி முகூர்தத்தின்போது அடியார்கள் ஆயிரம் குடம் பாலை ஊற்றி அபிஷேகம் செய்ததையும் மாலை நேரம் அம்பிகையை ஊஞ்சலாட்டி ஆராதனை செய்த பொழுது :

''அருட்பாலைச்சுரக்கின்ற அன்னைக்குப் பால்மணமாம்''
என்ற பாடல் என் உள்ளத்தில் பொங்கி வழிந்தது.

## நூலின் நோக்கம்

கனகதுர்க்கை அந்தாதியை தூய உள்ளத்துடன் பாடி அதன் உட்கருத்துகளை உள்ளத்தில் அமர்த்தி அன்னையை வழிபடுவோர்க்கு அன்னையின் அருள் கட்டாயம் கிடைக்கும் என்பது அடியேனின் நம்பிக்கை. இந்த நம்பிக்கையை வாசகர்களுடன் கலந்து கொள்வதே இந்நூலின் நோக்கமாகும். இந்நூலை அபிராமி அந்தாதி வழிவந்த கனகதுர்க்கை அந்தாதியாக அடியேன் வாசகர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

## அபிராமியே கனகதுர்க்கை

அந்தாதியில் ஒரு பாடலில் கனகதுர்க்கையே அபிராமியாகும், அபிராமியே கனகதுர்க்கையாகும் என்ற தத்துவத்தை என் கனவில்

கண்டவாறு எடுத்துக்காட்டியுள்ளேன். அபிராமி என்றால் அழகு உடையவள் என்பது கருத்து. இதை:

"இங்கு இவளின் அழகுதனை எடுத்து இயம்ப
எவராலும் இயலாது "

என்ற பாடலில் குறிப்பிட்டு அவளின் பல கோலங்களை நினைவு கூர்ந்தேன். கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் உற்சவ நாட்களில் சிவாச்சாரியார்கள் அம்மனை ஒவ்வொரு அலங்கார ரூபமாக அலங்கரிப்பார்கள் என்ற நினைவே இப்பாடலின் உதயமாகும். அத்துடன் உற்சவ நாட்களில் அன்னை தரும் அலங்காரக் காட்சிகளையும் இரதோற்சவத்தையும் தீர்த்த உற்சவத்தையும் பூங்காவன ஊஞ்சலையும் உள்ளடக்கி ஒரு பாடல் உதித்தது.

ஆலயத்தின் மூலஸ்தானத்தில் அம்பிகையின் திருவாசியின் பின்புறமாக இதயத்தைப்போன்ற ஒரு நிழல் அம்பிகையை நினைவூட்டியதால் என் சிந்தனையில்:

"கருவறைக்குள் வந்துவிட்டாள்" என்ற பாடலும் அதில் "திருவாசி எம்மிதயம் அதற்குள்ளே .............. இருள்மயமாம் மகிசனையும் அழித்திட்டே ஒளிவீசுகின்றாள் அருள்மயமாம் சோதியவள் பிரகாசம் கண்டிடுவோம்" என்ற அடிகளும் தோன்றின. மேலும் அடியார்கள் அளித்திட்ட அர்ச்சனைகளை ஏற்று அம்பிகை மகிழ்ந்ததையும் அன்னையின் அருட்காட்சியைக்கண்டு அடியார்கள் திகைத்துநின்று மகிழ்ந்தமையையும் ஆதிபராசக்தியாக விளங்குபவள் இதய இருளை நீக்கி மகிடாசுரமர்த்தனியாய் ஒளிர்கின்றாள் என்று 42ஆவது பாடலில் குறிப்பிட்டேன்.

மேலும் கனகதுர்க்கை அம்பிகையின் உருவத்தை நினைவு கூர்ந்து "அணைப்பே.." என்ற பாடலிலும்"சின்னஞ்சிறு மருங்கில்....." என்ற பாடலிலும் அம்பிகையின் அழகை எடுத்துக் காட்டியுள்ளேன். இப்பாடல்களை நினைக்கும் வேளைகளில் அம்பிகையே என் நெஞ்சத்தில் காட்சியளிக்கும் உணர்வுகொண்டு ஆனந்தக்கடலில் மூழ்குவேன்.

மகிடாசுரமர்த்தனியாய் நவராத்திரி விழாவின்போது அவள் மகிசனை வதம் செய்து அடியார்க்கு அருளிய தன்மையை: ''நாயகி நானிலம் செழிக்க வந்தாள்'' என்ற பாடலில் வெளிக்காட்டியுள்ளேன். சிலநாட்களில் பாடல் மனதில் உதித்தும் அந்தாதிப்பாடலை தொடுத்து எழுதி முடிக்கமுடியாத நிலை ஏற்படுவதும் உண்டு. இப்படியான இரு சந்தர்ப்பங்களில் அன்னை என்னைக் கனவு காணவைத்து அதன்மூலம் பாடலைத் தொடங்க உதவியதை நினைக்கும்போது என் நெஞ்சம் சிலிர்க்கிறது. அவை முறையே:

''பாவம் என்னும் விறகைச்சேர்க்க...'' என்ற பாடலும் ''கொடுக்கும் தகமை என்தாய்க்கு புதிதன்று.....'' எனத்தொடங்கும் பாடலுமாகும். அடியேன் சுமந்து கொண்டு வந்த விறகை தாயாக நின்று வாங்கி அதை எரித்து அமுதை சமைத்ததுபோல கண்ட கனவாகும் இப்பாடலில் இவ்விறகை பாவம் என்றும் தாயை பராசக்தி என்றும் அவள் பாவங்களை எரித்து சுமையைக்குறைத்து ஆத்மாவை பக்குவப்படுத்தலை சமையல் என்றும் குறிப்பிட்டேன். மேலும் ''கொடுக்கும் தகமை'' என்ற பாடலில் அழும் குழந்தைக்கு தாய் ஓடிவந்து பால் ஊட்டுவது போல் கண்ட கனவின்படி அதே அடியை அப்படியே: ''படுத்திருந்து அழும் சேயின் குரல்கேட்டு பதைத்து வரும் தாய் போல தொடுத்திடும் என் பாடல் குரல் கேட்டவுடன் ''வாராளோ என் தாய்.....'' என்று பாடலில் இணைத்துள்ளேன். மேலும் ஈழ மக்களின் குறை தீரவேண்டும் என்ற கருத்துடன்: ''வாழ்வின் நிலையாமை சொல்லிவைத்தார்...'' என்று தொடங்கும் பாடலில் ''ஏழ்கடல் சூழ் இலங்கை மக்கள் துயர் நீங்கப் போற்றிடுவோம் எந்நாளும்'' என்று குறிப்பிட்டுள்ளேன்.

மேலும்''பணிகின்றோம் நாம் பக்தியுடன்..'' என்று தொடங்கும் பாடலில் ''தணித்திடுவாள் நிச்சயமாய் தமிழ்மக்கள் தணியாத தாகம் அங்கே...'' என்ற அடிகளாலும் '' அங்கிருக்கும் அவலைகட்கும் உறவிழந்த குழந்தைகட்கும்..... என்று தொடங்கும் பாடலில்''பொங்கிவரும் புத்தாண்டில் புதுவாழ்வு தந்திடு உன்னருளே. '' என்றும் அன்னையின் அருளை வேண்டிப் பாடுகின்றேன். கனகதுர்க்கை அம்மன் அறக்கட்டளை மூலம் செய்யும் தொண்டினை: ''நமக்கு என எண்ணாது நானிலம் செழிக்கவென வேண்ட வைத்தாய்...'' என்ற பாடலில் குறிப்பிடுகிறேன். ''இவளின்றி அவனில்லை அவனுக்குள் இவள்

இருந்து ஆடுகிறாள்.." என்ற அடியில் சிவமும் சக்தியும் ஒன்றென உறுதிப்படுத்தினேன். சிவனுள் இருந்து உலகனைத்தையும் இயக்கும் சக்தியும் எமது அன்னையேயாவாள்.

தாயாக இறைவனை வணங்குதலின் சிறப்பை''அணைக்கின்ற உறவினிலே மேலான உறவு'' என்ற பாடலிலும் ''அம்மா என்ற சொல்லில் வரும் சுகமே சுகம்'' என்ற பாடலிலும் இணைத்துள்ளேன். மேலும் இறுதியாக ''வாழ்வு வளம்பெற வந்து நின்ற துர்க்கையை வணங்கிடுவோம்'' என்றும் குறிப்பிட்டுள்ளேன். எப்போது மரணம் வருமோ அப்போது அவள் அருட்காட்சி வேண்டி இப்போதே பிரார்த்தனை செய்வோம் என்பதையும் தொழுகின்ற அடியார்கள் அன்னையின் அருட்காட்சியில் மூழ்கி திளைத்து பரவசமாகும் நிலையையும் தொழும் அடியார்களுக்கு அந்நிலையைத் தருகின்ற அன்னையின் அருட்கோலம் எப்பொழுதும் என் நெஞ்சினுள்ளே உதித்திட வேண்டி அன்னையைப் பிரார்த்தனை பண்ணி முடிக்கிறேன்.

விநாயகர் காப்பையும் கனகதுர்க்கை அந்தாதிப்பாடலையும் நூற்பலனையும் அபிராமிப்பட்டர் சொன்னவாறே சில மாற்றங்களைச்செய்து கனகதுர்க்கை அந்தாதிக்குச் சூட்டியுள்ளேன். இந்நூலில் ஏதாவது இலக்கியப் பிழைகள் இருப்பின் வாசகர்கள் இப்பாடல்களை என் உணர்ச்சி வசமாக விளைந்த அருட்பாடல்களாகக்கருதி அடியேனை மன்னிக்க வேண்டுகின்றேன். இந்நூலில் ஏதாவது குறைகள் இருக்குமாயின் என்னை மன்னிக்குமாறும் அம்பிகையைப் பாடல்களில் கேட்டுள்ளேன். அவள் தந்த அமுதத்தை அடியேனின் வாய் என்ற அகப்பையால் அள்ளிக்கொடுக்கும்போது பிழைகள் இருந்திடின் அவை அகப்பையின் குற்றம் என நினைத்து பிழைகளை நீக்கி அதன் சிறப்புகளை மட்டும் அன்னையின் அமுதமென நினைத்து உண்டு மகிழ்ந்து அன்னையின் அருளைப் பெறுமாறு வேண்டுகின்றேன்.

மேலும்''பெற்றிலேன் பெரும் தடங்கண் பேதமைவார் தமக்கு சொல்லிலேன். ஏத்திலேன் இறைவா என் செய்வான் வந்து தோன்றினனே'' என்ற தேவாரத்தை முடித்து அகம் குளிர்ந்து

பிரார்த்தனை பண்ணியபோது தன் தவறை உணர்ந்து திருவண்ணாமலைக் கோபுரத்திலிருந்து விழச்சென்ற அருணகிரிநாதரை தடுத்தாட்கொண்டு பாடவைத்தது போல என் அகக்கண்ணை விழிக்கவைத்து தெய்வீகக்கனவுகளில் புறக்கண் பார்வையை இழந்து தடுமாற்றமுற்ற அடியேனுக்கு அடிகளை எடுத்துத்தந்தருளிய என் அன்னைக்கு எப்படிக் கனகதுர்க்கை அந்தாதி என்ற இப்பாமாலையை சூட்டி மகிழ்ச்சியடையாதிருக்கமுடியும்? மாதா பிதா குரு தெய்வமாக நின்று அடியேனுக்கு அருள் ஒளி காட்டி அற நெறியில் மேம்படுத்திய அன்னை பராசக்திக்கு இந்நூலை சமர்ப்பணம் செய்கிறேன்.

அடியேன் ஆலயத்தில் என்பக்கத்தில் அமர்ந்திருக்கும் அடியார்களுடன் சில வேளைகளில் என்னை மறந்து ஆன்மீக விடயங்களில் உரையாடுவது வழக்கம். இப்படியாக ஒரு நாள் திருவாளர் இராஜசிங்கம் அவர்களுடன் பல அருள் விடயங்களைப் பேசிக்கொண்டிருக்கையில் அவரிடம் நிறைந்துள்ள இறைபக்தியையும் புலமையையும் அவர் இயற்றியுள்ள அருட்பாக்களையும் அறிந்து இவ்வந்தாதியின் முதலாவது பாடலை படித்துக்காட்டி அதன் கருத்தையும் கூறினேன். இப்பெரியாரும் பகவத்கீதையிலிருந்து உதித்த தன் கருத்துக்களைப் பரிமாறி அந்தாதியை வெளியிட முன்வந்து கனகதுர்க்கை அந்தாதி கூடியசீக்கிரம் வெளியிடப்படும் என்று உறுதி கூறினார். கண் பார்வை இழந்த எனக்கு ஊக்கமளித்து ஆலய முதியோர் பேரவையினதும் ஆலயப் பொறுப்பாளர்களினதும் ஆலய இளைஞர் பேரவையினதும் அடியார்களினதும் ஆலய அந்தணர்களினதும் உதவியுடன் வெளியிடுவதற்கு கவிஞர் இராஜசிங்கம் அவர்களை அம்பிகைதான் அனுப்பினாளோ என்ற எண்ணம் அடியேன் மனதில் எப்பொழுதும் அலைமோதுகின்றது. இப்பெரியாருக்கும் கனகதுர்க்கை அம்மன் ஆலயச் செயற்குழுவிற்கும் அடியேனுக்கு உதவிய அடியார்கள் யாவருக்கும் எனது நன்றியை தாழ்மையுடன் தெருவிக்கின்றேன். இப்பாடல்கள் என் மனதில் ஊற்றெடுக்க நான் கனகதுர்க்கை அன்னை சந்நிதியில் அவ்வப்போது இந்த அந்தாதியைப்பாட அவற்றை எழுதி உதவிசெய்த அந்தணர்களுக்கும் அடியார்களுக்கும் மேலும் அவற்றை கேட்டும் வாசித்தும் திருத்தங்களைக்கூறியும் உதவி செய்தஅடியார்களுக்கும்

குறிப்பாகப் புலவர்மணி இளவாலை அமுது அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவிக்கின்றேன். இவ்வந்தாதி வெளியீட்டால் வரும் வருமானம் யாவும் என்னைப்போன்ற ஈழம் வாழ் பார்வை இழந்தோர் பராமரிப்புத் திட்டங்களுக்கு அன்னையின் அணைக்கும் கரங்களால் வழங்கப்படவேண்டுமென ஆலய நிர்வாக சபையை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அம்பிகையைச் சரணடைந்து அதிக வரம் பெற்று வாழ்க.

**பொன்னுச்சாமி நாகராஜா**
(கூடலூர் நாகராஜன்)

# முன்னுரை

ஆலய முதியோர் பேரவை செயற்குழு அங்கத்தவரும் இளைப்பாறிய
பொறியியலாளர் திரு. கந்தையா இராஜசிங்கம்
B.Sc.,(Lond)., Dip.E.E., C.Eng., M.I.E.E.
அவர்கள் வழங்கியது

**சாதி சமயபேதம் சற்றுமேயற்றோன் வாழி**

ஆதியும் அந்தமாகி அம்மையும் அப்பனாகி
சோதியும் சுடருமான சுந்தர வடிவே-விண்ணில்
தேவர்கள் யாவருமே தேடியுந்தனையே போற்றும்
சாதியோ சமயபேதம் சற்றுமேயற்றோன் வாழி

**மரபுக்கவி அடியெடுத்துவைத்த அன்னை**

விழியில் ஒளியிழந்தோன் வேண்டுதலையேற்று
மழலைப் பெண்ணுருவில் வந்து நின்றாள்- கனவில்
கனகதுர்க்கை அன்னை கவிஞன் நாகராஜன்
மனதில் வந்(து) அந்தாதி பாட வைத்தாள்

அன்னையின் அழகினை எடுத்துரைத்திடவே
ஆழ்ந்த கவி இலக்கியங்கள் வேண்டிடுமோ?- கவிஞன்
பொய்மையில்லாத் தூய உள்ளமதே போதும்
மெய்மை இவ் அந்தாதியில் காண்

கவிஞனின் கற்பனையில் உணர்ச்சி வெள்ளம்
கலந்து நின்று ஏழ்கடல்போல் கரைபுரட்ட - அங்கு
மனமுவந்து அன்னையே நீ கனவில் வந்து
மரபுக்கவி அடி எடுத்து வைத்தாயன்றோ!

## அன்னையின் அருள் பெற்றோன்

அம்மனின் அருளைப்பெற்று
ஆண்டவன் தயவையேற்று
புறவிழி தனையிழந்தும்
பூவுலகோர்க்குத் தந்து
குவலயம் கேட்க வைத்தான்
கூடலூர் நாகராஜன்
அருள்மிகு கனகனக துர்க்கை
அந்தாதி தனையே யன்றோ!

தன்னையே மறந்து நின்று
தாயவள் மடியில் சேய்போல்
அன்னையாம் கனக துர்க்கை
அரவணைப்பையுமே பெற்றோன்
என்னையும் அடியனாக்கி
எழில்பெறும் ஈலிங் தன்னில்
மண்ணிலே அருள் மணக்கும்
மாட்சிமை தந்தான் சீலன்

அன்னையின் அழகுதன்னை
அகக்கண்ணில் கண்டவன்தன்
பண்பினை என்ன சொல்வேன்
பரமனின் அருள்தான் என்னே!
புறக்கண்ணில் ஒளியிழந்து
பூவுல கினிலே வாழ்ந்து
அழகியின் அழகைக் கண்டோர்
அருமையே அருமையன்றோ!

பாடுக அந்தாதி தன்னை
நாடுக அவளின் கோயில்
தேடுக இறைவன் பாதம்
கூடியே அருளும் சேர்க
சீமைவாழ் இராஜனெந்தன்
சிந்தையைத் தெழிய வைத்த
கூடலூர் நாகராஜன்
குவலயம் போற்ற வாழ்க!

**வாழ்த்துகின்றேன்**

அன்னையின் அந்தாதி தன்னை
    அச்சிட வழி வகுத்த
ஆலய முதியோர்சபை
    ஆயிரம் ஆண்டு வாழி!
ஈழத்து இளைஞர் வாழி!
    இளைஞர்கள் குழுவும் வாழி!
எழில்பெறும் ஈழமக்கள்
    இன்னல்கள் நீங்க வாழி!

வேண்டிய நிதியுதவி
    வெம்பிடும் சிறார்க்குதவும்
ஆலயச்செயற்குழுவும்
    அம்மன் அடியாரும் வாழி!
அன்னையின் அருகில் நின்று
    அர்ச்சனை பலவும் செய்து
ஆன்மீகவிளக்கம் கூறும்
    அந்தணர் வாழி வாழி!

பூவுலகெங்கும் மக்கள்
    புகழுடன் சான்றோராக
சாதியோ சமய வேறு
    சற்றுமே யற்று வாழ்க!
வெள்ளையர் கறுத்தோரென்ற
    வேற்றுமை தனுமே நீங்கி
எல்லையில்லாத அன்பை
    என்றுமே சொரிந்து வாழீர்!

சிந்தனை தனிலே தூய்மை
    செயல்களில் என்றும் மேன்மை
கொண்ட நல்லடியார் கூட்டம்
    குறைவிலாதென்றும் வாழ்க!
அன்பெனும் நெய்யை யூற்றி
    அருளெனும் விளக்கையேற்றி(ப்)
பொய்மையே மனதிற் கொள்ளா(ப்)
    பூவுலகோரே வாழீர்!

**கவிஞர் நாகராஜன் சந்திப்பும் அந்தாதிப் பிரசுர ஆரம்பமும்**

அடியேன் துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு செல்லும் வேளைகளில் இளைஞன் நாகராஜன் அவர்கள் பக்தியுடனும் உணர்ச்சியுடனும் துர்க்கை அன்னையைப் பாடி மகிழ்ந்த காட்சி என் நெஞ்சத்தை இளகவைத்துவிட்டது. மேலும் படிப்படியாக அவருடன் உரையாடத்தொடங்கி அவருடைய உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்துப் பாய்ந்துகொண்டிருந்த ஆன்மீக நதியில் மூழ்கி மனம் குழைந்தேன். இப்படியான சந்திப்புக்கு முன்னர் கவிஞர் கூடலூர் நாகராஜனை நான் சந்தித்ததேயில்லை. அன்னையின் அந்தாதியை நாகராஜன் அவர்கள் பாடியுள்ளார், ஆனால் அதைச் சீர்படுத்தி வெளியிட உதவியற்று நிற்கின்றார் என்பதை அறிந்தவுடன் என் மனம் நொந்தது. என்னுடைய நல்ல கண் ஒன்றில் சந்தர்ப்பவசமாக சத்திர சிகிச்சையில் பார்வை குறைந்தமையும் சென்ற சில ஆண்டுகளாக இருதய நோயுற்று உடல் நலம் இழந்த நிலையும் முது வயதில் காது கேட்பது குறைந்தமையும் கண்ணில் ஒளியிழந்த இளைஞன் நாகராஜனின் மன நிலையை நன்கு உணர வைத்துவிட்டன. என்னை அறியாமலே அன்னையே! எனக்கு ஒரு கண் பார்வை குன்றவும் முதுமையில் உடற்பெலம் குறைந்து வரவும் என் வாழ்க்கையை நடத்துகிறேன், நீ இவ்விளைஞனுக்கு ஒரு கண்ணிலாவது பார்வையைக் கொடுக்க வேண்டாமா என்று அன்னையை வேண்டிப் பின்வரும் பாடலைப் பாடினேன்:

**அகக்கண்ணால் அன்னையைக் கண்டோன்**

அகக்கண்ணால் உனைக்கண்டு
    ஆனந்தத் தாண்டவமாடி
என்றுமுன் சந்நிதி நாடும்
    ஏழை ஒருவனைக்கண்டேன்
அவன் புறக்கண்ணில் ஒளியின்றி
    அன்னையுன் எழில்காண
ஏம்பலுற்று நின்றதையும்
    ஏழை ஒரு நாள் கண்டேன்

ஏனம்மா இக்கொடுமை
    ஏகாம்பரன் உமையே
போனதெல்லாம் மறந்துவிட்டு
    புதுவாழ்வு கொடுத்துவிடு
தேவிபராசக்தியவள்
    திருவுருவே என் தாயே
ஆதி பரம்சோதியவன்
    அன்னையுமே நீயன்றோ!

ஏழையென் இருவிழியே!
    ஏகாம்பரன் உமையே!
பாவியெனக்(கு) இருவிழிகள்
    பாரினில்தான் வேண்டிடுமோ?
ஒருவிழியே போதுமம்மா
    உன் அழகை நான் பார்க்க
பாரில் அவன் ஓர்விழியில்
    பார்வைதனும் அருளாயோ?

எங்கேதான் உன் கருணை?
    என்றே மனம் நொந்தேன்
அப்பனவன் பாகமாம்
    அன்னை துர்க்கையே தாயே
எப்போது அவனுந்தன்
    எழில் பார்த்து மனமாறும்
பக்குவம் தனையளித்(து) உன்
    பக்தனுக்கு அருள்வாயோ?

இப்பாடலை கவிஞர் நாகராஜனுக்கு வாசித்துக்காட்டி அவருக்கு நான் இப்பாடலை இயற்றியதில் ஆட்சேபனை எதுவும் இல்லையெனவும் அறிந்தேன். பார்வை இழந்த இக்கவிஞனுக்கு என்னால் இயன்றன செய்து அன்னையின் அந்தாதியை வெளியிட அன்றே முடிவுசெய்துவிட்டேன். அன்னை என்னையும் தன் அடியவனாக்கி விட்டாள். இதன் விளைவே கனகதுர்க்கை அந்தாதியாகும்.

நாகராஜன் அவர்கள் ஒரு உணர்ச்சிக் கவிஞன். அன்னையின் புகழைப் பாடும் கவிஞனின் உள்ளத்தில் ஊற்றெடுத்துப்பாயும் பாடல்களில் இலக்கிய முறைகளைத் திட்டவட்டமாக எதிர்பார்ப்பது தவறு என்பது என் கருத்து. நாகராஜன் அவர்கள் கனகதுர்க்கை அந்தாதியை பல மன நிலைகளில் இருந்து பாடியிருப்பதை வாசகர்கள் தெரிந்து கொள்ள முடியும். அன்னையின் மடியில் தவழும் சேயாகவும் அன்னையின் அழகைப்பார்த்துப் பூரிக்கும் காதல் கண்களுடனும் அன்னையைப் போற்றுங்கள் என்று அடியார்களை அழைக்கும் போதகனாகவும் பல நிலைகளில் நின்று பாடியது அந்தாதிக்கு அழகைக்கொடுக்கின்றது. அன்னையின் புகழை அடியார்கள் பாடக் கட்டுப்பாடுகள் எதுவும் வேண்டுமா? இவ்வந்தாதியில் வரும் பாடல்களுக்கு நாகராஜன் அவர்களே கருத்துரையையும் இணைத்துள்ளார். இது வாசகர்களுக்கு ஒவ்வொரு பாடலின் உதயத்தையும் அதன் ஆன்மீக விளக்கத்தையும் வெளிப்படுத்துவதாக இருக்கக் காணலாம். கவிஞனின் பேச்சு நடையிலேயே இக்கருத்துரை அமைந்துள்ளது.

கவிஞர் நாகராஜனுக்கு அன்னையின் புகழைப் பாடுவதற்கு அன்னையே கனவுகளில் வந்து அடியெடுத்துக் கொடுத்தமையை வாசகர்கள் பல இடங்களில் காணமுடியும். கவிஞர் காலன் எனைக்கொண்டு செல்லவரும் வேளை அன்னை சிவபெருமானுடன் வந்து காட்சி தரவேண்டும் என்றும் அப்போதைக்கு இப்போதே உரிமையுடன் சொல்லி வைப்பதும் பாடல் இலக்கியத்திற்கு ஒரு புதுமையைச் சேர்த்துள்ளது. பல தடவை அவரின் பாடல்களையும் விளக்கங்களையும் அவருடன் இருந்து பதிவு செய்யும் வேளைகளில் அவருக்கும் அன்னைக்கும் இடையில் தோன்றும் உறவுமுறையைக் கண்டு அதிசயித்து அன்னையிடம் வேண்டுதல் செய்கின்றீரோ அல்லது உரிமை பேசிக் கட்டளையிடுகின்றீரா? என்று நான் கேட்பதுண்டு. அந்தாதியின் நூறாவது பாடல் பதிவு செய்து கொண்டருக்கையில் நாம் உணர்ந்த அன்னையின் அற்புதம் ஒன்றை நூறாவது பாடலின் கருத்துரையில் வாசகர்கள் காணலாம். ஆலயத்தில் அதிசயமாக மறைந்த அந்த

வழித்தடி இன்றுவரை கவிஞர் நாகராஜனிடம் வந்து சேரவில்லை என்பதையும் கூறிப்பிட விரும்புகிறேன்.

இவ்வந்தாதியை அச்சிட்டு வெளியிட உறுதுணையாக நின்று உற்சாகமூட்டி உதவி செய்த முதியோர் பேரவை செயற்குழு அங்கத்தினருக்கும் ஆலய நிர்வாக சபையினருக்கும் எனது நன்றியைக் கூற விரும்புகின்றேன். மேலும் இவ்வந்தாதியை அச்சிடுவதற்குமுன் சீர்பார்த்து உதவிய அனைவருக்கும் குறிப்பாக எனது நண்பனும் குருவுமான புலவர்மணி அமுதுவுக்கும் ஆலய முதியோர்சபைத் தலைவர் திரு பத்மலிங்கம் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

வாழ்க தமிழ்! வாழ்க சைவ நெறி ! வாழ்க சைவ நீதி !

**கந்தையா இராஜசிங்கம்**
**(சீமைராஜன்)**
**இலண்டன்**

## அணிந்துரை

**ஈழத்துக் கவிஞர் திலகம் புலவர்மணி செந்தமிழ்ச் செல்வன் செவாலியர் இளவாலை அமுது அவர்கள் வழங்கியது**

நாடெலாம் சைவச்சான்றோர்
நாவினில் அன்னை என்றே
தேடியே போற்று கின்ற
திருநிறை அம்மன் பாதம்
ஈடிலா அன்பி னோடு
இதயத்தில் ஏற்றிப் போற்றும்
கூடலூர் நாகராசன்
கூறிடும் கவிதை கேளீர்!

கண்ணொளி இழந்த போதும்
கருத்தினில் கனகதுர்க்கை
பெண்ணினில் பேறு பெற்ற
பேரருட்செல்வி யென்று
எண்ணத்தில் நெய்யை ஊற்றி
எரிந்திட ஒளியை ஏற்றி
விண்ணவர் வியக்கு மாறு
விரித்த அந்தாதிப் பூவே!

அடியார்க்கும் அடியா னாகி
அம்மனின் தாளைக் கண்டு
படியினில் என் தாய் என்று
பற்றினால் இறுகக்கட்டி
மடியினில் அருட்பால் உண்டு
மதியினில் புலவ னாகி
விடியலை எமக்குக் காட்ட
விளக்கிடும் கவிகள் வாழி!

சொல்லொடு பொருளும் இன்பச்
 சுவைகளால் தேனின் கூடு
அல்லொடு பகலும் அம்மன்
 அருளிலே வரைந்த ஏடு
நெல் வயல் மணிகள் வீடு
 நெஞ்சிலே கட்டும் கூடு
மல்லிகை நாகராசன்
 வரைந்ததைத் தேடி ஓடு.

**இளவாலைப் அமுது**
**இலண்டன்.**

# அணிந்துரை

## கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாக சபைத் தலைவர் திரு சொ. கருணலிங்கம் அவர்கள் வழங்கியது

எமது ஆலயத்தில் எழுந்தருளி என்றும் அடியார்க்கு அருள் பொழியும் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனுக்கு கண்ணொளி இழந்த கவிஞன் நாகராஜன் அன்னையின் புகழை அந்தாதியாகப்பாட அப்பாடல்களைச் சேர்த்து சீர்பார்த்து ஆலய முதியோர் சபையினர் அந்தாதியாக அச்சிட்டு வெளியிட்டமை இவ்வாலய நிர்வாகத்திற்கும் அடியார்களுக்கும் அளவிலா ஆனந்தத்தையும் பெருமையையும் கொடுக்கின்றது. கவிஞன் நாகராஜனும் அவர் குடும்பத்தினரும் பல்லாண்டு வாழ்ந்து அன்னையின் அருளைப் பெறுவார்களாக.

இவ்வந்தாதியை வெளியிட முன்வந்து இவ்வந்தாதி வெளியீட்டுக்கு ஆவன யாவையும் செய்து இவ்வந்தாதியை வெளியிட்ட ஆலய முதியோர் பேரவைக்கும் இவ்வந்தாதியை அச்சிடமுன் சீர்பார்த்தும் பல உதவிகளை வழங்கியும் உதவிய இளைஞர் பேரவையினருக்கும் ஆலய நிர்வாகத்தினரின் நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கவிஞன் நாகராஜனின் விருப்பத்தின் படி இவ்வந்தாதி வெளியீட்டால் சேரும் நிதி முழுத்தொகையும் என்றுமே தமிழ் ஈழத்தில் வாழும் கண்பார்வை இழந்தோர்களினதும் கண்பார்வை குறைந்தவர்களினதும் பராமரிப்பிற்காக அணைக்கும் கரங்கள் அறக்கட்டளை மூலம் பயன் படுத்தப்படும் என்பதை அடியார்களுக்கு உறுதிப்படுத்த விரும்புகின்றேன். இந்நூலை வரவேற்று உதவி அன்னையின் அருளை அடியார்கள் என்றுமே பெறுவார்கள் என நம்புகின்றேன்.

அன்னையைச் சரணடைந்து அதிகவரம் பெற்று வாழ்க!

**சொ. கருணலிங்கம்**
**இலண்டன்**

# அணிந்துரை

## ஆலய முதியோர் பேரவைத்தலைவர் திரு.அ.பத்மலிங்கம் அவர்கள் வழங்கியது

வாழ்க்கையில் முன்னேறிய ஒவ்வொரு ஆண்மகனுக்குப் பின்னும் ஒரு பெண்மணி இருப்பாள் என்ற ஆங்கிலப் பழமொழியை நாம் கேட்டிருப்போம். அதே போலவே உலகில் வாழும் ஆன்மாக்கள் யாவையும் சீர்படுத்தித் தன்னுடன் இணைத்து பிறவா வரமாம் பேரின்பத்தைக்கொடுத்து அருள்புரியும் எம்பெருமான் ஒரு பெண்மணியை வைத்திருக்கின்றான் என்பது இதிகாசங்கள் கூறும் உண்மை. அப்பெண்மணி அவன் பின்னாலும் இருக்கவில்லை, பக்கத்திலும் இருக்கவில்லை. அவனுக்குள்ளேயே இருக்கின்றாள். அவன் சக்தியே அவள். சக்தியும் சிவனும் ஒன்றே என்பதின் விளக்கமும் இதுவே. இப்படியான மாபெரும் சீமாட்டியே எமது ஸ்ரீ கனகதுர்க்கை அன்னையாவாள். அண்டங்கள் யாவையும் அசைத்து ஆன்மாக்கள் யாவுக்கும் ஆவன செய்து அருள்புரியும் அன்னைக்கு கவிஞன் கூடலூர் நாகராஜனவர்கள் அந்தாதி பாட அதனை ஆலய நிர்வாகத்தினதும் இளைஞர் பேரவையினதும் அடியார்களினதும் உதவியுடனும் வெளியிடுவதில் முதியோர் பேரவை மகிழ்ச்சியடைகிறது. அந்தாதியை வெளியிட உதவிய யாவருக்கும் குறிப்பாக வெளியிடுவதற்கான நிதி உதவிய "வெம்பிளி வெஸ்ரன் ஜூவெல்லர்ஸ் & ரெக்ஸ்டைல்ஸ்" ஸ்தாபன உரிமையாளர் திரு வே.சிவசுந்தரம் அவர்களுக்கும் அந்தாதியை ஒன்று சேர்த்துச் சீர்பார்த்து வெளியிட உறுதுணையாக நின்று உதவிய கவிஞர் கந்தையா. இராஜசிங்கம் அவர்களுக்கும் இவ்வந்தாதியில் உள்ள அன்னையின் படங்களைத் தயாரித்துத் தந்து உதவிய திரு. பொ. இராமச்சந்திரன் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். அன்னை நினைத்ததை முடித்தே தீருவாள் என்பதற்கு இந்த அந்தாதி ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது. அடியார்கள் அனைவரும் இவ்வந்தாதியை வரவேற்று உதவி கனகதுர்க்கை அம்மனின் புகழைப்பாடி அம்மனின் அருளைப்பெற வேண்டுகின்றேன்.

வணக்கம்

**அ. பத்மலிங்கம்**

இலண்டன்

# அணிந்துரை

**முதியோர் பேரவைச் செயலாளர் Dr. நா.சுப்பிரமணியம் அவர்கள் வழங்கியது.**

கவிஞர் கூடலூர் நாகராஜன் அவர்களைப் பல ஆண்டுகளாக அன்னையின் சந்நிதியில் சந்தித்துள்ளேன். அவருடைய கடவுள் பக்தியினையும் கண்பார்வையற்ற நிலையிலும் அன்னார் ஆலயத்திற்கு தவறாது வந்து கண்ணீர்மல்கி அருட்பாக்களைப் பாடி அன்னையை வழிபடுவதையும் பலதடவை கண்டு மனம் குழைந்தேன். பல ஆண்டுகளாக அவர் அந்தாதியை எழுதி வைத்திருந்தும் வெளியீடு செய்ய உதவியற்று நின்ற நேரத்தில் எமது முதியோர் பேரவையினால் இதனை வெளியிட வழிவகுத்து தனது உடல் நலத்தையும் கருதாது ஆவன செய்து உதவிய திருவாளர் கந்தையா இராஜசிங்கம் அவர்களுக்கு ஆலய முதியோர் சபையின் நன்றியினைத் தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் அந்தாதியை வெளியிட உதவிய அடியவர்களுக்கு முதியோர் பேரவையின் நன்றியைக் கூறி இவ்வந்தாதியை வரவேற்று கண்பார்வை இழந்த எமது உறவுகளுக்கு உதவி அன்னையின் அருளைப் பெறுமாறு வேண்டுகின்றேன்.

மக்கள் சேவையே மகேசன் சேவை

நன்றி வணக்கம்

**நா.சுப்பிரமணியம்**

**இலண்டன்**

# அணிந்துரை

## ஆலய இளைஞர் சபை தலைவர் திரு. செ.ஜெகதீஸ்வரன் அவர்கள் வழங்கியது

கண்பார்வையினை இழந்திருந்தும் மன நிலை சிறிதும் தளம்பாது எமது ஸ்ரீ கனக துர்க்கை அன்னையைச் சரணடைந்து கனகதுர்க்கை அன்னைக்கு அந்தாதி பாடி இங்கு இடம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அனைவோருக்கும் ஈலிங்குப் பகுதிக்கும் அருள்மணம் தந்தருளிய அண்ணர் கவிஞர் நாகராஜனுக்குஆலய இளைஞர் சபையின் பாராட்டையும் மனமார்ந்த நன்றியையும் பெருமையுடன் தெரிவிக்கின்றேன். மேலும் அந்தாதிப் பாடல்களை ஒன்று சேர்த்து சீர்பார்த்து அச்சிட்டு அன்னையின் அடியார்களுக்கு வழங்கிய ஆலய முதியோர் சபைக்கு எமது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். எமது முதியோர் சபையின் சேவையைப் பாராட்டுவது மன்றி அவர்களுக்குத் தொடர்ந்து வேண்டிய உதவிகள்புரிவதிலும் இளைஞர் சபை பெருமைப்படுகிறது. அடியார்கள் இவ்வந்தாதியை அன்புடன் வரவேற்று உதவி அன்னையின் அருளைப் பெறுமாறு தயவுடன் வேண்டுகிறேன்.

வணக்கம்

**செ.ஜெகதீஸ்வரன்**

**இலண்டன்**

# அணிந்துரை

## ஆலய அறக்கட்டளைத் தலைவர் திரு ச. பிரேமச்சந்திரா அவர்கள் வழங்கியது

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் முதியோர் பேரவை கூடலூர் நாகராஜன் அவர்களுக்கு வேண்டிய உதவிகள் பலவும் செய்து இவ்வந்தாதியை வெளியிடுவது எமக்கு அளவில்லா மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. நாகராஜன் அவர்கள் இவ்வந்தாதி வெளியீட்டால் அடியார்கள் நன்கொடைகள் மூலம் வரும் நிதி முழுவதையும் ஆலய அறக்கட்டளை மூலம் கண்பார்வை இழந்து அவலமுறும் ஈழமக்களின் பராமரிப்புக்காக அன்னையின் அணைக்கும் கரங்கள் மூலம் கொடுத்து உதவ இணைந்தமைக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். அடியார்கள் இவ்வெளியீட்டை வரவேற்று உதவி அன்னையின் அருளைப்பெற வேண்டுகின்றேன்

நன்றி வணக்கம்
**ச.பிரேமச்சந்திரா**
இலண்டன்

# ஆசி உரை

**ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய சிவாச்சாரியார்கள் வழங்கியது**

கவிஞர் கூடலூர் நாகராஜனவர்களின் அம்பாளிடமுள்ள எல்லையற்றபக்தி எமது இதயங்களை இளக்கிவிட்டது என்பது அடியார்கள் யாவரும்அறிந்ததே! அவர்கள் கண்பார்வை இழந்த நிலையிலும் தவறாது ஆலயத்தில் வந்து பலதடவை அந்தாதிப்பாடல்களை மனமிளகப் பாடுவதைக்கேட்ட அடியார்கள் இப்பாடல்கள் அந்தாதியாக வெளிவருவதைஆவலுடன் வரவேற்பார்கள் என்பது எமது நம்பிக்கை.

எமது இறையருள் பெருகப் பல ஆன்றோர்கள் பல நூல்களை எமக்கு அளித்துள்ளார்கள். காலத்திற்குக் காலம் குறிக்கப்பட்ட தெய்வங்களுக்கு ஒரு சில அடியார்கள் பல பாடல்கள் பாடி உள்ளனர். அவ்வாறான பாடல்களுக்கும் இறையருள் அவர்களுக்குத் துணையாக நின்று உதவியுள்ளது. இவ்வாறான வரிசையில் ஞானக்கண் பொருந்திய கூடலூர் நாகராஜன் அவர்கள் ''கனகதுர்க்கை அந்தாதி'' என்னும் நூலை இயற்றியுள்ளார். இவர் இயற்கையாகவே மனமுருகிப்பாடும் பண்புடையவர். இவர் கலியுகப்பட்டர் என வாழ்த்தக்கூடிய வரிசையில் உள்ள அருந்தவப் பெரியார் என்பது எமதுஆலய சிவாச்சாரியார்கள் யாவரினதும் திடமான நம்பிக்கையாகும். எனவே அவர்பல்லாண்டு வாழ்ந்து பல பாடல்களை இயற்றிப் பணிபுரிய ஆசி கூறுகிறோம்.

சிவாச்சாரியார்கள்
**ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்**
இலண்டன்

### விநாயகர் துதி

அன்று பிறந்தது இந்தக்கன்று எனினும்
இன்று காண்பது அந்தக்கன்று என~ நற்குஞ்சரக்
கன்றை நாடினால் கலைஞானம் கற்குமுன்
நன்றாய்க் கசடறக் கைவரப்பெறுமே.

**கருத்துரை**

காலத்தின் முன்பக்கமாக புராணயுகத்திலே அவதாரமாகத் தோன்றிய விநாயகனே! அன்று நீ தோன்றியிருந்தாலும் இன்றும் உன் திருவுருவில் நீ எழுந்தருளி இருக்கின்றாய் என்ற நம்பிக்கையுடன் உன்னை வணங்கும் அடியார்களுக்கு கல்வி கலை ஞானங்களை கஷ்டப்பட்டு கற்காமலே அவர் சிந்தையுள்ளே தெளிவாக கைவரப்பெறுமே. இதை ஔவையாரும் வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள் நோக்குண்டாம் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் அடியேன் கனகதுர்க்கை அந்தாதியைப் பாடுவதற்கு முன்பே விநாயகப் பெருமானைத் தொழும் போது கண்பார்வை இழந்த என் நிலையில் புராண இதிகாச நூல்களையோ வரலாறுகளையோ கொஞ்சமும் படித்திலேன் என்று நெஞ்சுருகி நிற்கும் போது அன்று என் தந்தையார் பாட நூலில் உமாபதி சிவாச்சாரியார் எழுதிய திருவருட்பயனின் விநாயகர் துதியில் "நற்குஞ்சரக்கன்று" என்ற குறள் சொல்லி விளக்கியதைத் தோற்றமாகக்கொண்டு இப்பாடல் உதயமாகியது. இதை எப்போதும் விநாயகப் பெருமானுக்குப் பாடப்பாட என் அறிவு பெருகுவதை உணர்ந்தேன்.

# கனகதுர்க்கை
# அந்தாதி





ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய விநாயகர்

## விநாயகர் காப்பு

தாரமர் கொன்றையும் திங்களும் கங்கையும் பாம்பும் அணி
வார்சடையோன் வாம பாகத்து உமை மகிழ் மைந்தனவன்
சீர்பெருக்கும் கனகதுர்க்கை அந்தாதி என் சிந்தைதனில்
பார்புகழும் கணபதியே முன்வந்து நிற்கக்கட்டுரையே!

<u>கருத்துரை</u>

கொன்றை மலரையும் சந்திரனையும் கங்கையையும் பாம்பையும் சிரசில் அணிந்த வார்சடையோனாம் சிவபெருமானின் வலப்பாகம் உறையும் உமையாள் மகிழ்ந்து பெற்ற மைந்தனே! அட்டலட்சுமி கடாட்சமும் சீரும் பெருக்கும் இக்கனகதுர்க்கை அந்தாதி எப்போதும் சிந்தையுள்ளே நிற்க வேண்டி பார்புகழும் தெய்வமே உனைப்போற்றிக் கட்டுரை தொடங்குகின்றேன். இப்பாடலில் கட்டுரை என்ற பதம் இறைவியின் புகழைச் சொல்லி முடிக்காதவாறு தொடரந்து கட்டுக்கட்டாக எழுதிக்கொண்டே போகலாம் என்ற அளப்பரிய தன்மையை உணர்த்துகிறது. ஆயிரம் நாக்கொண்ட ஆதிசேடனால் சொல்லி முடியாத அன்னையின் புகழை காலத்தின் அளவிற்கு ஏற்ப சுருக்கமாகவே கூறுகிறேன்.

பாடல்: 1

## எல்லா ஜீவன்களிலும் அருட்சுடராய் உறைந்த அன்னையே!

உதிக்கின்ற செங்கதிர் கோடியும் உந்தன்ஒளிர்திருமேனியாகும்
அதில் ஒளிர் சிறு செங்கதிரே எந்தன் உயிராகும் அன்றோ
வதிக்கின்ற உயிர்கட்கு எல்லாம் தாயாக நிற்கும் தயாபரியே
துதிக்கின்ற நெஞ்சினுள்ளே உதித்திடு துர்க்கா பொன்றாதே!

<u>கருத்துரை</u>

கோடி சூரியப் பிரகாசமுடைய பராசக்தியே! நீ பரமாத்மாவாக நிற்க அதில் ஒரு கதிர்போல் வந்து என் உயிருடன் கலந்து என் ஜீவாத்மாக வந்து நிற்கின்றாயன்றோ! இவ்விதம் ஒரு சூரியனிலிருந்து பல கோடி கதிர்கள் விரிந்து இருப்பதுபோல் உலகில் பரந்திருக்கும் ஜீவன்களினதும் ஆத்மாக்களாக நீ கலந்து இருப்பதால் எல்லா உயிர்கட்கும் நீ தாயல்லவோ! உன்னை மெய்யுருகத் துதிப்போர் நெஞ்சில் எப்போதும் உதித்திடுவாய் என் அன்னையே! ஆதி சங்கரரின் அத்வைதகோட்பாட்டின்படி எல்லா ஜீவன்களுக்கும் இறைவன் ஆத்மாவாக விளங்குகின்றான் என்ற உண்மைவெளிக் காட்டி நிற்கின்றது. மேலும்இதையே திருமூலரும் "ஒன்று கண்டீர் உலகிற்கு ஓர் உயிராவதும்" என்றுகுறிப்பிட்டுள்ளார். ஸ்ரீ பகவத் கீதையும் இதனையே எமக்குக் கூறுகின்றது.

பாடல்: 2

## என்னை பக்குவப்படுத்தி
## ஆட்கொண்ட அன்னையே!

பொன்றாது துர்க்காதேவி என் நெஞ்சினுள்ளே உதித்துவிட்டால்
குன்றாது எந்தன் முகம் ஒளிவீசும் எந்நாளும் பௌர்ணமி போல்
நன்றாக நீ என்னைச் சமைத்து விட்டாய் விறகெரித்து அமுதமுமாய்
அன்பான அருளமுதம் நெஞ்சினுள்ளே ஊற்றாக ஊறிடுமே!

<u>கருத்துரை</u>

துர்க்காதேவியே! நீ நெஞ்சினுள்ளே உதித்துவிட்டால் எப்போதும் எந்தன் முகம் பூரண சந்திரனைப் போல் என்றுமே ஒளி குறையாது பிரகாசிக்கும் அல்லவோ! மேலும் என்னை நெறிப்படுத்திப் பக்குவப்படுத்தி அமுதம் போல் சமைத்து விட்டால் எப்போதும் என் நெஞ்சினுள்ளே அருளும் அன்பும் கருணையும் நிறைந்த எண்ணங்களும் கருத்துக்களும் கேட்போர்க்கு அமுதம் போல சுவையாக ஊற்றுப் போல் ஊறிவருமே! அன்னையின் அருளை நினைக்கும் போது குண்டலினி சக்தியானது இதய தாமரையாகிய அனாகதத்தில் வரும்போது என்னை அறியாமலே எனக்குள் அருள் ஞானக் கருத்துகள் உருவாகுவதையும் அவை பொங்கிப்பாய்ந்து வெளிவருவதையும் உணர்கின்றேன்.

பாடல்: 3

## அன்னையிடம் சரணடைவோம் வாரீர்

ஊறிடுமே அருளமுதம் எந்நாளும் நெஞ்சினிலே நிறைவதனால்
கூறிவிடத் துடிக்கின்றேன் குவலயத்தில் உள்ளவர்க்கு உண்மைகளை
தேறிவிட ஓடிவந்து தேவி பராசக்தி உன்னை சரணடைந்தால்
ஆறிவிட அன்னையவள் அருள்வழியை என்றுமே காட்டிடுவாளே!

**<u>கருத்துரை</u>**

அம்மா! எப்போதும் முன் ஒருபோதும் இல்லாதவாறு என் உள்ளத்தில் உன் அருள்நிறைந்த கனிமொழிகள் அமுதம்போல் நிறைவதை உணர்கின்றேன். மேலும் அங்குமிங்குமாக முணுமுணுக்க அமுதமொழிகள் ஊறி நிறைவதையும் உணர்கின்றேன். ஆதலினால் அவற்றை உலக மக்களுக்கு கூறிவிடத் துடிக்கின்றேன். வாருங்கள்!வாருங்கள்! ஓடிவந்து அன்னை பராசக்தியிடம் சரணடையுங்கள். அவள் உங்கள் மனக்கஷ்டங்களையும் துன்பங்கள் அனைத்தையும் நீக்கிவிட அருள் விழியால் அருள் வழி காட்டிடுவாள்.

பாடல்: 4

## பட்டர் கண்ட பவுர்ணமியை மன்னனுக்கு காட்டிவிட்டாள் எமதன்னை!

காட்டிவிட்டாள் சரபோஜி மன்னனுக்கும் நிஜ இரவில் முழுமதியைக்
கூட்டிவிட்டாள் பட்டருக்கோ தன்னடியார் அவள் தாழ் பணிய
ஊட்டிவிட்டாள் அருட்பாலை அழுதபிள்ளை எழுந்திருந்து பாட்டிசைக்க
ஆட்டிவிட்டாள் நாடகங்கள் அவைகளுக்கோ என்றுமே எல்லையில்லை!

<u>கருத்துரை</u>

அன்று அபிராமி பட்டர் ஞான பிரகாசத்தை தரிசித்துக் கொண்டு இருக்கும்போது சரபோஜி மன்னன் வருவதை அறியாதிருக்க அவர் திதியைக் கேட்க பூரண பிரகாசம் இன்று என்று சொல்ல அரசன் பொய்சொல்லியதாக அவரைத்தண்டிக்க அன்னை அரசனுக்கு முழுமதியைக் கனவில் காட்டி அரசனோடு மக்கள் யாவரும் பட்டரை வணங்கி புகழ அருள்செய்தாய். மேலும் சம்பந்தர் பெருமான் மழலையாய் அழுத பொழுது ஞானப்பாலை ஊட்டி அழுத பிள்ளையை தேவாரம் பாடவைத்தாய். இவ்வாறு நீ செய்யும் அருள் நாடகங்களுக்கு அளவே இல்லை. இங்கு அன்னையின் அருள் பெற்ற அடியார்கள் வரிசையில் இந்த அதிசயத்தினால் அபிராமி பட்டரையும் சேர்த்து மக்கள் எல்லோரும் அவரைப் போற்றத்தக்க உயர்ந்த நிலையைக் கொடுத்து ஆட்கொண்டாய். இதை அபிராமி பட்டரே அபிராமி அந்தாதியில் "கூட்டியவா என்னைத்தன் அடியாரில்" என்று குறிப்பிட்டதை காணலாம்.

பாடல்: 5

## குழந்தையாய் பொற்சிலையுடன் கனவினில் அன்னை காட்சியளித்தாள்.

எல்லையில்லா ஆனந்தம் எனக்(கு) அளித்த கனவிதுவே
பொல்லாத சுந்தரி கனகதுர்க்கை பொற்சிலை காட்டி அதில்
சொல்பேசும் குழந்தையாய் விளையாடி மின் இணையும் காட்டி
கல்லாதெனக்கு அருள்மறையைக் கனவில் புகட்டி நின்றிட்டாளே!

<u>கருத்துரை</u>

எல்லையில்லா ஆனந்தம் தரும் கனவொன்று தந்தாய் அம்மா! கனவிலே மழலை பேசும் சின்னஞ்சிறு பெண் குழந்தையாகப் பொல்லாத அழகுடைய பொற்சிலையையும் பத்மாசனத்தில் அம்பிகையின் முன்னால் அமர்ந்திருக்கும் பட்டரையும் மின்கலமாம் ஆதிபராசக்தியுடன் இணைத்துக்காட்டி அவற்றை ஒரு தெர்ப்பைப் புல்லினால் மின் சுணையைப் பூர்த்தி செய்து பொற்சிலையின் முகத்தில் பூரண பிரகாசம் தோன்ற அடியேன் விழித்து விட்டேன். இவ்வானந்தக் கனவினால் சிந்தனையை வளர்த்து கல்லாத ஏழைக்கு அருள்மறைகளைப் புகட்டி நின்றாய் அல்லவோ! மேலும் இக்கனவு எல்லாத் தெய்வங்களும் ஒன்று சேர்ந்த ஆதிபராசக்தியே மின் இணைப்பால் இணைந்தது போல இருந்து ஒவ்வொரு தெய்வங்களுக்கூடாக அருள்புரிகிறாள் என்ற உண்மையை விளக்குவதாகவும் அமைகிறதன்றோ!

பாடல்: 6

## பசு கன்றுகளை அணைப்பதுபோல் அன்னை அடியாரை அணைத்து அருள்கொடுப்பாள்

நின்றிடுவாள் கனகதுர்க்கை அடியாரை எதிர்பார்த்து
கன்றுகள் போல் அடியாரும் ஒவ்வொன்றாய் வந்திடுவார்
ஒன்றாகச் சேர்ந்துவிட்ட குழந்தைகளாம் அடியார்க்கு
நன்றாக ஊட்டிடுவாள் அன்னையவள் அருட்பாலன்றோ!

<u>கருத்துரை</u>

கனக துர்க்கை ஆலயத்தில் அடியார்களை எதிர்பார்த்து நிற்பாள். அடியார்களும் பல திசைகளிலும் இருந்து கன்றுகள் போல் வந்து சேருவார்கள். கூட்டமாக நின்று பரவசமாக வணங்கும் அடியார்களை தன் குழந்தைகள் என்று அணைத்து அருட்பாலை ஊட்டி நிற்பாள் அன்றோ என் அன்னை! ஆலயக் கருவறையில் அலங்காரமாக அன்னை நிற்கும் காட்சி தன் குழந்தைகளை எதிர்பார்த்து நிற்கும் தாய் போன்றகாட்சியை அடியார்களுக்குத் தருவதாக அமைகின்றது.

பாடல்: 7

## அடியாரும் பாலினால் அபிஷேகம் செய்து
## திதி நாட்களில் ஊஞ்சலிலாட்டி
## அன்னையை மகிழ்விப்பார்

அருட்பாலைச் சுரக்கின்ற அன்னைக்கும் பால்மணமாம்
உருக்கமுடன் ஊற்றிடுவார் பாற்குடங்கள் அடியார்கள்
வரும் ஆண்டுத்திதனிலும் இனிதேயுன் மனம் மகிழ்ந்து
அருள் ஊஞ்சல் ஆடும் என் கனகதுர்க்கை அம்பிகையே!

**கருத்துரை**

இவ்வாறு அருட்பாலை சொரிகின்ற அன்னைக்கு பால் மணமாம் என்று சொல்லி அடியார்கள் பக்தியுடன் நெஞ்சுருகி பாற்குடங்களை ஆயிரமாயிரமாய் சொரிந்து அபிஷேகம் செய்து பரவசமடைகிறார்கள். இவ்வாறு அபிஷேகங்கள் செய்து அடியார்கள் சூழ்ந்திருக்க பரிவார மூர்த்திகளுடன் அருள்தரும் ஆனந்த ஊஞ்சல் ஆடி மகிழ்வாய் கனகதுர்க்கை அம்பிகையே! இவ்வாறு கும்பாபிஷேகத் திதியில் அன்னைக்கு தம் மனமுருகி மேற்படி அபிஷேகம் செய்ததை அன்னை ஏற்று ஊஞ்சலாடிமகிழ்ந்தது போல அடுத்து வரும் திதியிலும் இவைகளை ஏற்று மகிழ்ந்து அருள்புரிய வேண்டுகிறேன்.

பாடல் 8

## அம்மா! நீ நம் இதயத்துள் உறைவதை அடியேனுக்கு காட்டினாயோ!

அம்பிகையே ஈஸ்வரியே எங்கள்அகிலாண்ட நாயகியே
கம்சனையே வதைக்க வந்த மாயவனின் சோதரியே
எம்மிதயம் காட்டிவிட்டு அதற்குள்ளே நிற்கின்றாய்
தம்மடியார் பார்த்திடவே கண்ணாடிக்கருவறையோ?

**கருத்துரை**

அம்பிகை, ஈஸ்வரி, அகிலாண்ட நாயகி என்று பல திருநாமங்களைக் கொண்டவளே! கம்சனை வதைக்க எட்டாவது அவதாரமாக கிருஷ்ணன் தோன்றிய போது அவருடைய சகோதரியாய் லோக மாயை நீ துர்க்கையாகத் தோன்றினாயல்லவோ! இதனால் உன்னை கண்ணனின் சகோதரி என்றும் கூறுகிறார்கள் அல்லவோ! மேலும் நீ மூலஸ்தானத்தில் திருவாசியுள் நிற்கும் காட்சி நீ எம் இதயத்துள் நிற்பது போல காட்சியளிக்கின்றது அல்லவோ! இது அடியார்கள் நாங்கள் எம் இதயத்துள் உனைப்பார்க்கும் கண்ணாடிக் கருவறையன்றோ!

பாடல்: 9

## திருவாசி எம்மிதயம் தேவியவள் நிற்குமிடம்

கருவறைக்குள் வந்துவிட்டாள் அருள் மிகு கனகதுர்க்கை
திருவாசி எம்மிதயம் அதற்குள்ளே தேவி நின்று ஆடுகின்றாள்!
இருள்மயமாம் மகிசனையும் அழித்து ஒளி வீசுகின்றாள்
அருள்மயமாம் சோதியவள் பிரகாசம் என்றுமே கண்டிடுவீர்

**<u>கருத்துரை</u>**

கருவறைக்குள் நிற்கின்ற துர்க்கா தேவியின் சொரூபத்தில் ஆதிபராசக்தியே 'மின் இணைப்புபோல்' வந்துவிட்டாய் அல்லவோ! எங்கள் இதயத்துள்ளும் நீபிரகாசிப்பதுபோல் உனைப் பார்க்கும்போதெல்லாம் தோன்றுகிறதே! எங்கள் நெஞ்சங்களிலுள்ள மாய இருளாம் மகிடனை அழித்து ஞானச்சுடராய் பிரகாசிக்கின்றாய். உன்னுடைய அருள்மயமான பிரகாசத்தை கண்டு ஆனந்தமடைவோம். சக்தி வழிபாடு பக்தர்களுடைய ஆணவத்தை நீக்கி அவர்களை அருள் வழிப்படுத்தி ஞான ஒளியைக்கொடுக்கும் என்பது எனது நம்பிக்கை. இதை அபிராமி பட்டரும் "என்மனத்து வஞ்சத்து இருள் ஏதுமின்றி ஒளி வெளியாக இருக்கும் உந்தன் அருள் ஏது" என்று வியந்து கூறுகின்றார்.

பாடல்: 10

## அம்மா! நீ கண்ணுக்குள் அடங்காத சோதியன்றோ!

கண்டுவிட்டால் அவள் சோதிமயம் கண்ணுக்குள் அடங்கிடுமா ?
உண்டுவிட்டால் அவள் அமுதம் போதுமென்று தெவிட்டிடுமா ?
எண்ணற்ற நினைப்புடன் ஏங்கிட அவள் அருள்தான் கிட்டிடுமோ?
பண்ணுடனே அந்தாதி பாடி என்றும் பெற்றிடலாம் அவள் அருளே

<u>கருத்துரை</u>

எவ்வளவுதான் அவளுடைய அருட்காட்சிகளை கண்டாலும் அவளது எல்லையில்லா பிரகாசத்தை கண்ணுக்குள் அடக்கிவிட முடியுமோ? எவளவுதான் அவள் அருளமுதத்தை உண்டாலும் போதும் போதும் என்று தெவிட்டிடுமோ? அதாவது மனம் களைக்காது மனம் அங்கும் இங்கும் ஏங்கி எண்ணற்ற பல நினைவுகளுடன் அம்பிகையை வேண்டி நின்றால் அவள் அருள் கிடைத்திடுமோ? ஆனால் பண்பட்ட மனத்துடனே அந்தாதி அருட்பாக்களால் அவளைப் புகழ்ந்து உருகி வேண்டினால் கட்டாயம் அன்னையின் அருள் கிடைக்குமன்றோ!

பாடல்: 11

## திருமகளும் கலைமகளும் மலைமகளும் பார்வதியும் சேர்ந்தவளே துர்க்கை அன்னை

அருள்தரும் ஆனைமுகன் ஆறுமுகன் அருகிருக்க
திருமகளும் கலைமகளும் மலைமகளும் ஒன்றாகத்
திருவுருவாய் அமைந்ததுவே கனதுர்க்கை பொற்சிலையாம்
வருகின்ற அடியார்க்கு வரங்கள் பல தந்திடுவாளே!

<u>கருத்துரை</u>

அருள் தரும் பொருட்டு வசந்த மண்டபத்திலே ஆனைமுகனும் ஆறுமுகனும் இரு மருங்கினிலும் இருக்க நடுவினிலே திருமகளும் கலைமகளும் மலைமகளும் ஒன்றாகச்சேர்ந்த அவதார சக்தியாய் அன்னை வீற்றிருப்பாள். வந்து வணங்கும் அடியார்களின் குறைகளை நீக்கி அருள் செய்ய ஆனந்த ரூபமாக அமைந்திருக்கும் காட்சி இப்பாடலை உதயமாக்கியது. இங்கு கனகதுர்க்கையானவள் மகிடனை வதம் செய்து மகிடாசுரமர்த்தனியாய் விளங்குவதால் பாலதிரிபுரசுந்தரியான மலைமகளும் திருமகளும் கலைமகளும் சேர்ந்து ஒரு திருவுருவாக அமர்ந்து அருள்கொடுக்கும் சக்தியாக அமைந்தது அன்னையின் அவதாரக்கோலம் ஆகும்.

பாடல்: 12

## அரனுக்கு முன்னிரங்கும் மின்கொடியாள்!

தந்திடுவாள் கனகதுர்க்கை பதினாறு செல்வங்கள் கோடி கோடி
சிந்திக்கும் அடியார்கள் அளிக்கின்ற அர்ச்சனைகள் ஏற்றவுடன்
முந்தியே வரம் கொடுக்க அரனுக்கு முன்னிரங்கும் மின்கொடியாள்
வந்திடுவாள் வழித்துணையாய் என்றுமே எம்முடனே விழிகள் வைத்தே!

<u>கருத்துரை</u>

மேலும் வசந்த மண்டபத்தில் பூசையின்போது அடியார்கள் தங்கள் உபசார அர்ச்சனைகளை செய்து சமர்ப்பிக்க அவை எல்லாவற்றையும் ஏற்று அப்பனுக்குமுன் இரங்கும் அன்னையாக இடிமுழக்கத்தின் முன் தோன்றும் மின்னலைப்போல விரைவாக அருள் தருவாள். மேலும் அடியார்களுக்கு அபிராமி பட்டர் சொன்னது போல் கல்வி செல்வம் வீரம் முதலான பதினாறு செல்வங்களையும் தருவாள். வணங்கிச்செல்லும் அடியார்களுக்கு அன்னை என்றும் விழிவைத்துத் துணையாக இருப்பாள் என்ற நம்பிக்கையுடன் அடியார்கள் மனநிறைவுடன் வீடு செல்வர்.



விழாக்கோலம் பூண்டு தேரில் உற்சவம் வரும்
ஸ்ரீ கனகதுர்க்கை அன்னை (பாடல் 13)

பாடல்:13

### விழாக்கோலம் பூண்டுவரும் அன்னை

விழி வைத்துக்காத்தருள அன்னையவள் விழாக்கோலம் பூண்டிடுவாள்
வெளிவீதி சுற்றிவரும் வேளைதனில் தேரிலவளை அடியார் பார்த்து
எழில் கொண்டு பாடுவார் ஆடுவார் மேளதாளம் முழங்கிடவே
அழியாத ஆனந்த மாமழையாயப் பொழியும் அவள் அருள்மாரியே!

**கருத்துரை**

அன்னை மக்களை விழி வைத்து காத்தருளும் பொருட்டு பல் வேறு விழாத்தினங்களை கொண்டாடவைத்து அடியார்களை கூட்டிவைத்து மேளதாளங்களுடனும் வேதபாராயணத்துடனும் பக்தி பண்ணிசையுடனும் அடியார்கள் ஆடியும் பாடியும் பரவசமாய் வர அழியாத ஆனந்தத்தை மழை போலப் பொழிந்து அனுபவித்தமை கண்டு இப்பாடல் உதயமானது. சிறப்பாக மாரி அம்மன் கோவில் நயினை நாகபூஷணி தேர் உற்சவங்களும் வசந்த திருவிழா உற்சவமும் இப்பாடலுக்குச் சான்றாகும்.

பாடல்: 14

## எங்கள் அன்னை முத்துமாரி அம்மா

அருள்மாரி பொழிந்திடுவாள் எங்கள் முத்து மாரியம்மா
பொருள்மாரி பொழிந்திடுவாள் எங்கள் முத்து மாரியம்மா
மருள்மயக்கம் நீக்கிடுவாள் எங்கள் முத்து மாரியம்மா
தருமங்கள் செய்யவைப்பாள் எங்கள் முத்து மாரியம்மா

கருத்துரை

அம்மன் தன் அருளாலே வணங்குகின்ற அடியார்க்கு அருள் மழை பொழிவதுடன் பொருள் மழையும் பொழிவாள். மேலும் எங்களின் தருமத்திற்கு வேறான மயக்க நிலைகளை தெளியவைத்து எல்லோரையும் தரும நெறியில் வாழவைத்து அவர்களுக்குப் புண்ணியத்தை கூட்டிவைக்கும் தாயாக விளங்குகிறாள். "பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை" என்ற வள்ளுவன் குறளுக்கு ஏற்ப அன்னை அருளாலே நெறிப்படுத்தி பொருளையும் தந்து அப்பொருளால் மயக்கமடையாமல் தான தருமங்களுக்கு உதவும் மனப்பான்மையையும் தந்து புண்ணியத்தைப் பெருக்கிடுவாள். இப்பாடலில் கூடலூர் முத்துமாரி அம்மன் தேர்த்திருவிழாவை கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் கொண்டாடும் போது அவள் நினைவாக முத்துமாரி அம்மா என்று அவளை நினைத்து உருகினேன்.

பாடல்: 15

## அம்மன் கோயில் மணி ஓசை

அம்மா அழைக்கும் குரலோசை  அம்மன் கோயில் மணியோசை
அம்மா அழைக்கும் குரல் கேட்டு அம்மன் கோவில் ஓடிவந்தேன்
அம்மா அம்மா என்று சொல்லி  அம்மன் காலில் வீழ்ந்துவிட்டேன்
அம்மா தந்தாள் அருளணைப்பு அதுவே சுகமாய் இருக்குதுபார்!

<u>கருத்துரை</u>

இப்பாடல் உதயமாகுமுன் இப்பாடலை எப்படி தொடங்கலாம் என்று பல நாட்கள் மனதிற்குள் நினைத்தேன். அப்போது ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை நேரம் ஆலயத்துள்வந்து விநாயகர் வாசலில் சிந்தித்த வண்ணமாய் அமர்ந்திருந்தேன். அருகினிலே தமிழ் ஆசிரியர் குழந்தைகளுக்கு தமிழில் சமய பாடம் நடத்திக்கொண்டு இருந்தார். அப்போது என் கண்கள் ஆலய மணியின் பக்கம் திரும்ப இப்பாடல் உதயமானது. அதனால்தான் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் இப்பாடல் அமைந்தது. அம்மாவின் குரலாக மணியோசை ஒலிக்க அம்மன் கோவில் ஓடிவந்து அம்மன் காலில் விழ்ந்து அருட்பரவசமாகும் நிலையை இப்பாடல் குறிக்கிறது.

பாடல்: 16

## ஈலிங் கனக துர்க்கை அம்மன்

பார்புகழ் இங்கிலாந்தில் இலண்டன் மாநகரமதில்
பார்த்துத்தேடி ஈலிங்கில் பாடியாடிக் கண்டுபிடி
பார்பூத்த ஆலயமாம் கனகதுர்க்கை ஆலயத்தை
பார்த்து ஒருமுறை நீ தீர்த்திடு உன் பாவமெல்லாம்!

<u>கருத்துரை</u>

இப்பாடல் ஆலயம் அமைந்த இடத்தையும் ஆலயத்தின் பெருமையையும் அன்னையை தரிசிப்பதால் எங்கள் பாவங்கள் குறைந்து போவதையும் குறித்து உதித்ததாகும். பூவுலகத்திலே இங்கிலாந்து தேசத்திலே இலண்டன் மாநகரிலே ஈலிங்குப்பகுதியை கேட்டு பாடி ஆடி கண்டுபிடியுங்கள். பாரிலே பூத்த தாமரைபோல் புகழ் பெற்ற ஆலயம். வாருங்கள் ஒருமுறை வந்து அன்னையின் அருள்பெற்று பாவங்களைத் தீருங்கள். இப்பாடலானது அபிராமி அந்தாதியில் "வந்திப்பவர் உனை வானவர்" என்று தொடங்கும் பாடலில் பாரினில் இறைவியைத் தரிசிப்பவர்க்கு அருட்கடாட்சமான அன்னையின் தண்ணொளி கிடைக்கும் என்று கூறிய கருத்தை என் உள்ளமும் வெளிக்காட்டி அமைகின்றது.

பாடல்: 17

## கனவில் என்னை பக்குவமாக்கிவிட்டாள்

பாவமெனும் விறகைச்சேர்க்கப் பாவிநான் அலைந்தேன் பாரில்
பாவமெனும் விறகு கொண்டு பாவிநான் வீடு வந்தேன்
ஆவலுடன் நின்ற அன்னை பாவியெனைப் பார்த்தணைத்தாள்
ஆவல்தீரப் பாவம் போக பக்குவமாய்ச் சமைத்திட்டாளே!

<u>கருத்துரை</u>

இப்பாடலை எப்படித்தொடங்குவேன் என்று பல நாட்களாக சிந்தித்துக் கொண்டே இருந்தேன். அன்னையின் அருட்கனவின் பயனாக பாவத்தை அடியேன் விறகாக சுமந்துவர தாயாக நின்ற பராசக்தி கொண்டுவா விறகை சமைத்துவிட என்று அழைத்து அருகில் இருத்தி சமைத்துக் கொண்டிருக்கையில் நான் துள்ளி எழும்பி மேலும் விறகு சேர்க்க புறப்பட்ட போது இவன் விறகு சேர்த்து முடிவது எந்நாளோ? நான் சமைத்து முடிவது எந்நாளோ? என்ற தாயின் குரல் கேட்டு சமைத்து முடிந்தால் விறகு பொறுக்கமாட்டேன் என்று குரல் கொடுத்து விழித்துவிட்டேன். விறகு பாவம் எனும் கர்மாவை குறிக்கிறது. பாவங்களை செய்து சேர்த்த வண்ணம் வரும் மக்களை ஆவலுடன் கண்டு அவர்களை அருள்விழியால் அணைத்து பாவங்களை எரித்து பக்குவப்படுத்தி சமைத்திடுவாள் எமதன்னை என்பது இப்பாடலின் விளக்கம்.

பாடல்: 18

## கவுணியர்க்கு பால்சுரந்த கலசம் போற்றி

சமயங்கள் ஆறுக்கும் தலைவியென அறிந்துகொண்டேன்
சமயங்கள் எதனிலும் சமைப்பவளைப் புரிந்து கோண்டேன்
சமண்முதலாம் பல சமயம் முரண் ஓங்க ஒண்ணாது
சமயத்தில் ஓடிவந்து கவுணியர்க்கு பால்சுரந்த கலசம் போற்றி!

<u>கருத்துரை</u>

அறு சமயங்களுக்கும் அன்னை பராசக்தி முதல்வியாய் விளங்குகிறாள். அவளே எல்லாச் சமயங்களினதும் ஒவ்வொரு தெய்வங்களினதும் சக்தியாய் நின்று அடியார்களை நெறிப்படுத்துகிறாள் என்பதையும் புரிந்து கொண்டேன். அதாவது எவ்வகையான வழி முறைகளிலும் (உபகரணங்கள் ஊடாக) சமைக்கும் போது அதில் தொழில் படுத்தும் சக்தி வெப்ப சக்தியே. அது போல் சமைப்பவள் சக்தியே. ஆங்காங்கே முற்காலத்தில் சமணம் முதலாம் மறு சமயங்கள் ஓங்கவிடாது ஓடிவந்து சமயம் பார்த்து வந்து ஞானப்பாலூட்டிய கலசத்திற்கு போற்றி செய்வோம்!.

பாடல்: 19

**உயிர் காற்றுப்போல் போகுமுன் காத்து நாராயணனையும் குருவையும் காட்டினாய் அம்மா!**

போற்றிலேன் தொழுதிலேன் ஆசைக்கடலில் அகப்பட்டேனை
கூற்றுவன் பாசக்கயிற்றால் இழுக்க உடல்சிதறி எந்தன் உயிர்
காற்றுப்போல் போகுமுன் நாராயணனொடு குருவையும் காட்டி
ஆற்றுப்படுத்தி ஆண்டுகொண்டாய் என் தாயே பராபரையே!

<u>கருத்துரை</u>

இப்பாடல் அடியேன் ஆசைக்கடலில் அகப்பட்டு இரவும் பகலுமாக வேலையில் ஈடுபட்டு சுழன்ற நேரத்தில் அன்னை கண்பார்வை இழக்கச்செய்தும் வேலையால் வீடுதிரும்பிய வழியில் இலண்டன் சவுதோல் லேடி மாகிறற் தெருவில் உள்ள விஷ்ணு மந்தர் ஆலயத்தின் அருகாமையில் பேரூந்து ஊர்தியில் அடிபட்டு சிதறி உயிர் காற்றுப்போல் போகுமுன் காத்து நாராயணன் கோபுரத்தையும் காட்டி நாராயணன் மீது பக்தியும் தந்து அதன் வழியாக சற்குருவைத் தேடவைத்துக் காட்டி குருபக்தியும் தந்து எனைப் பக்குவப்படுத்தி ஆண்டு கொண்ட தாயே தயாபரியே பராபரையே என்று அன்னையின் அருளை நினைந்து உருகும் பாடல்.

பாடல் 20

## பிராணனது போகுமுன் பாடிப்பாதமலர் சூட்டவைப்பாய் அம்மா!

பராபரையே பார்முதல் பூதங்களாக விரிந்த பரப்பிரம்ம சொரூபிணியே
தராதரமற்ற என்னை தரமாக்கி ஆண்டுகொண்ட தாயே தயாநிதியே
சராசரங்களாட ஆனந்தமாய் ஆடிமகிழும் சிவராஜனின் சிவகாமியே
பிராணனது போகுமுன் உன் புகழ்பாடிப் பாதமலர் சூட்ட வைப்பாயே!

<u>கருத்துரை</u>

பார்முதல் ஐம்பூதங்களாக விரிந்து பரப்பிரம்ம சொரூபிணியாக விளங்கும் தாயே! ஒரு தராதரமுமற்ற என்னையும் வழிப்படுத்தி தரமாக்கி ஆண்டுகொண்ட தயாபரியே! அகில சராசரங்கள் இயங்குவதன் பொருட்டு ஆனந்த நடனம் புரியும் சிவராஜனுடன் இணை சிவகாமியே! என்னுயிர் போகுமுன் உனைப்புகழ்ந்து பாடி உன் திருவடித் தாமரையைச் சூட அருள்புரிவாயே அம்மா! பயனற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டு தராதரமற்றவனாய் திரிந்த என்னை உத்தமனாக மாற்றிவிட்ட தாயே! என் உடல் அழிந்து உயிர் போகுமுன் இந்தப்பாடல்களைப்பாடி முடிக்க வேண்டும் என்று ஆலயத்தில் அமர்ந்திருக்கும் சிவராஜனுடன் கூடிய சிவகாமியின் அருளை வேண்டி உருகுகின்றேன்.

பாடல் 21

## அந்தாதி பாடவைத்துவிட்டாய் அம்மா!

வைத்துவிட்டாயம்மா என்னை உந்தனைப்புகழ்ந்து அந்தாதி பாட
தைத்துவிட்டாய் அம்மா இதயத்தில் உன் நினைவு நீங்காதிருக்க
பொய்த்துவிடாது என்வாழ்வு உன்னைப்புகழ்ந்து பாடி அகம்
மெய்த்துவிடுமோ அம்மா அடியார்க்கு நீ தரும் நம்பிக்கையே?

<u>கருத்துரை</u>

இப்பாடல் முதல் பாடலின் வேண்டுதலை அன்னை நிறைவேற்றுவாள் என்ற திடமான நம்பிக்கையுடன் உதயமான பாடலாகும். அதாவது உன்னைப்புகழ்ந்து என்னையும் அந்தாதிப் பாடல்களை பாடவைத்துவிட்டாய். என் மனதிலே எப்போதும் உன்னை மறவாதிருக்கும் உன் நினைப்பை வைத்துவிட்டாய். ஆதலினால் இனி பொய்க்காது என் வாழ்வு. உனை என்றும் புகழ்ந்து பாடி அகம் மகிழ்வேன் இது உன்னுடைய மெய்யான வாக்கு என்றும் அது அடியார்க்கு நம்பிக்கையூட்டும் என்று மகிழ்கிறேன்.

பாடல்: 22

## கும்பிட்ட கையுடன் பதாம் புயத்தில் சரணடைந்தேன்!

நம்பிக்கையுடன் உன் பதாம்புயத்தில் பகலிரவாய் பக்திபண்ணுகிறேன்
தும்பிக்கையனுடன் ஆறுமுகனும் அம்மாவென்று அழைக்கும்
அம்பிகையே தத்தேறிய நான் உன் தனயன் தாயென ஓடிவந்து
கும்பிட்டகையுடன் பதாம்புயம் சரணடைந்தேன் காப்பது உன்கடனே!

<u>கருத்துரை</u>

உன்னிரு பாதாரவிந்தத்தை நினைந்து பக்தி செய்து வருகிறேன் தும்பிக்கையானும் ஆறுமுகனும் அம்மா என்று அழைக்கும் தாயே! பிறவிகள் தோறும் பாவங்கள் சேர்ந்தவனாயினும் நானும் உன் மகன் அல்லவோ! நீ எனக்கு தாயல்லவோ! இந்த உரிமையுடன் ஓடிவந்து உன் ஆலயத்தில் கை கூப்பி உன் திருவடிகளில் சரணடைந்தேன் தாயே! இனி எனைக்காப்பது உன் பொறுப்பன்றோ தாயே! உலக சராசரங்களை படைத்த தாயாக நீ விளங்குவதால் ஆனைமுகனும் ஆறுமுகனும் அம்மா என்று உரிமையுடன் அழைப்பது போல நம்பிக்கையோடு அடியேன் ஓடிவந்து சரணடைந்தால் காப்பது தாயின் கடன் என்ற பூரண உரிமையுடன் வேண்டி உருகும் பாடல்.

பாடல்: 23

**என்றும் என்கடன் உன்புகழ்பாடி(ப்)**
**பணி செய்து கிடப்பதே!**

உன்கடன் அடியேனைக் காப்பதென்று ஆசைச்சுழியில் அகப்பட்டேனை
அன்றே தடுக்கி வீழ்த்தி ஆட்கொண்டு கொண்டதுமல்ல என்னை
நன்றாய் வழிசெய்ய கனவிலும் நினைவிலும் சிந்தனையை வளர்த்தாய்
என்கடன் இனி உனைப்புகழ்ந்து பாடிப் பணிசெய்து கிடப்பதே!

<u>கருத்துரை</u>

முன் பாடலைப்படித்து வேண்ட வைத்த அன்னையே அன்று என்னை காத்ததாகவும் என் வழியை அருள் வழியாக் கியதாகவும் என் மனதினுள்ளே தோன்ற இப்பாடல் உருவாகியது. அதாவது எனைக் காப்பதன் பொருட்டு அன்று பொருள் தேடி ஆசைச்சுழியில் அகப்பட்டு திரிந்த போது அன்று தடுக்கி வீழ்த்தி என் வாழ்வை திசை திருப்பினாய். அது மட்டுமல்லாது எனை ஆட்கொண்டதோடு என்னை நெறிப் படுத்தியதின் முகமாக அருள் வழியைக்காட்டி அடியாருடன் சேர்த்து கனவிலும் நினைவிலுமாக காட்சிகளைத் தந்து சிந்தையில் அறிவை வளர்த்தாய். ஆதலினால் என் கடன் இனி உனை புகழ்ந்து பாடி பணிசெய்து கிடப்பது தானே!

பாடல்: 24

## என்னை ஆட்கொண்ட அன்னையை மறப்பேனோ!

கிடக்கும்போதும் உந்தன் நினைப்புடன் கிடக்கின்றேன் எழுந்து
நடக்கும்போதும் உந்தன் நினைப்புடன் நடக்கின்றேன் அடியாருடன்
அடக்கமாய் இருக்கும்போதும் நிற்கும்போதும் உன் புகழ் பேசிடுவேன்
இடங்கொண்டு என்னை ஆட்கொண்டாய் இனி உனை மறக்கலாமா!

<u>கருத்துரை</u>

இப்பாடல் எல்லா நிலைகளிலும் அன்னையின் நினைவாய் இருப்பதையும் இருக்க வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டாக அமைந்தது. ஜீவனைத்தாங்கும் உடலானது கிடத்தல் நடத்தல் இருத்தல் நிற்றல் என்ற நான்கு நிலைகளில் இருக்கும். அவ்வாறாக கிடக்கும் போதும் நடக்கும்போதும் உன் நினைப்புடன் இருக்கின்றேன். மேலும் ஆலயத்தில் அடியாருடன் இருக்கும் போதும் நிற்கும் போதும் உன் புகழை பாடியும் பேசியும் மகிழ்கின்றேன். இவ்வாறு என்னையும் இடங்கொண்டு ஆண்டுகொண்ட தாயே இனி உன்னை மறக்கலாமோ!

பாடல்: 25

## உன்னை மறவாதிருக்க கனவிலும் நினைவிலும் நீ காட்சி தருகிறாய் அம்மா !

மறவாது இருக்கக் கனவிலும் நினைவிலும் நீ தரும் காட்சி பல
அறங்கள் முப்பத்திரண்டின் தலைவியாய் அகிலம் காக்கும் நாயகியே!
கறவாது இருக்குமோ உன்முலை அடியேன் சேயாய்ப் பாடி உருகும்போது
இறவாதிருக்க என் உடல் அழியுமுன்னே வந்தெனை ஆண்டுகொள்வாயே!

<u>கருத்துரை</u>

அம்மா! அடியேன் உன்னை மறவாதிருப்பதற்கு கனவிலும் நினைவிலும் நீ தந்த அருட்காட்சிகள் பதிந்திருக்கின்றன. ஐயன் இஷ்டப்படி முப்பத்திரண்டு அறங்களையும் செய்து அகில சராசரங்களின் உயிரைக் காத்து வருகின்ற தாயே! அடியேனும் குழந்தையாக பாடல்களை பாடி அழும்போது உன்னுடைய முலையும் சுரக்காதோ? அருட்பாலை சொரியாதோ? அம்மா! என் உடல் அழியுமுன்னே இறவாவரம் தந்து எந்தனை ஆட் கொள்ள மாட்டாயோ?

பாடல்: 26

## சின்னஞ்சிறு பெண் குழந்தையாய் வந்தாயே அம்மா!

ஆண்டு கொண்டாய் நாயேனையும் ஓர் பொருளாக நயந்து வந்து
மீண்டு கொண்டாய் வெம்பாவங்கள் செய்து நரகத்தில் அழுந்திடாமல்
பூண்டு கொண்டாய் ஓர் கோலம் சின்னஞ்சிறு பெண்போல வந்து நின்று
வேண்டிவந்து கனவில் காட்சிதந்தாய் கணப்பொழுதில் விழித்திட்டேனே!

<u>கருத்துரை</u>

இப்பாடல் முதல் கூறிய பாடலின் தோற்றமாக அன்னை துர்க்கை என் கனவிலே சின்னஞ்சிறு பெண்ணாக காட்சி தந்து என்னை சிந்திக்க வைத்து என்னை ஆண்டு கொண்டதை நினைந்து நினைந்து உள்ளம் நெகிழ்ந்த காட்சியாகக் கனவில் பதிந்தவை நினைவாக அமைந்தது. அதாவது என்னை நாயினும் கீழ்ப்பட்டவனாக இருந்தாலும் ஒரு பொருளாக மதித்து தடுத்து ஆட்கொண்டு பாவங்கள்செய்து தீயவழியில் செல்லாமல் என்னை மீட்டு சின்னஞ்சிறு பெண்ணாக கோலம் பூண்டு காட்சி தந்ததை என் சொல்வேன்? கணப்பொழுதில் விழித்து விட்டேனே!

பாடல்: 27

## அகக்கண்ணால் உன் விழாக்கோலம் கண்டு உருகி நின்றேன் அம்மா

விழிக்கே அருள் தந்தாய் அகமும் புறமும் பார்த்து வணங்கிடவே
வழிபட நெஞ்சுடன் நல் உடலும் தந்தாய் மறை சொல்லும் வண்ணம்
மொழிகொண்டு உருகிடும் நல்மனம் தந்தாய் உனை நினைக்கும் தோறும்
அழியாத ஆனந்தமாம் விழாக்கோலம் காணத்தந்தது என் பெரும் பேறே!

<u>கருத்துரை</u>

அன்று பிறக்கும்போது கண்மூடிய நிலையில் இருக்க புற விழியை திறக்க வைத்தாய். மேலும் இன்று உன்னைக்காண அகத்தினுள்ளே காணும் அகக் கண்ணையும் (ஞானக்கண்ணையும்) திறக்க வைத்தாய் என்று வியந்த பாடல். அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது அதிலும் மேன்மையாக உன்னை அகத்திலும் புறத்திலும் வணங்க விழியில் அருள் தந்தாய். மேலும் உன்னை வழிபட நல்ல நெஞ்சுடன் உடலமைப்பையும் தந்தாய். இன்னும் உன்னை நினைக்கும் போதும் உருகிப்பாட மொழியும் வாயும் தந்தாய். அது மட்டுமல்லாது இவ்வளவு இருந்தாலும் உன்னுடைய விழாக் கோலங்களை காண்பதற்கு நல்ல பேறும் (பாக்கியம்) தந்தாய். 'இப்பாடல் அன்னை நாகபூஷணியின் தேர் உற்சவத்தை கொண்டாடும் போது எழுந்த பாடல்.'

பாடல்: 28

## நாகபூஷணியும் நீயே

பேறு தந்தாய் உனை நாகபூஷணியாய் விழாக்கோலம் காண்பதற்கு
கூறுமடியார்கள் குறைதீர்த்துக் காத்தருளும் கனகதுர்க்கையும் நீ
சீறும் அலைகடல்சூழ் நயினையம்பதி வாழ் நாகபூஷணியே தாயே
மாறுமென்று தொழத் தீர்த்திடுவாய் அவர்தம் நோய் பிணியே!

<u>கருத்துரை</u>

கனகதுர்க்கை அம்பிகையே! இங்கு உன்னை நயினை நாகபூஷணியாக விழாக்கோலம் செய்வதற்கு நல்ல பாக்கியத்தை தந்தாய். வந்து முறையிடும் அடியார்களின் குறைகளை தீர்த்துவைக்கும் அன்னையே! ஏழு கடலும் சீறும் நயினையம்பதியில் அமர்ந்தவளும் நீயல்லவோ! அங்கு வந்து வணங்க மாறும் என்று ஓடிவந்து தொழுகின்ற அடியார்களின் நோய் பிணிகளைத் தீர்த்துவைக்கும் தாயாக விளங்குகின்றாய் அல்லவோ!



என் தாய் குறை தீர்த்த
நயினையம்பதிவாழ் நாகபூஷணியும் நீயே! (பாடல்-29)

பாடல்: 29

## என்தாய் குறைகேட்ட தாயும் நீயே அம்மா!

நோய்பிணி தீர்க்கும் தாய் நீயென்றே என் தாயும் ஓடிவந்தாள்
பாய்ந்து வரும் அலை கடல் சூழ் நயினையம்பதியில் முறையிட்டாள்
தாய்க்குத்தாயாய் நின்று சேயெனக்கு விழிதிறந்து ஒளியும் தந்தாய்
வாய்கூறும் நாகராஜன் திருப்பெயரை இட்டு அன்னை மகிழ்ந்திட்டாளே!

<u>கருத்துரை</u>

இப்பாடல் என் வாழ்வில் நடந்த அருட்சம்பவத்தையும் அன்னையின் பெருமையையும் நினைத்து எழுந்த பாடலாகும். என் கண்பார்வை குறைந்த போது கவலையுற்ற என் தாயார் குழந்தையாக பிறக்கும்போது விழி திறக்காமல் இருந்ததையும் நாகபூஷணியை வேண்டி அன்னையின் கோயிலில் வந்து முறையிட்டதையும் பிறந்து சில நாட்களின் பின் விழி திறந்ததையும் தாய்க்குத்தாயாக நயினையம்பதி நாகபூஷணியாய் நின்று அருள்செய்தாள் என்று எண்ணி என் அன்னை எல்லோரும் போற்றும் ஸ்ரீநாராயணனுடைய திருப்பெயராம் "நாகராஜன்" என்று எனக்கு பெயரிட்டு மகிழ்ந்ததையும் வெளிக்காட்டி அன்னையின் அருளைப் புகழும் பாடலாகும்.

பாடல்: 30

## கருவறைக்குள் மகுடாசுரவர்த்தனியாய் நின்றனையே!

மகிழ்கின்றேன் வெளிநின்ற உந்தன் திருமேனி பார்க்குந் தோறும்
அகிலம்காக்கும் அவதாரக் கோலங்கள் எத்தனையோ காட்டிவிட்டாய்
மகிஷாசுரமர்த்தனியாய் கருவறைக்குள் அன்னை உனைக் கண்டு
நெகிழ்கின்றேன் துவழ்கின்றேன் இருள் நீங்கி என்றுமே ஒளிபெறவே!

<u>கருத்துரை</u>

அம்மா நீ எனக்கு விழி தந்ததனால் உன் திருவிழாக் கோலங்களைக் கண்டு வெளிநின்ற காட்சிகளை நினைக்கும் தோறும் மகிழ்கின்றேன். அகிலத்தை காப்பதன் பொருட்டு பராசக்தியே நீ எடுத்திட்ட அவதார கோலங்கள் எத்தனையோ! எத்தனையோ! அதில் உன் அவதார கோலமாக துர்க்கா தேவியின் ஆலயத்தின் கருவறைக்குள் மகுடனை மிதித்து மகிடாசுரவர்த்தனியாய் திகழும் காட்சியைக்கண்டு மனம் நெகிழ்ந்து உருகி வேண்டுகிறேன் அம்மா! புற ஒளியை கேட்கவில்லை என் அகத்தினுள்ளே இருக்கும் மாய இருளை அகற்ற உன் அருள் ஒளியையே வேண்டுகின்றேன்.

பாடல் 31

## விழிவைத்துக் காத்தருளும் அன்னையே!

ஒளிபெற வேண்டுமென்றே ஏத்துகின்றேன் இருள் நீங்க நெஞ்சினுள்ளே
தெளிவுற்ற ஆனந்தம் பெறவேண்டும் ஈன உடல் அழியுமுன்னே
விழிவைத்துக் காத்திடும் அன்னையின் விழாக்கோலம் கண்டு என்றும்
வழிபட்டு வாழ்ந்திடும் அடியார்கள் வாழ்விலவர் இருள்நீங்கி ஒளிபெறவே!

<u>கருத்துரை</u>

இப்பாடலை எப்படித்தொடங்குவது என்று பல நாட்களாக சிந்தித்திருந்த வேளையில் கனகதுர்க்கை அன்னையின் கொடியேற்றத் திருவிழாவும் வந்தது. அப்பொழுது கொடியேற்ற வைபவத்தில் அடியார்களுடன் சேர்ந்து அன்னையின் திருவுருவைத் தாங்கி நின்றேன். அப்பொழுது இருளுக்கும் ஒளிக்கும் ஒன்றாக இருக்கும் இதயத்தில் அருள் ஒளி வந்துவிட அஞ்ஞானம் மறைந்துவிடும் என்ற உமாபதி சிவாச்சாரியாரின் கொடிக்கவி பாடப்பட்டது. உற்சவ காலங்களில் ஆன்மாக்களின் அஞ்ஞான இருளை நீக்கும் பொருட்டு கொடியேற்றி வைப்பதுடன் இப்பாடலைத்தொடங்கும் போது கொடியேற்ற தினம் வந்ததும் கொடியேற்றத் திருவிழாவில் அடியார்கள் அம்பிகையின் திருவுருவைத் தாங்கி நின்ற போது உமாபதி சிவாச்சாரியாரின் கொடிக்கவி பாடப்பட்டது நினைவு வந்தது. அதன் பொருளைக்கொண்டே இப்பாடல் உதயமானது. வாழ்வினிலே அடியார்கள் நெஞ்சினுள்ளே இருள் நீங்கி உள்ளம் தெளிந்து ஆனந்தம் பெற வேண்டுமென்றே வேண்டுகிறேன். விழிவைத்து காத்தருளும் பொருட்டு அன்னை எடுக்கும் விழாக்கோலம் கண்டு வழிபடும் அடியார்களும் வாழ்வில் துன்பமெனும் இருள் நீங்கி ஒளிமயமான எதிர்காலம் பெறுவார்.

பாடல்: 32

## உன்னடியை இறுகப்பற்றி உன்னருளை பெற்றிடுவோம்

பெறுவார் வாழ்வினிலே தனமுடனே கல்வியும் சீர் சிறப்பும்
உறுதியும் நெஞ்சில் வலிமையுடன் ஜெயமுடனே வாழ்ந்திடுவார்
அறு சமயத் தலைவியாம் நாயகியே! உன் திருவடியை
இறுகப்பற்றும் அடியார்கள் பெற்றிடுவார் என்றும் பெருவாழ்வே!

<u>கருத்துரை</u>

அறு சமயங்களுக்கும் மேலான நாயகியாக விளங்கும் அம்பிகையின் திருவடிகளைப்பற்றி வழிபட்டு வரும் அடியவர்கள் வாழ்வினிலே தனம் கல்வி வீரம் முதலான பதினாறு செல்வங்களையும் பெற்று வெற்றியுடன் எப்போதும் வாழ்வார்கள். மேலும் எல்லோரும் போற்றக்கூடியவாறு வாழ அன்னை அருள்புரிவாள். இதற்கு முதல் பாடலில் துன்பம் நீங்கி ஒளிமயமான எதிர்காலம் இப்பாடலில் இவ்வுலக வாழ்க்கைக்கு தேவையான பதினாறு செல்வங்களையும் அன்னையை நம்பிக்கையுடன் வேண்டுதல் செய்து பெறலாம் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன். மேலும் அருளும் பொருளும் பெற்று எல்லோரும் போற்றத்தக்க பெருவாழ்வைப் பெறலாம் என்பது கருத்து.

பாடல்: 33

## வேணிப்பிரான் பாகம் பறித்தவளே!

வாழ்வின் நிலையாமை சொல்லிவைத்தார் வள்ளுவனும் பாரதியும்
ஆழ்ந்து சிந்தித்தால் அன்னை அருளாலே பெற்றிடலாம் பெருவாழ்வே
சூழ்கொன்றை வேணிப்பிரான் மெய்யைப்பறித்தே பாகம் உடையாளை
ஏழ்கடல் சூழ் இலங்கை மக்கள் துயர் நீக்கப் போற்றிடுவோம் எந்நாளுமே!

<u>கருத்துரை</u>

எவ்வளவுதான் செல்வங்கள் இருந்தாலும் சீரும் சிறப்பும்தான் இருந்தாலும் வாழ்க்கையின் நிலையாமையைப்பற்றி மரணம் எப்போதும் எந்நேரமும் நிகழலாம் என்று வள்ளுவன் முதல் பாரதியூடாக பல முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்றைய அமைதியற்ற உலகில் எங்குமே மரண பயம் இருந்து கொண்டே வருகிறது என்று எல்லோரும் பிரார்த்தனை செய்கிறோம் என்பதை நினைத்து இப்பாடல் தோற்றம் ஆகிறது. அன்னையின் அருளினாலே வாழ்வில் பக்தியுடன் தர்மங்களைச்செய்து அதன் மூலம் உடல் அழிந்தாலும் புகழுடம்பு அழியாது இருப்பதையும் ஜீவன் மேலும் முன்னேறிய பாதையில் இறைவனை அடையும் என்பதும் நிச்சயமாகும். ஆதலால் கொன்றை மலரைச் சூடிக்கொண்ட சிவபெருமானின் இடப்புாகத்தைப் பறித்து அதில் பாகமாக நிறைந்த அன்னையைப் பிரார்த்தனை செய்வோமாக. எப்போதும் புலம் பெயர்ந்து வாழ்கின்ற மக்கள் தமது தாய் நாடான இலங்கையில் உள்ள மக்கள் அமைதி பெறவேண்டும் என்று பிரார்த்தனைகள் செய்வதற்காக இப்பாடல் உதித்தது.

பாடல்:34

## இனி எனக்கு உன் நினைப்பே!

எந்நாளும் என் அன்னை போற்றிடுவேன் என் மனதில் உந்தனையே
முன்னாளில் என் அன்னையை எப்படிப் போற்றிசெய்தேன் நான் அறியேன்
பின்நாளில் என் அன்னை எழுதிவைத்தாய் மனதினிலே உன்னுருவம்
என்நாளும் என் அன்னை உன் நினைவே நெஞ்சினிலே இருந்திடுமே!

<u>கருத்துரை</u>

முதல் பாடலில் மரணத்தைக் குறித்து அன்னை எப்போதும் மனத்தினுள்ளே ஆத்ம உணர்வுடன் இறைவனை நினைத்த படி இருக்க வேண்டுமென்பதைத் தெளிவு படுத்தியதால் அம்பிகையே ! எந்நாளும் இப்போது என் மனதினுள்ளே உன்னை நினைத்தவண்ணம் இருக்கின்றேன். முன்னைய நாட்களில் எப்போது எப்படி நினைத்தேன் என்ற உண்மையான நிலை புரியவில்லை. அதாவது வெளிப்படையாக வணங்கியதையே குறிக்கிறது. பின் நாளில் என்னை உன் வழியில் நெறிப்படுத்தி உன் நினைப்பை எழுதி வைத்தாய். அதாவது பதித்துவிட்டாய். ஆதலினால் எந்நாளும் இனியெனக்கு நல்ல நாளாக அமைய என் மனதில் உன் நினைப்பாய் இருந்திடுவேன்.

பாடல்: 35

## நஞ்சைக் கண்டத்தில் அமுதாக்கிய அம்பிகையே!

இருந்த இடம்பெயர்க்க நின்றான் கைலாசத்தை இலங்கைவேந்தன்
வருந்திடவே ஈசன் காலால் மிதித்திட இசைபாடி மகிழ்வித்தான்
அருந்திய நஞ்சினை கண்டத்தில் அமுதாக்கிய அம்பிகை பொற்பாதம்
பொருந்திடவே என் சென்னி போற்றுகிறேன் எப்போதும் என் மனத்தே!

__கருத்துரை__

திருவிழாக்காலத்தில் ஒரு திருவிழாவின் போது இறைவியின் கைலாச வாகன உற்சவத்தின் போது அந்த விழாவின் சிறப்பைப்பற்றி இராவணன் அன்று கைலாயத்தை பெயர்த்து இலங்கைக்கு கொண்டுவர முற்பட்டான் என்றும் ஈசன் காலால் அமுக்கிடவே அதனுள் நசிபட்ட இராவணன் சாமகான இசை பாடி மகிழ்வித்ததால் அவன் விடுதலையடைந்து விடை பெற்றான் என்றும் தமிழ் அருவி சிவகுமாரன் உரையாற்றியதைக்கேட்டு அதை இப்பாடலின் முதல் இரண்டு வரிகளால் புகழ்ந்து பாடி மேலும் அன்று ஆலகால விஷத்தை இறைவன் உண்டபோது தனது சக்தியினால் இறைவன் கண்டத்தில் அதை அமுதாக்கிய அம்பிகையே! உன்னுடைய பொற்திருவடிகளை சிரம் மேற்கொண்டு எப்போதும் என் மனதில் உனைப் போற்றுகின்றேன்.

பாடல்: 36

## அபிராமியே கனக துர்க்கையாகி வந்தாள்

மனமே நீ மகிழ்கின்றாய் கண்கண்ட காட்சிகளை நினைக்கும் தோறும்
கனவினிலே காட்டிவிட்டாள் பட்டருக்கு அளித்திட்ட அருள் ஒளியை
தினம் மலரும் பூங்குழலாள் அபிராமி கனகதுர்க்கையாகி நின்றாள்
தனம் தரவே அணைக்கும் கரங்களுடன் வந்து நின்றாள் இங்கே!

<u>கருத்துரை</u>

கனவினிலே, தினமும் மலர்களை சூடுகின்ற அபிராமியாய் நின்ற கனக துர்க்கை அம்பிகையே! அபிராமியாகி நின்று அன்று பட்டருக்கு நீ கொடுத்த அருள் ஒளியை நினைக்கும் தோறும் என் மனம் மகிழ்ந்து உன் அருளைப் போற்றிய வண்ணம் இருக்கிறது. மேலும் அடியார்க்கு கனகம் என்னும் பொன்னை தனத்தை செல்வத்தை அள்ளிக்கொடுப்பாய் என்றே கனக துர்க்கையாக வந்து நின்றாய் அன்றோ! உன்னை அடியேன் என்றும் புகழ்ந்து பாடிடுவேன். கனவினிலே கனகதுர்க்கை அம்பிகை அபிராமியாகி நின்று அன்று பட்டர் தியானத்தில் இருக்கும்போது பூரணப்பிரகாசமாகக் காட்சியளித்ததை நினைக்கும் தோறும் அருட்பரவசமாகும் நிலையை மனமடைகின்றது என்பதை நினைத்து இப்பாடல் உருவாகியது.



மீனாட்சியாய் அந்தணர்கள் அழகுசெய்தஅன்னை (பாடல்-37)



விசாலாட்சியாய் அந்தணர்கள் அழகு
செய்த அன்னை (பாடல்-37)



காமாட்சியாய் அந்தணர்கள் அழகு
செய்த அன்னை (பாடல்-37)

பாடல்: 37

## அழகியை அழகுசெய்யும் அந்தணர்கள்

இங்கிவளின் அழகுகினை எடுத்தியம்ப இயலாது அழகுசெய்து
இங்கிதமாய் மீனாட்சி காமாட்சி விசாலாட்சி பெயரிடுவார்
பொங்கிவரும் கோலங்கள் எத்தனையோ கூறவிட முடிந்திடுமோ?
எங்குமிலா ஆனந்தம் பெற்றுவிடப் பேறுபெற்றோம் உலகினிலே!

**கருத்துரை**

திருவிழாக்காலங்களில் இருபத்தைந்து நாட்களும் பல அருள்தரும் அவதாரங்களாக உனை அலங்கரித்து உன் அழகிற்கு அந்தணர்கள் அலங்காரம் செய்வதை நினைத்து இப்பாடல் உதயமாகியது. உன் அழகை எவராலும் எடுத்து இயம்ப இயலாவிட்டாலும் அந்தணர்கள் மீனாட்சி காமாட்சி விசாலாட்சி என்று செய்யும் எண்ணற்ற அவதார கோலங்களை என்னால் இயம்ப முடியுமோ? இவ்வாறான அருட்காட்சிகளைக் கண்டு மெய்யின்பம் பெறுவோர் உலகில் யாவரோ? அவ்வாறு மெய்யின்பங்களை அன்னையின் அடியார்கள் இங்கு பெற்றுவிட்டோமன்றோ!

பாடல்: 38

## மெய்யின்பம் தர வந்து நின்றாயம்மா!

உலகினிலே பொய்யின்பம் அனுபவித்த கணப்பொழுதில் மறைந்திடுமே
மலம் கொண்ட மாந்தர்கள் மெய்யின்பம் பெற்றிடவும் ஆகிடுமோ?
நலம் கொண்டு நீ வந்து காட்சி தந்தால் மெய்யின்பம் பெற்றிடலாம்
புலம் பெயர்ந்த அடியார்கள் பெற்றிட மெய்யின்பம் வந்து நின்றாய்!

கருத்துரை

உலகினில் புலன்களால் எத்தனையோ இன்பங்களை அனுபவித்தாலும் அனுபவித்த கணப்பொழுதில் அவை மறைந்துவிடும். இவ்வாறு உள்ள சிற்றின்பங்கள் எல்லாம் பொய்யின்பங்களே. அனுபவித்தபின் நன்மை உண்டாவதும் இல்லை. மும்மலங்களையும் கொண்ட மானிடராகப்பிறந்த நாம் மெய்யின்பம் பெற்றிட முடியுமோ? ஆனால் நல்ல பேறாக அம்பிகையே நீ வந்து காட்சி தந்தால் அதாவது கனவிலேனும் நினைவிலேனும் உற்சவ காலங்களிலேனும் உன்னுடைய தரிசனத்தைப் பெற்றுவிட்டால் அதுவே மெய்யின்பம் ஆகுமன்றோ! ஆதலினால் புலம் பெயர்ந்து வந்திட்டமக்களாகிய எமக்கு இந்நாட்டில் ஈலிங் பகுதியிலே கோயில் கொண்டு மெய்யின்பம் தர வந்து நின்றாயே!

பாடல்: 39

## அருட்பாலைச்சுரக்கின்ற தாய்ப்பசுவே!

நின்றிடுவாள் கனகதுர்க்கை ஆலயத்தில் கட்டிவைத்த தாய்ப்பசுபோல்
கன்றுகள் போல் வந்து கூடிடுவார் அடியாரும் அருட்பாலைக்குடித்திடவே
ஒன்றாக ஆலயங்கள் தமிழோடு சைவநெறி வளர்த்திடுதல் நலமேயன்றோ!
நன்றாக அடியாரும் விழாக்கோலம்கண்டு பெற்றிடுவார் மெய்யின்பமே!

<u>கருத்துரை</u>

அம்பிகையே! கட்டிவைத்த தாய் பசு போல் நீ ஆலயத்தில் நிற்கின்றாய். அடியார்கள் யாவரும் கன்றுகளைப்போல உன்னிடம் ஓடிவந்து அவ்வப்போது அருட்பாலைக்குடித்து மகிழ்கின்றனர். அதாவது ஆலயத்தில் ஆண்டவன் தாய்ப்பசு போல் இருப்பதையும் கன்றுகள் போல் ஆத்மாக்கள் அங்கு வந்து வயப்படுவது போல ஆலயத்துக்கு பொருள் கொண்டேன். மேலும் லண்டனில் பல ஆலயங்கள் கனகதுர்க்கை ஆலயத்துடன் சேர்ந்து ஒன்றியமாய் தமிழையும் சைவத்தையும் வளர்த்து சைவ சமூக விழாக்களைக் கொண்டாடி மக்களுக்கு மெய்யின்பத்தை கொடுக்கிறார்கள். நாமும் கண்டு மெய்யின்பம் பெறுவோமாக.

பாடல்: 40

## இன்பமே எந்நாளும் துன்பமில்லை

இன்பமே எந்நாளும் துன்பமில்லை உன் நினைவு இருந்துவிட்டால்
துன்பமே இன்பமாய் மாறிடும் தொண்டர்தம் கூட்டிருந்தால்
வன்மையும் புன்மையும் பேசுவதும் மாறிடும் உன் அருளிருந்தால்
அன்பையும் பண்பையும் வளர்த்து ஆனந்தம் அளித்திடுவாயே!

<u>கருத்துரை</u>

அம்பிகையே! எப்போதும் உன் நினைப்புடன் இருந்துவிட்டால் வாழ்வில் துன்பமின்றி இன்பமாக வாழலாமன்றோ! அதுமட்டுமன்றி வாழ்க்கையில் உந்தன் தூய அடியார்களுடன் கூட்டுறவாக சற்சங்கமாக துன்பமற்று இன்பமுடன் இருக்கலாமன்றோ! இருந்தாலும் லௌகிக வாழ்விலும் பல்வேறு கொள்கைகளும் வேறுபாடுகளும் இருக்குமிடத்து தெரிந்தோ தெரியாமலோ வன்மையாகவும் புன்மையாகவும் பேசி துன்பப்படுகிறோம். இவ்வாறான நிலைகளை நீக்கி உன்னுடைய தொண்டர்களாக வாழுகின்ற எமக்கு அன்பையும் அறிவையும் புகட்டி சரியான வழியில் நடத்தி ஆனந்தமாக அருள்செய்வாய்.

பாடல்: 41

## ஆனந்தக்காட்சி அளித்திட்டாள்

அளித்திட ஆனந்தக்காட்சிகளை உற்சவ நாட்களிலே
ஒளி தந்து காத்தருள அவதாரக்கோலங்கள் பூண்டுவந்து
வெளிவீதி சுற்றிவந்தாள் மணிநெடுந்தேரேறி அடியாருடனே
குளித்துப் பூங்காவில் ஊஞ்சலாடி மகிழ்ந்திட்டாளே!

<u>கருத்துரை</u>

இப்பாடலில் வருடாந்த ஆலய உற்சவத் திருவிழாக்களின் அருட்காட்சியைக்கண்டு அதை நினைவில் கொண்டு எப்போதும் அவளின் ஆனந்தக்காட்சியை அகத்தினுள்ளே வைத்திடும் அடியார்களுக்கு அருளை அள்ளிக்கொடுக்கும் பொருட்டு பல்வேறு விதமான அவதார அலங்காரங்களைக்கொண்டு வீதி உலா வந்து காட்சி கொடுக்கின்றாள் என்பதை நினைவு கூறுகிறேன். மேலும் அடியார்கள் ஆயிரமாகத் திரண்டு வர ஆலயத்தின் வெளி வீதியினூடாக இன மத பேதமின்றி எல்லோரும் தரிசிக்கும் வண்ணம் அழகுற அமைக்கப்பட்ட மணிகள் பொருந்திய உயர்ந்த சித்திரத்தேரில் அன்னை பவனி வருவாள். தீர்த்தத் திருவிழாவில் தீர்த்தமாடி அடியார்களின் மலங்களை நீக்கும் பொருட்டு அத்தீர்த்தத்தை புரோட்சணம் செய்கிறாள். மேலும் ஆடிமாதம் முழுமையாகக்கொண்டாடும் வருடாந்த உற்சவத்தில் கடைசி ஆடிச்செவ்வாயன்று பூங்காவனத் திருவிழாவில் பூஞ்சோலையினுள்ளே ஆனந்த ஊஞ்சலில் ஆடி மகிழ்வாள்.

பாடல்: 42

## மகிழ்ந்திட்டாள் அடியார்கள் அளித்த அர்ச்சனைகள் ஏற்று

மகிழ்ந்திட்டாள் அளித்திட்ட உபசார அர்ச்சனைகள் ஏற்றிட்டே
நெகிழ்ந்திட்டார் அடியாரும் அன்னையின் அருட்காட்சி கண்டதுமே
அகிலாண்ட நாயகியாம் ஆதிபராசக்தியே கனகதுர்க்கையாகி வந்தாள்
மகிஷாசுரமர்த்தனியாய் இருள்நீக்கி ஒளிர்கின்றாள் கண்டிடுமின்!

கருத்துரை

ஆலயத்திருவிழாக்களின் போது அடியார்கள் பக்தியுடன் சமர்ப்பித்த உபகார அர்ச்சனைகளை ஏற்று அகமகிழ்ந்து அருள்புரிந்திடுவாள். விழாக்களைக்கண்டு அவளுடைய அருட்காட்சிகளில் திளைத்து நின்று மக்களும் ஆனந்தத்தில் மூழ்கிடுவார். இவ்வாறு அருள்புரிய ஆதிபராசக்தியே கனகதுர்க்கையாகி வந்து மகிடனை அழித்து இருள்நீக்கி இதயத்துள் அருள் ஒழி வீசக் காட்சியளிப்பதை கருவறைக்குள் கண்டிடுவீர். இப்பாடல் தேர்த் திருவிழாவின்போது அர்ச்சனைகள் மூலம் சேர்க்கப்படும் நிதி ஆலயத்தின் அறக்கட்டளையின் மூலம் தாய் நாட்டில் ஆதரவற்றோர் பராமரிப்பு இல்லங்களுக்கு கொடுப்பதனால் பெருமளவு மக்கள் அர்ச்சனைத் தட்டங்களை ஏந்தி நின்ற காட்சியையும் மற்றும் ஆலயங்களும் கொண்டுவந்த உபசார அர்ச்சனைகளையும் பார்த்த காட்சியையும் நினைத்து உருவாகியது.

பாடல்: 43

## பொற்சிலைக்கு ஒளியூட்டிய அன்னை

கண்டுவிட்டேன் கண்களிக்கக் கனவினிலே அவளுருவை
பெண்ணவளாய் கனகதுர்க்கை பொற்சிலைக்கு ஒளியையூட்டி
நின்றிட்டாள் அம்மம்மா என்சொல்வேன் அன்னையவள் அற்புதத்தை
எண்ணிடவிழி நீர்மல்கி மெய்ப்புளகம் அரும்பி ஆனந்தமாகிறதே!

<u>கருத்துரை</u>

கண்டுகொண்டேன்! கண்டுகொண்டேன்! கனவில் அவள் திருவுருவை சின்னஞ்சிறு பெண்குழந்தையாய் ! ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் கனக துர்க்கை பொற்சிலையாய் மின் இணைப்பால் விளையாடி ஒளியூட்டி நின்ற அருட்காட்சியைக் கண்டுவிட்டேன்! இக்காட்சியை அடிக்கடி என் மனம் நினைக்கும் தோறும் அவளின் அற்புதத்தை நினைத்து அவள் அருளை வியந்து மெய்சிலிர்த்து புளகாங்கிதமாகி விழிநீர் கசிகின்றதே! அபிராமி அந்தாதியில் அபிராமி பட்டர் சக்தி வழிபாட்டினால் விரும்பித்தொழும் அடியார்கள் விழி நீர் மல்கி மெய்புளகமாகி அரும்பித்ததும்பி ஆனந்தமாய் அறிவிழந்து சுரும்பி கழித்து மொழிதடுமாறும் நிலையை அடைவதைக்கூறி வழிபாட்டின் பெருமையைச் சொல்ல வைத்ததைப் போல் என்னையும் அன்னை என் கனவில் தந்த காட்சியினால் என் உள்ளமும் உடலும் அடைகின்ற ஆனந்த நிலையை வெளிக்காட்டிநிற்கின்றது.

பாடல்: 44

## நிலவொளியைக் காட்டிவிட்டாள்

ஆனந்த மயமாய் என் அறிவாய் நிறைந்து அருட்காட்சி தந்தாள்
தேனமுதாய் தெவிட்டாத தீந்தமிழாய் சிந்தையுள்ளே நிறைகின்றாள்
வானதிலே நிலவொளி காட்டிவிட்டாள் தை அமாவாசை திதியினிலே
மோனக் கனவினிலே காட்டிவிட்டாள் அருட்காட்சி நம்பினோர்க்கே!

<u>கருத்துரை</u>

முன்பு குறிப்பிட்ட வண்ணம் அருட்காட்சியைத் தந்து என்னை ஆனந்தப்படுத்தி அதனால் அறிவினிலே நிறைந்து தேனுடன் அமுது கலந்தது போல் அருட்பாக்களை என் சிந்தனையிலே நிறைத்திட்டாள். பராசக்தி அன்று பட்டருக்காக தை மாதம் முழு அமாவாசை திதியினிலே தன்னுடைய தோட்டை எறிந்து பூரண நிலவைக் காட்டினாளன்றோ! அது போல எனது மோனக்கனவிலும் அருட்காட்சியை தந்திட்டாள் அன்னையவள் அன்றோ! அபிராமி அந்தாதிப் பாடல்களைப் படித்து இறைவியின் திருவடிகளை இறுகப்பற்றியதால் பட்டருக்காக அன்னை பூரண நிலவைக்காட்டி அற்புதத்தை விளைவித்தது போல் என் கனவினிலே காட்சி தந்து என் அறிவுக்குள் நிறைந்து தேன் கலந்த அமுத மொழிகளை சுரக்கவைக்கின்றாளன்றோ!

பாடல்: 45

## நம்பினார் கெடுவதில்லை

நம்பினார் கெடுவதில்லை நான்மறைத் தீர்ப்பு என்றான்
அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம் என்று
எம்மொழியில் இத்தனையும் இயம்பிவிட்டான் பாரதியும்
கும்பிட்டு சரண் அடைவோம் அருள் கோடி தந்திடுவாளே!

<u>கருத்துரை</u>

அன்று பாரதியார் எம்மொழியாம் இனிய தமிழில் அன்னையின் அருளை நம்பி வழிபடுபவர்கள் கெட்டுப்போவதில்லை என்ற தீர்ப்பையும் அவ்வாறு நம்பி அம்பிகையை சரணடைவோர் வாழ்க்கையில் வரங்களைப் பெற்று இனிது வாழ்வார்கள் என்று இயம்பினார் அன்றோ!. ஆதலினால் நாமும் நம்பிக்கையுடன் அன்னையை வணங்க எமக்கும் அருள்வரங்களை அன்னை தருவாளன்றோ! மேலும் நம்பிக்கையுடன் அன்னையைத் தொழும் அடியார்களுக்கு கனவினிலே காட்சிகொடுத்து அருள்வழிப்படுத்தினாள் என்பதைப் பாரதியாரும் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார். அதனால் அவரும் சக்தியின் அருளாலே ஆட்கொள்ளப்பட்டு அனேக பாடல்களை தேன்கலந்த அமுத கானங்களாகப் பாடியதை அறிவோம். அதனால் பாரதியாரும் அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம் என்று வியக்கின்றார்.

பாடல்: 46

## அம்மா வெனச்சொல்ல கண்ணீர் சிந்திடுமே!

தந்திட்டாள் பல வரங்கள் திருக்கோயில் வந்திடுவோர் கூறிடுவார்
வந்திடுவாய் ஈலிங் பதி கனகதுர்க்கை அன்னையவள் ஆலயத்தில்
முந்திடுவாள் வரம்கொடுக்க கன்றினை அணைக்கும் தாய்ப்பசுபோல்
சிந்திடுமே கண்களில் நீர் கண்டவுடன் அம்மா எனச் சொல்வீரன்றோ!

<u>கருத்துரை</u>

இவ்வாறு அன்னையை வணங்கியதால் அடியார்கள் பலவிதமான வரங்களைப் பெற்றுள்ளார்கள். ஈலிங்குப்பகுதியில் அமைந்த கனக துர்க்கை ஆலயத்திற்கு வாருங்கள். அடியார்கள் சொல்வதையும் கேட்டிடுவீர். தாயாக நிற்கும் அவள் திருக் கோலத்தையும் கண்டிடுவீர். அன்னையவள் அடியார்களைக் கண்டவுடன் கன்றினைக்கண்ட தாய்ப் பசுபோல் முகமலர்ந்து வரங்களைக்கொடுக்க முந்தி நிற்பாள். ஆலயம் வந்து அன்னையின் இவ்வாறான திருக்கோலங்களைக் காணும் போது கண்களில் நீர்மல்கி அம்மா அம்மா என்று அழைக்கத் தோன்றிடுமே!

பாடல்: 47

## அல்லும் பகலுமவள் அரவணைப்பாள்!

சொல்லாத அடியார்கள் உண்டோ கண்டவுடன் அம்மாவென்று ?
கல்லினுளும் கனகதுர்க்கை குழந்தைகுரல் கேட்டு மகிழ்பவளாம்
அல்லும் பகலும் அரவணைத்து அருட்பால் சுரக்கின்ற தாய்ப்பசுவாம்
புல்லும் பூண்டும் மேயும் கன்றுகள்போல் வந்திடுவார் அடியாருமே!

<u>கருத்துரை</u>

இவ்வாறு ஆலயம் வருபவர்கள் அன்னையின் திருக் கோலத்தைக் கண்டவுடன் அம்மா என்று சொல்லாமல் இருப்பார்களா? ஆலயம் வந்த அடியார்கள் அங்கு வரும் குழந்தைகளுடன் சேர்ந்து கனிவுடன் அம்மா! அம்மா! என்று சொல்வதை கனகதுர்க்கை அன்னை கற்சிலையாக இருந்தாலும் கேட்டு மகிழ்வாள் அன்றோ! பகலிரவாக வந்து சேரும் அடியார்களை அணைத்து அருட்பாலைச் சுரக்கின்ற தாய்ப் பசுவாக அன்னை காட்சி கொடுக்கின்றாள். அடியார்களும் உலகில் மேய்ந்து திரியும் கன்றுகள் போல் தாயின் நினைப்பு வந்தவுடன் துள்ளி வரும் கன்றுகள் போல் ஆலயத்தில் வந்து சேருவதை நினைத்தவுடன் இப்பாடல் உதயமாகியது.

பாடல்: 48

## முடியாத காரியங்கள் முடித்துவைப்பாள்

அடியாரைக் கண்டவுடன் அகமகிழ்வாள் கனகதுர்க்கை அன்னையவள்
மடிமுட்டிப்பால்கொடுக்கும் தாய்ப்பசுவே எங்கள் அன்னை கனகதுர்க்கை
குடித்திடுவோம் அருட்பாலை நன்றாகப் பெற்றிடுவோம் அருட்பலத்தை
முடியாத காரியங்கள் முடித்துவைப்பாள் என்ன குறை வாழ்வினிலே?

<u>கருத்துரை</u>

இவ்வாறு அடியார்களைக்கண்டவுடன் அன்னையவள் அகமகிழ்ந்து கன்றினைக் கண்டவுடன் இரங்கி மடிமுட்டாய் பால்சுரந்து ஒழுகும் தாய்ப்பசு போல் அருள் விழியால் பார்த்து அருட்பாலைச் சுரந்திடுவாளன்றோ! அவ்வாறு நாமும் அவள் அருளைப் பருகி அருட்பலம் பெற்றிடுவோம். அதனால் அன்னையும் வாழ்க்கையில் முடிக்க இயலாத பல காரியங்களையும் குறை நீக்கி முடித்து வைப்பாளன்றோ!

பாடல்: 49

## வாழும் வழி கண்டுகொண்டேன்

வாழும் வழி கண்டுகொண்டேன் மனதாலுன் திருவடியைப் பற்றிக்கொண்டேன்
நாள் கோள்தான் என்செயினும் நன்றாய் நான் இறுகப் பிடித்திருப்பேன்
பாழ் குழியில் வீழாது பார்த்திடும் என் தாய் விழியின் கடையுமுண்டு
ஆளுகைக்கு அருட்தாமரை தந்து ஆண்ட நாயகியின் அரண் நமக்கே!

<u>கருத்துரை</u>

இவ்வாறாக அம்பிகையை நம்பித் தொழுவதனால் வாழ்க்கையில் வாழும் வழி முறைகளைக் கண்டுகொண்டேன். அவளுடைய திருவடிகளை எப்போதும் என் மனதினால் பற்றிக் கொண்டிருப்பேன். அடிக்கடி வாழ்க்கையில் நாள்தோறும் மாறுகின்ற கோள்களின் நிலைகளினால் தாக்கங்கள் என்ன செய்தாலும் அவளுடைய திருவடிக்கமலங்களை இறுகப் பிடித்திருப்பேன். வாழ்க்கையில் இடையூறுகள் தரும் துன்பக் குழிகளிலே வீழ்ந்து விடாமல் வழித்துணையாகவும் என் அன்னை வந்து காத்து நிற்பாள் அன்றோ! இவ்வாறு காத்து எமை ஆண்டுகொண்ட அன்னையின் திருவடிகள் பாது காப்பு அரணாக அமையுமன்றோ!

பாடல்: 50

## நானிலம் செழிக்கவென வேண்டவைத்தாய்

நமக்கு என எண்ணாது நானிலம் செழிக்கவென வேண்டவைத்தாய்
நமக்கு என எண்ணாது தரணியெலாம் வாழ வேண்டவைத்தாய்
உமக்கு என எண்ணாது உலகமெலாம் வாழ வேண்டவைத்தாய்
எமதுறவு வாழ்ந்திடவே காக்கும் கரம் தந்த கனகதுர்க்கை நாயகியே!

<u>கருத்துரை</u>

இப்பாடல் அடியார்களை கனகதுர்க்கை அன்னையின் ஆலயத்தில் உலக நன்மைகளுக்காக தொழும்படியும் ஆலயத்தில் உருவாகி மலர்ந்த பல அறக்கட்டளைகள் மூலம் அன்னை அல்லலுறும் அடியார்களுக்கு அருள் வழங்குவதை வெளிக்காட்டுவதாகவும் அமைகிறது. அதாவது நமக்கு எமக்கு தமக்கு என்று எண்ணாமல் உலகமெல்லாம் வாழவேண்டும் என்று வேண்டவைத்த தாயே எமது தாய் நாட்டில் இருக்கும் உறவுகள் வாழ காக்கும் கரங்களை நீட்டி அபயம் கொடுக்கின்றாள் அன்றோ!

பாடல்: 51

## அடியாரைக் காத்தணைக்கும் அணைப்பே!

நாயகி நானிலம் செழிக்கவந்தாள் நவராத்திரியில் வளர்ந்து தசமியில்
மாய மகிஷனை வதம் செய்து மகிசாசுரமர்த்தனியாய் நின்றாள்
தூயமனதுடன் நின்புகழ் பாடியும் ஆடியும் மனம் மகிழ்ந்து நின்று
தாயவளேயென்று தொழும் அடியாரைக் காத்திடும் உன் அரவணைப்பே!

<u>கருத்துரை</u>

புராண காலத்தில் ஆணவம் நிறைந்த மகிடாசுரனால் உலகினிலே பக்தி குறைந்து மக்கள் யாவரும் துன்புறுத்தப்பட்ட போது தேவர்களின் பிரார்த்தனை மூலம் முப்பெரும் சக்திகளின் ஒரு அவதாரமாக ஐப்பசி மாதத்தில் வரும் பூர்வபக்க பிரதமை திதியில் குழந்தையாகத் தோன்றி நவராத்திரி நாட்களான ஒன்பது நாட்களிலும் வளர்ந்து தசமியில் கன்னியாக உருவெடுத்து ஆணவமாகிய எருமை வேஷம் தாங்கிய மகிடனை வதம் செய்து மகிடாசுர வர்த்தனியாய் திகழ்ந்தாய். இந்த நாட்களில் சக்தி உபாசனை இருந்து தூய மனத்துடன் ஆடியும் பாடியும் உன்னைப் போற்றி தாயவளே என்று தொழும் அடியார்களைக் காத்து அணைக்கின்ற அணைப்பாக விளங்குகின்றாயே!

பாடல்: 52

## துணையும் தொழும் தெய்வமும் நீயே

அணைப்பே! அணையும் தோளில் சூலமும் சங்குசக்கரமும்
பிணைய நிற்கும் ஓரிருகைத்தலமும் அபயமளிக்கும் அபயகரமும்
இணையாய் இடுப்பில் இடக்கையுடன் இன்பமளிக்கும் இன்முகம் காட்டி
துணையும் தெய்வமும் பெற்ற தாயுமாய் நிற்குமுன் கோலமறிந்தனனே!

<u>கருத்துரை</u>

இப்பாடலில் மகுடாசுரவர்த்தனியாக எருமையை மிதித்து ஜோதீஸ்வரரூபமாக விளங்குவதுடன் சங்கு சக்கரத்தை தாங்கி காக்கும் தெய்வமாக விஷ்ணு துர்க்கையாகவும் மேலும் செல்வத்தைக் கொடுக்கும் கனகதாராவைப்போல் கனகதுர்க்கையாக நாமம் கொண்டாள். அதாவது அவள் ரூபம் அணைக்கும் தோளில் சூலத்தை தாங்கி வலக்கையினால் அபய முத்திரை காட்டி இடுப்பில் இடதுகை வைத்து இன்பமளிக்கும் இன்முகம் காட்டி தொழும் அடியார்களுக்கு பெற்ற தாயுமாய் நல்ல துணையுமாய் நிற்கும் நின் திருக்கோலத்தை அடியேன் அறிந்து கொண்டேன். இப்பாடல் அன்னை எனக்கு அருளிய வரப்பிரசாதம் என்றே நினைக்கின்றேன். காலப்போக்கில் கண்பார்வை இழந்த எனக்கு தன் கோலத்தைச் சிந்தையிலே நிறுத்தி அவள் திருவுருவத்தை பார்க்கும்படி அருளியதை எண்ணி மெய்சிலிர்க்கின்றேன். இப்பாலைப்பாடும்போது அவளது கோலம் என் கண் முன்னால் தெரிவது போல உணர்கின்றேன்.

பாடல்: 53

## என்மனதில் தன் கோலம் பதியவைத்தாள்

அறியாத அருமறையை அறியவைத்து அன்னையவள் அருட்காட்சி தந்தாள்
முறியாத வினைத்தொடரை முறியவைத்து முன்வந்து அருள்செய்திட்டாள்
செறியாத என் மனதைச்செறியவைத்து திருவடியில் ஈர்த்தாட்கொண்டாள்
குறியாத என்மனதில் பதியவைத்தாள் திருக்கோலம் என் குறிப்பறிந்தே!

<u>கருத்துரை</u>

கனவிலும் நினைவிலும் அறியாத அருமறைகளைப் புகட்ட காட்சி கொடுத்த தாயே! என்னுடைய தீவினைப் பயன்களையும் முறியவைத்து முன்வந்து அருட்காட்சி தந்து அருள் செய்த அன்னையே! மேலும் உன் திருவடியை நாடாது அலைந்து திரிந்த என்மனத்தை உன் பாதாரவிந்தங்களில் ஈர்த்து ஆட்கொண்ட தாயே! இன்னும் ஒன்றையுமே நிலைப்படுத்தி குறித்துக் கொள்ளாத என் மனதில் உன் திருக்காட்சியைக் காட்டி என்னுடைய அருள்வேண்டும் குறிப்பறிந்து உன் கோலத்தை என் மனதில் பதியவைத்தாயே!

பாடல்: 54

## நெறிதந்து ஆண்டுகொண்ட என் அன்னை

குறித்தேன் மனதில் நின்கோலமெல்லாம் நீ தந்த காட்சி அதுவேயாக
அறியாத அருமறையைப் புகட்டவந்தாள் சின்னஞ்சிறு பெண்ணவளாய்
பறித்திட்டாள் என்மனதை கொள்ளைகொண்டு இருப்பிடமாயிருந்திடவே
நெறிதந்து ஆண்டுகொண்ட அவளருளை அடியேனும் புகழுமாறே!

<u>கருத்துரை</u>

முன் குறிப்பிட்டவாறு சின்னஞ்சிறு பெண்ணவளாய் அறிவைப் புகட்ட வந்து கனவிலே நீ தந்த காட்சியையும் கோலத்தையும் என் மனதில் குறித்துக்கொண்டேன். இக்கனவில் சின்னஞ்சிறு பெண்ணாய் வந்து என் மனதைப் பறித்து கொள்ளை கொண்டு விட்டாயே! இது நீ என்னில் இருப்பிடமாக இருந்திடவோ? இவ்வாறு எனக்கு அருட்காட்சிகளைத் தந்து நெறிப்படுத்தி எனை ஆண்டுகொண்ட உன் அருளை எப்படிப் புகழ்வேன்? நெறியற்று இருந்த என்னை நெறிப்படுத்தி ஆண்டுகொள்ள கனவினிலே காட்சிதந்து தன் உருவத்தை என் நெஞ்சினிலே பதித்ததுடன் அறிவையும் பெருக்கி அமுத மொழிகளைப் பாடவைத்த அன்னையை எப்படிப் புகழுவேன்?

பாடல்: 55

## அகழ்வாரைத்தாங்கும் நிலம்போன்றவளே!

புகழுமாறொன்றறியேன் சிறியேன் உன் மலரடிக்கே பற்றுதல் செய்வதன்றி
அகழ்வாரைத்தாங்கும் நிலம்போல வினையேன் சொல் பொறுப்பாயன்றோ
மகளாக வந்தாய் இமவானுக்கு மகிழ்ந்தே மணம் கொண்டாய் கைலாயனை
நிகழுமாறு உயிர்நீங்கும்போது வந்து துணைவரொடு அஞ்சேலென்பாயே!

<u>கருத்துரை</u>

அருட்காட்சி தந்து ஆண்டு கொண்ட உன்னைப் புகழ்வதற்கு ஒன்றுமே தெரியாது நிற்கின்றேன். உன் திருவடிகளை நினைப்பதைத்தவிர அடியேன் ஒன்றுமே அறியேன்.என்றாலும் சிறியேன் உனைப்போற்றி செய்த சொற்களில் குற்றமிருந்திடின் பொறுமையில் பூத்த பூமித்தாய் நீ பொறுப்பாயன்றோ! மேலும் இமவானுக்கு மலை மகளாகப்பிறந்து பின் கைலாய நாதனாம் இறைவனை திருமணம் செய்து கொண்டாய். ஆதலினால் வாழ்வின் விதிவசமாக மரணத்தில் உயிர்பிரியும் போது அன்னையே நீ உன் துணைவருடன் வந்து இருவருமாகக் காட்சி கொடுத்து அஞ்சேல் என்று அபயம் தரல்வேண்டும்.

பாடல்: 56

## அவள் நினைப்பாய் இருப்போற்கு அச்சமில்லை

அஞ்சுவதுமில்லை அஞ்சவருவதுமில்லை அன்னையின் அடியார்கள்
நெஞ்சினுள்ளே அவள் நினைப்பாய் இருப்போற்கு அச்சமில்லை
கொஞ்சும் மொழியாம் தமிழில் இயம்பிவிட்டான் பாரதியும் தஞ்சம்புகும்
குஞ்சுகளை மீனயன விழியால் காத்திடுவாள் அன்னையன்றோ!

<u>கருத்துரை</u>

அன்னையின் அருள் பெற்ற அடியார்கள் பயப்படுவதில்லை என்றும் அவர்கள் பயப்படும்படி ஒன்றும் நேர்வதில்லை என்றும் அன்று பாரதியாரும் உச்சிமீது வான் இடிந்து விழும்போதும் அச்சமில்லை என்றும் எப்போதும் பயமில்லாதிருக்க அன்னையை நினைக்கும் படியும் கூறினார். எப்போதும் தன்னையே நினைத்துத் தஞ்சம்புகும் அடியார்களைக் குஞ்சுகளைப் பொரித்து அவற்றை பார்வையினாலேயே காக்கின்ற மீனின் விழிகளைப் போன்ற விழி கொண்ட அன்னையவள் அருட்பார்வையால் காத்திடு வாளன்றோ!

பாடல்: 57

## உன்னாடல் நிற்கும் வரை குன்றாது முகவொளி

அன்றே அந்தகன் பால் மீட்டு என்வழியை அருள்வழியாக்கி விட்டாய்
என்றும் உனைநினைந்து உருகிப்பாடிப் பரவசம் அடையவைத்தாய்
மன்றமாம் நெஞ்சினுள்ளே சிவனாருடன் ஆடிமகிழ் சிவகாமியே
குன்றாது என் முகவொளி நெஞ்சில் உன்னாடல் நிற்கும் வரையே!

<u>கருத்துரை</u>

அன்று விபத்தில் சிக்கி இறக்க இருந்த நேரத்திலும் இயமனிடமிருந்து மீட்டது போல் காத்து என் வாழ்க்கையைப் புதிய வழியில் மாற்றிவிட்டாய். அதனால் இன்று உனைப்பாடிப் புகழ்ந்து பரவசமடைய வைத்தாய். எனது நெஞ்சமாம் கோயிலின் உள்ளே சிவனாருடன் கூடி ஆடி மகிழும் சிவகாமசுந்தரியாம் உன் ஆடல் நிற்கும் வரை உன் அருளினால் என் முகம் பூரணப் பிரகாசத்துடன் இருக்குமன்றோ! இங்கு அடியேன் நெஞ்சத்தை அரங்காகக் கொண்டு இறைவனும் இறைவியும் ஆடிக்கொண்டு இருப்பதையும் எப்போதும் அந்த அருளினால் முகம் மலர்ந்து ஆனந்தமாய் இருக்கும் என்பதையும் இப்பாடலில் குறிப்பிடுகிறேன். மேலும் ஆபத்தில் தடுத்தாட்கொண்டு அருள்வழிப்படுத்திய அன்னையை எப்போதும் பாடிப்புகழ்ந்து உருகும் நிலையையும் தந்துவிட்டாயே!

பாடல்: 58

## ஆடும் அடி ஓசையும் கேட்கிறதே!

வரைந்துவிட்டேன் மனத்திரையில் சிதம்பரத்தின் ஆனந்தக்கோலம்
அரைநாழி தவறாமல் ஆடுமவன் ஓசையுமே நெஞ்சினுள்ளே கேட்கிறதே
திரைமறைவாம் மறைத்தல் நீங்க அருள் மணியை அடித்துவிட்டால்
கரைபுரள் ஆனந்த சாகரத்தில் கண்டிடலாம் அக்காட்சி அகத்தினுள்ளே!

கருத்துரை

உடல் ஆலயமாக உள்ளமது திருவாசியாக அதனுள் எழும் அரை நிமிடமும் தப்பாது ஒலிக்கும் என் இதயத்தின் ஓசையானது சிதம்பரத்தில் நீ அம்மையப்பனாக ஆடுகின்ற ஒலியைப் போல் இருக்க என் நெஞ்சினுள்ளே ஆடுகின்றாயன்றோ! ஆதலினால் மனம் எனும் திரையினிலே உள்ளே நடக்கும் சிதம்பர நடனத்தை வரைந்து விட்டது போல் இவ்வருட்காட்சியை நினைக்கின்றேன். இருந்தாலும் பஞ்சகிருத்திய தொழில்களில் மறைத்தல் தொழிலாம் திரையை நீக்கி அருள்மணியை அடித்துவிட்டால் எப்படி கோவில் மணி அடித்து திரையை நீக்கி உன் அருட்காட்சி தெரிகின்றதோ அதேபோல உள்ளம் பரவசமாக ஆனந்தக் காட்சியை அகத்தினுள்ளேயும் கண்டிடலாம் அன்றோ!

பாடல்: 59

## சாக்கடையில் மாணிக்கம் மின்னிடுமோ?

அகமெனும் குளத்தில் அழுக்கு நீர் நிறையவுண்டு அறிந்திடுவீர்
சகதியும் சாக்கடையும் நிறைந்திருக்க மாணிக்கம் மின்னிடுமோ?
மகத்தான அருட் சுவையாம் அருட்பாடல் அதனுள் புகப்புகவே
சுகமான நீர்நிலையாய் தெளிந்துவிட மாணிக்கம் மின்னிடுமே!

<u>கருத்துரை</u>

அகம் என்று குறிப்பிடும் உள்ளம் எனும் குளத்தினுள்ளே காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாத்சர்யம் ஆகிய ஆறு குணங்களும் தீயவாசனையாக அழுக்குச் சேறாகத் தேங்கி நிற்கின்றன. இருந்தாலும் அதனுள்ளே மாணிக்கம் இருக்கின்றது. அதனுடைய ஒளி எப்படித் தெரியாதிருக்குமோ அதுபோல் எங்கள் அழுக்கான நெஞ்சத்தினுள்ளே இறைவன் காட்சி தெரிவதில்லை. நல்ல நீரை குளத்தினுள்ளே பாய்ச்சி அழுக்கு நீர் வெளியேற்றத் தளம் தெரிவது போல் அன்னையின் அருள்தரும் அந்தாதிப் பாடல்கள் அருட்சுவையாக அமைய உள்ளம் தெளிந்துவிடும். தெளிந்த உள்ளத்தில் அன்னையின் அருள் மாணிக்கம் போல் பிரகாசிக்குமன்றோ!

பாடல்: 60

## பொன்னாயிரம் சேர்ந்தாலும் ஒவ்வாத அழகுருவாம்

மின்னாயிரம் ஒரு மெய்வடிவாய் விளங்குவதாம் அவள் திருமேனி
பொன்னாயிரம் சேர்ந்தாலும் ஒவ்வாத அழகுருவாம் திருவுருவம்
நன்மறையும் மாலயனும் தேட நின்ற சோதிமயம் அவள் சொரூபம்
என்கண்கள் பார்த்திடவே எழிலாக வந்திட்டாய் பெண்வடிவே!

<u>கருத்துரை</u>

ஆயிரமாயிரம் மின் ஒளிகள் சேரந்தாலும் ஒவ்வாத பிரகாசமுடைய திருமேனியை உடையவளே! மேலும் உன் அழகுருவை ஆயிரமாயிரமாய் பொன் கொண்டு சேர்த்துச் செய்தாலும் ஒப்பிட முடியாத அழகுத்திருவுருவமே! மேலும் அன்று திருமாலும் பிரம்மாவும் அடிமுடி தேட முடியாது நின்ற சோதி வடிவானவளே! அருமறைகளும் தேடுகின்ற திருச்சொரூபமே! இருந்தாலும் அன்று என் கனவினிலே அடியேன் கண்கள் (அகக்கண்கள்) காண சின்னஞ்சிறு பெண்ணாகக் காட்சி கொடுத்தவளே! தனக்கு ஒவ்வாத அழகுடைய திருமேனியை உடையவளும்அன்று மாலயன் தேட சிவசக்தி சொரூபமாக நின்றவளும் வேத சாஸ்திரங்களினால் புகழ்ந்து உனை தேடி முடிக்கா நிலையும் ஆகிய இத்தனை சிறப்புகளை உடைய பராசக்தியே! இப்படியான நீ என் கண்கள் காண சின்னஞ்சிறு பெண்வடிவில் தோன்றினாயே!

பாடல்: 61

## பால திரிபுர சுந்தரியாய் அவதரித்தாள்

வடிவுக்கும் தேன்மொழிக்கும் ஒவ்வாத வல்லியவள் கனகதுர்க்கை
கொடிய மகிஷனையழித்திடவே அவதரித்தாள் பால திரிபுர சுந்தரியாய்
நெடிய திருமாலின் மார்புறையும் திருமகளும் இணைந்து கொண்டாள்
முடிதேடிய நான்முகனின் நாமகளும் சேர்ந்தே திருவுருவாய் வந்தனையே!

<u>கருத்துரை</u>

கனகதுர்க்கை அம்பிகையே! முப்பெரும் சக்திகளின் ஓருருவாய் தோன்றிய உனது அழகுக்கும் திருவுருவின் வடிவுக்கும் ஒன்றையும் ஒப்பிட முடியாதன்றோ! மகிடனை வதம் செய்ததன் பொருட்டு சிவசக்தியாகத் திரிபுர சம்ஹாரம் செய்த பாலதிரிபுரசுந்தரியே! உன்னுடன் நெடிய திருமாலுடைய வலப்பாகத்தில் அமர்ந்தவளாம் திருமகளும் இணைந்து கொண்டாள். மேலும் அன்று அருட்பெரும் சோதியின் முடியைத் தேட முயன்ற பிரம்மாவின் சக்தியாம் நாமகளும் இணைந்து கொண்டு முப்பெரும் சக்தியும் சேர்ந்து ஒரு திருவுருவாய் வந்தவளை வந்தனை செய்வோம். (இதுவே நவராத்திரி விழாவின் சிறப்பு. மேலும் கனகதுர்க்கை அன்னையின் அழகையும் அவள் திருவிளையாடல்களையும் மேம்படுத்தி பொல்லாத சுந்தரி என்று முன் குறிப்பிட்டுள்ளேன்)

பாடல்: 62

## வந்தனை செய்திடுவோம் வாரீர்

வந்தனை செய்திட வாரீர் மாய மகிசனையழித்து மங்களம் தந்தவளை
சிந்தனை செய்வோர்க்கு அவரவர் உளம்பார்த்து சித்தி பல தந்திடுவாள்
கந்தனைப் பயந்து சூரனை வென்றே நவரத்தின மாலை சூடி மகிழ்ந்தாள்
எந்தனை ஆண்ட என் அன்னை உங்களையும் ஆண்டுகொள்வாளன்றோ!

<u>கருத்துரை</u>

மகுடாசுரனை வதம் செய்து விண்ணுலகையும் மண்ணுலகையும் வாழவைத்து அருள்புரிந்து மங்களம் தந்தவளை வணங்கிடுவோம் வாரீர்! வந்து வணங்கும் அடியார்களை அவரவர் உள்ளங்களை அறிந்து குறைகளைத்தீர்த்து சித்திகள் எல்லாம் தந்திடுவாள். மேலும் அன்னையவள் கந்தனுக்கு ஞானசக்தியாம் வேலைக்கொடுத்து சூரபத்மனை வென்றதால் முருகனால் போற்றப்பட்ட (அகஸ்தியர் தந்த நவரத்ன மாலை) லலிதா நவரத்ன மாலை சூடிக்கொண்டவளே! என்னையும் ஆண்டு கொண்டு உங்களையும் ஆண்டுகொண்டு நல்லபடி வாழவைப்பாளன்றோ!

பாடல்: 63

## துள்ளாத என் மனமும் துள்ளுகிறதே!

கொள்ளேன் மனதிலுனையன்றி வேறுமொரு காட்சி கண்டிலனே
கள்ளாக உள்ளமதில் ஊறுகிறாய் களிக்கின்றேன் உன்நினைவே
உள்ளத்தில் ஊறிவரும் அருளமுதம் நிறைவதனால் பாடிடவே
துள்ளிறதே என்மனது தாய்மடியில் சேய்போல அன்பைத்தேடி!

<u>கருத்துரை</u>

அம்மா! நீ தந்த காட்சியினால் வேறு ஒரு கோலத்தையும் என் நெஞ்சில் நான் கொள்ளவில்லை. அதனால் என் உள்ளம் என்றும் ஆனந்தப்பட்டு பிதற்றுகிறது. ஒரு குழந்தையாக உன் பாக்களைப் பாடிக்கொண்டு தாய் அணைப்பைத் தேடி என் மனம் துள்ளிறதே! இப்பாடலிலும் அன்னையின் திருக்காட்சிகளைப் பதித்தமனது வேறு காட்சிகளைப் பதித்திடாது என்றும் அவள் தந்த திருக்காட்சிகளினால் எப்போதும் உள்ளத்தில் கள்ளாக ஊறும் அமுதம் நிறைவதனால் பாடும் சக்தியைப்பெற்று மனம் துள்ளிப்பாடி குழந்தைபோல் மகிழ்ச்சியால் தாயின் மடியைத் தேடுகின்றது.

பாடல்: 64

## பாடிப்புகழ நாவில் வந்து உறைவாயே !

தேடித் தொழுது வேண்டுகின்றேன் தேவி தரிசனம் கண்டிடவே
வாடித் தொழுது ஏங்குகின்றேன் நான் வருந்தாமல் வாராயோ!
நாடித் தொழுது நிற்கின்றேன் நம்பிக்கையிழக்குமுன் தாராயோ!
பாடிப் புகழ்ந்து பணிந்திடவே என் நாவில் வந்து உறையாயோ!

<u>கருத்துரை</u>

இவ்வாறு குழந்தையாக அருட்பாக்களைப் பாடி மீண்டும் உன்அருட்காட்சிகளை காண்பதற்கு தேடித்தொழுது வேண்டி நிற்கின்றேன். நான் வாடித் தொழுது வேண்டிநிற்கும் நிலையை அறியாயோ? நான் வருந்தா வண்ணம் நீவந்து காட்சி தாராயோ! மேலும் தொடர்ந்து நம்பிக்கையுடன் இடைவிடாது உன்னை எதிர் பார்த்து நிற்கின்றேன். என் நம்பிக்கையை இழக்குமுன் வந்து அருட்காட்சி தாராயோ!அம்மா! மேலும் உனைப் பாடி புகழ்ந்து பணிந்திட என் நாவில்வந்து அமர்ந்து நல்வாக்குத் தந்தருள் வாயே!

பாடல்: 65

## கறைக்கண்டன் கௌரியுனையணைத்து வாமபாகம் தந்தான்

உறைகின்ற கோயிலில் பிரானுடன் பிரிவிலாதிருக்க வேண்டினாயன்று
கறைக்கண்டனும் மகிழ்ந்தே கௌரியுனையணைத்து வாமபாகம் தந்தான்
மறைபோற்ற ஈசனுடன் நீயும் ஏகவுருவாய் வந்து நின்று மாந்தர்
குறைதீரத் திருவுருவாய் அமைந்ததுவாம் சிவலிங்கச் சின்னமன்றே!

<u>கருத்துரை</u>

இப்பாடல் நவராத்திரி விழாக் காட்சிகளைக் கண்டு அவற்றினைப் பாடல்களாகத்தந்து அதன்பின் நடைபெறும் கௌரி பூஜையின் விளக்கத்தை அறிந்து அதன் மூலம் உதித்தது. அதாவது அன்று பிருகு முனிவரின் ஏகநாயகனாக சிவனை மட்டும்தொழுது அருகிருக்கும் உன்னைத் தொழாமல் வந்த விளைவாக நீ கோபம் கொண்டு பிரிந்து சிவலிங்கத்தை பூசைபண்ணி சிவபெருமானை ஒரு கோவிலில் ஒரு பாகமாக அமைய தவம் செய்தாய். உன் தவத்திற்கு இரங்கி கறைக்கண்டனாம் இறைவன் கௌரி உன்னை அழைத்து வாமபாகம் தந்து ஆண்டு கொண்டான். இவ்வாறு இருவரும் இணைந்ததன் சின்னமாக மக்களாகிய நாம் பூசைபண்ணி வணங்கிட ஒரு திருவுருவாய் அமைந்ததுவே சிவலிங்கமன்றோ!

பாடல்: 66

## முன்னம் சொரிந்து அழைக்கும் தாய்

சின்னஞ்சிறு மருங்கில் சாத்திய வண்ணப்பொற்சேலையும் மாலையும்
கன்னங்கரிய குழலில் ஒளிர் கிரீடமும் சங்கு சக்கரமும் சூலமும்
புன்னகை தவழும் பவளச்செவ்வாயும் வைரக்குழை விழியின் அருட்கடையும்
முன்னம் சொரிந்து அழைக்கும் தாய்க் கோலமாய் கண்ணில் பதிந்தனவே!

கருத்துரை

மேலும் இப்பாடல் கனகதுர்க்கை அம்பிகையின் திருவுருவை என்னுள்ளத்தில் பதித்திருக்கும் நிலையினால் புறக்கண்ணினால் அவளைத்தரிசிக்க முடியாதிருந்தாலும் அன்று விழிகளினூடாகப் பதிந்திருந்ததை வெளிக்காட்டி நிற்கின்றது. அன்னையே சின்னஞ்சிறு மருங்கினில் சாற்றியிருக்கும் வண்ணப் பொற்சேலையும் அழகுற அணிந்திருக்கும் மாலையும் உன் கன்னங்கரிய குழலில் ஒளிர்கின்ற கிரீடமும் சங்கு சக்கரம் தாங்கும் கரங்களும் தோளில் சாய்ந்திருக்கும் சூலமும் புன்னகை தவளும் பவளச்செவ்வாயும் மூக்கில் அணிந்திருக்கும் வைரக் குழையும் அன்பைப்பொழிந்து குழந்தையை அணைக்கும் தாயுமாய் நீ தரும் திருக்கோலமாக என் கண்களில் பதித்து விட்டாய். இங்கு முன்னம் என்பது குழந்தையை முந்திக்கொண்டு தாய் அன்பு சொரிவதையும் அப்பனுக்கு முன்பே அருள் சுரக்கும் இன்னருள் என்று அம்பிகையின் அருளைக் குறிப்பிடுகிறேன்.

பாடல்: 67

## என்மனம் தாய்கண்ட சேய்போல ஆகிறதே !

பதிந்த நின்கோலம் நினைக்கும்தோறும் உள்ளம் சேயாகிறதே
கதி என்று ஓடிவந்து தொழுமடியார் கண்டவுடன் அம்மாவென்று
துதித்திட என்மனமும் தாய்கண்ட சேயாக ஆனந்தமாகிறதே
மதியைக்காட்டியன்று அரசனிடம் பட்டர் குறை போக்கினாயே!

<u>கருத்துரை</u>

மேற்கண்டவாறு எனது உள்ளத்தில் தாயின் கோலம் பதிந்து விட்டதால் நான் சேயாக உன்னைத்தேடுகின்றேன். உன்னை நாடி வந்து வணங்கும் அடியார்கள் உன்னைக்கண்டவுடன் கண்ணீர் மல்கி உனை அம்மா என்று அழைக்கின்றார்கள். அது போல அடியேன் உனைத்தொழும் போதெல்லாம் என்னுள்ளம் குழந்தையாக மாறித் தாயைக்கண்டது போல ஆனந்த மடைகின்றேன். மேலும் அன்று பட்டரைக் காக்கும்பொருட்டு முழுமதியைக் காட்டி பட்டர் குறை போக்கியவள் நீ அன்றோ! இப்பாடல் உள்ளத்தில் பதிந்திருக்கும் அன்னையின் திருக் கோலத்தை நினைக்கும் தோறும் உள்ளம் சிறு குழந்தையைப் போல் ஆவதையும் ஆலயத்தில் அடியார்கள் அம்மா என்று சொல்லித் துடிக்கும்போது என்னுள்ளமும் தாயைக் கண்ட சேய் போல் ஆனந்தப்படுவதையும் கூறி அன்னையின் அருட்சக்தியை வியந்து உள்ளம் உருகுகின்றது. மேலும் இப்பாடல் அபிராமி பட்டருக்கு அன்று குறைதீர்த்ததையும் நினைந்து எங்கள் குறைகளையும் தீர்த்து வைப்பாள் என்று நம்புகின்றேன்.

பாடல்: 68

## கேட்குமடியார்க்கு கேள்வியின்றி அருள் கொடுப்பாய் அம்மா!

போக்கும் வரவுமிலாப் புண்ணியனின் பாகம் அமைந்தவளே!
காக்கும் எண்ணத்தில் அசுரர் குலமளிக்கவந்த துர்க்கையளே!
வாக்கிலுந்தன் அருள் சுரக்க பாடுமென்னை மடியில் வைத்தாய்
நீக்கிடுவாய் அடியார்க்கு ஓடிவந்து கேட்குமவர் அல்லல்களே!

<u>கருத்துரை</u>

அம்பிகையே! பிறப்பு இறப்பு இல்லாத சிவபெருமானுக்குப் பாகமாய் அமைந்தவளும் நீ அல்லவா! மேலும் அசுர குலத்தை அழிக்கும் பொருட்டு அவதார கோலமாக துர்க்கையாய் நின்றவளும் நீ அல்லவா! மேலும் என்னுடைய நாவில் அமர்ந்து ஒன்று மறியாத என்னை பாட வைத்த தாயும் நீயல்லவா! உன்னை வேண்டி பாடிப் புகழ்ந்து துதிக்கும் அடியார்களுக்கு வரங்களை கொடுப்பவளும் நீயல்லவோ! அம்பிகை திருவருளினால் ஆட் கொண்டு என் வாக்கினிலே அமர்ந்து இப்பாடல்களைப் பாடவைத்து தன் மடியில் என்னையும் சேயாக அணைத்து வைத்திருப்பதுபோல் உணர்கின்றேன். அவ்வாறே வேண்டித் தொழுகின்ற அடியார்க்கு கேட்குமுன் தேவைகளையறிந்து அருள் கொடுக்கும் தாய் அல்லவோ எந்தன் கனகதுர்க்கை!

பாடல்: 69

**கனவிலும் நினைவிலும் புகட்டி**
**உன்புகழைச் சொல்ல வைத்தாய்**

அல்லல் அறுத்து ஆட்கொள்ள என்கனவில் வந்து நின்றாய்
இல்லை எனக்குப் புறக்கண் என்றோ நீ இதனைச்செய்தாய்?
கல்லாத ஏழைக்கு அருள்மறையைக் காட்டி நின்று உன்புகழை
சொல்லவைத்தாய் தாயே! பிழையனைத்தும் பொறுத்தருள்வாயே!

கருத்துரை

மேலும் என் துன்பங்களை அறுத்து நெறிப்படுத்தி கனவினிலே காட்சி தந்தாய். அலைந்து திரியும் என் மனதை கட்டுப்படுத்திட அதனை இழுத்து உன் வசமாக்கிட சிந்தையில் என்றும் உன் நினைப்பைத் தந்தாய். புராண சாஸ்திரங்களை கொஞ்சமேதும் கற்றிலாத போதும் கனவிலும் நினைவிலும் காட்சிகளைத்தந்து அறிவை வளர்த்து இதன் மூலம் உன் புகழைப் பாட வைத்தாய். இதில் ஏற்படும் எல்லாப் பிழைகளையும் பொறுத்தருள்வாய் அம்மா! மேலும் பார்வையிழந்த என் நிலையை உணர்ந்து அகத்தினுள்ளே காட்சிதந்து அங்குமிங்கும் திரியும் மனதை அருள்வசப்படுத்திப் பாடவைத்த உன் செயலை என்சொல்வேன்! என் சொல்லில் குற்றமேதும் இருப்பின் பொறுப்பாய் அம்மா!

பாடல்: 70

## அபிராமி ஆலயமும் தரிசிக்க வைத்திட்டாள்

அருள் தந்து புராதன அருட்தலங்கள் தரிசிக்க வைத்திட்டாயே
பொருளில்லை வழியில்லையென்றாலும் மின்னலென செய்திட்டாயே
கருணை மழைபொழியும் கந்தசஷ்டி நாளிலே அறுபடையும் தரிசித்து
அருணையம்பதியும் அபிராமி ஆலயமும் தரிசிக்கச் செய்திட்டாயே!

**கருத்துரை**

இப்பாடலுக்கு முன் எதிர்பாராத விதமாக ஒருசில நாட்களுக்குள் அறுபத்து ஒன்பதாவது பாடல் எழுதி முடிந்த போது கௌரி விரதம் நடைபெற்றுக்கொண்டு இருந்த நேரத்தில் அன்னை பராசக்தியின் அருளினாலே பாரதத்திலுள்ள புராதன தலங்களையும் என் குருவான ஸ்ரீ ஹரிதாஸ் சுவாமிகளினால் கட்டப்பட்ட தென்னாங்கு ஊர் பாண்டுரங்க ரகுமாலி ஆலயமும் ஸ்ரீ ஞானானந்த தபோவனமும் பஞ்ச பூத தலங்களும் நவக்கிரக தலங்களும் ஆறுபடை வீடும் அபிராமி ஆலயமும் தரிசிக்க அருட்சுற்றுலாவைத் தந்து அருள் புரிந்தாய். இவ்வாறு அவளின் இவ்வாறான அன்னையின் அருளை நினைந்து முதலிரு வரிகளிலும் பொருளும் வழியும் இல்லாத எனக்கு செய்து முடித்தாள் என்று அவள் அருளை வியக்கின்றேன். மேலும் கந்த சஷ்டி நாட்களில் ஆறுபடை தரிசனமும் திருவண்ணாமலையும் சிதம்பரமும் அபிராமி ஆலயமும்தரிசிக்க வைத்த அன்னையின் அருளைப் புகழ்கின்றேன்.

பாடல்: 71

## பட்டகடன் தீர்ந்திடுமோ சுந்தரியே?

செய்திட்டாள் அன்னையவள் அருளினை என்றுமே புகழ்ந்து பாட
பொய் பெருமை ஏதுமில்லை எல்லாம் அவள் செயலே என்றிடுவேன்
எய்திட்டேன் பிறவிப்பயன் என்றுமே அவள் நினைவாய் இருந்திடவே
பொய்க்குமோ என் வாழ்வு பட்டகடன் தீர்ந்திடுமோ சுந்தரியே?

<u>கருத்துரை</u>

அடியார்களுடன் சேர்ந்து அன்னையின் திருவருளை வியந்து பாடுமாறு என்னையும் கனகதுர்க்கை அன்னை பணித்து விட்டாள். இது பொய்யில்லை அல்லது எவர்க்குமோ இதில் பெருமையுமில்லை. எல்லாம் அவள் செயலென்றே உறுதி யாகக்கூறுகிறேன். இவ்வாறு தன்னருளை என்னைப் பாடவைத்து எடுத்த பிறவியின் பயனாக அவளை மறவா திருக்கவும் வைத்துவிட்டாள். இருப்பினும் தாயே! ஊழ்வினையின் பயனால் பல கஷ்டங்களையும் பட்டிருக்கின்றேன். இதனால் என் வாழ்வு கசக்கின்றது. என் கஷ்டங்களைத் தீர்த்து வைக்காயோ என் சுந்தரியே!

பாடல்: 72

## எல்லாவுயிர்க்கும் நீ தாய் அல்லவோ?

சுந்தரி எந்தை துணைவி நீ எல்லாவுயிர்க்கும் தாய் அல்லவோ?
உந்தனிடம் கூறாமல் யாரிடம்தான் கூறிடுவேன் என்குறையை
வந்தரியென் பாசத் தொடர்புகளைத் தூளாகத் தூற்றிடுவாய்
அந்தரி மகிடாசுரனை அழித்து ஒளிரும் ஞானச்சுடரொளியே!

<u>கருத்துரை</u>

*சிவபெருமானுக்குத் துணைவியாய் இருக்கும்என் தாயே! உலகில் சகல உயிர்களுக்கும் நீ தாயல்லவா?அதே போல எனக்கும் நீ தாயல்லவா? ஆதலினால் என் குறைகளை உன்னிடம் சொல்லாமல் ஏழை யாரிடம் சொல்வேன் அம்மா! என் பாவத் தொடர்களை எல்லாம் தூள்களாக அறுத்து பக்தர்கள் போல பணியவைப்பாய். மகிடாசுரனை அழித்து அவன் தலையில் நின்று ஒளிர்கின்றாய் ஞானச்சுடரொளியாய் அன்னையே! எல்லோர்க்கும் தாயாக விளங்கும் பராசக்தியிடம் குழந்தை என்ற உரிமையுடன் கஷ்டங்களையும் துன்பங் களையும் கூறுவது பக்தர்களின் இயல்பு என்பதும் அவற்றை அவள் தீர்த்துவைப்பாள் என்பதும் துன்பத்திற்குக் காரணமான பாசத்தொடர்புகளை அறுத்து அஞ்ஞான இருளை நீக்கி ஞானச்சுடரொளியாய் உள்ளத்தில் ஒளிர்வாள் என்பதும் இப்பாடலில் புலப்படுகின்றது.*

பாடல்: 73

## தெழிந்திடுவேன் அகத்தினுள்ளே

ஒளியிழந்த கண்களுக்குள் அருள் ஒளியாய் நிற்கின்றாய் என் தாயே!
வெளிமுதல் பூதங்களாய் விரிந்து அதனுள் மறைந்திருக்கும் என் தாயே
தெழிந்திடுவேன் அகத்தினுள்ளே ஞானச்சுடரொளியாய் திகழ்ந்துவிட்டால்
பழிவந்து சூழாமல் என் வாழ்வை இனிக் காப்பது உன் பொறுப்பே!

<u>கருத்துரை</u>

புறக்கண்ணில் ஒளியிழந்த போதும் அதனுள் அருள் ஒளியைத்தந்து ஆண்டுகொண்ட தாயே! பார்முதல் பஞ்ச பூதங்களாக விரிந்து அதனுள்ளே மறைந்திருக்கும் சக்தியே என்தாயே! என் அகத்தினுள்ளே ஞானச் சுடரொளியாய் நின்று விட்டாய். அதனால் தெளிந்திட்டேன் என் வாழ்க்கையினை. ஆதலினால் இனி என் வாழ்க்கையினைக் காப்பது உன் பொறுப்பன்றோ! புற ஒளியை இழந்த கண்களிலே அருள் ஒளியாய் வந்து நிற்கும் பராசக்தியே! நீ என் நெஞ்சினுள்ளே இருளை நீக்கி ஞானச்சுடரொளியாய் திகழ்ந்திட்டால் வாழ்வில் எப்போதும் தெளிவாக இருப்பேன். மேலும் என் இயலாமை யினாலும் அருள் போக்கினாலும் பழி வந்து சூழாமல் எனைக் காப்பது இனி உன் பொறுப்பாகும் அன்றோ!

பாடல்: 74

## பொறுக்கும் தகமை புதிதன்று என்தாய்க்கு!

பொறுக்கும் தகமை புதிதன்று சேய்கள் நாம் செய்யும் குற்றம்
பொறுத்திடுவாள் அணைத்(து) எமைப் பக்குவமாக்கிடுவாள்
மறுத்திட்டால் நாமெல்லாம் நலமுடனே வாழ்ந்திடுதல் ஆகிடுமோ?
மறுக்காமல் வந்திடுவீர் சரணடைவோம் திருவடியில் நமக்கு நன்றே!

<u>கருத்துரை</u>

தாயே உனக்கு பொறுமையெனும் குணம் புதிதன்று. ஆதலினால் உன் குழந்தைகளான அடியார்கள் நாங்கள் செய்யும் பிழைகளைப் பொறுத்தருள்வாயன்றோ! மேலும் எம்மை கருணையுடன் அணைத்துப் பக்குவப் படுத்துவாயன்றோ! ஆதலினால் குற்றங்கள் செய்தாலும் தோற்ற அளவில் குற்றமென்று சொன்னாலும் மறுக்காது அன்னையிடம் வந்திடுவீர். அவள் எம்மை மன்னிக்காதுவிட்டால் நாமெல்லாம் நலமுடன் வாழ்ந்திடலாமோ? ஆதலினால் நாமெல்லோரும் வந்து அன்னையிடம் சரணடைவதே நன்று.

பாடல்: 75

## குன்றாத ஒளிக்குவையாம் அபிராமியும் துர்க்கையும் நீ !

நன்றே வருகினும் தீதே விளைகினும் நினைப்பது உந்தனையே
ஒன்றேனுமுதவாது என் வாழ்வு உன்னருள் இல்லையென்றால்
என்றுமே புகழ் பாட நின்று நீ என் மனத்தில் நிலைக்கவேண்டும்
குன்றாத ஒளிக்குவையாம் அபிராமியும் துர்க்கையாம் நீ தஞ்சமன்றோ!

<u>கருத்துரை</u>

வாழ்க்கையில் இனி நன்மை வந்தாலும் தீமையே வந்தாலும் உன் திருவடிகளை நினைத்தவாறே இருப்பேன். என் வாழ்க்கை உன் அருள் இல்லையேல் வீணாகப்போய்விடும் அன்றோ! ஆதலினால் எனக்கு எப்போதும் உனைப் பாடிப் பணிந்து புகழ்ந்து உருகிட அருள்புரிவாயம்மா. எப்போதும் குன்றாத சோதி சொரூபமாய் விளங்கும் அன்னையே! அருட்கடலாக விளங்குபவளே! மேலும் அபிராமியாகக் காட்சி தந்த துர்க்கை அன்னையே! உன் அருளே என்றும் என் தஞ்சமன்றோ! இன்பதுன்பங்கள் நேரும் போதும் எப்போதும் மறவாமல் அன்னையைப் பற்றிக்கொண்டால் வாழ்க்கையானது ஒன்றுக்கும் உதவாது என்ற நிலையில் இருந்து உயர்ந்த நிலையை அடைவதுடன் அடியார்களுடன் சேர்ந்து எப்போதும் அன்னையின் புகழை பாடவைக்குமன்றோ! எனக்குள் என்றும் குறையாத அருள் ஒளியைத்தந்து நிற்கும்அபிராமியும் துர்க்கையுமான அன்னையே! நீயே தஞ்சம் எனக்கன்றோ!

பாடல்: 76

## தஞ்சம் நீயே!

தஞ்சம் நீயே எந்தனுக்கு யாருமில்லை துன்பமிகு வாழ்வினிலே
வெஞ்சின அவுணரை வென்று உலகம் காத்த துர்க்கையளே!
வஞ்சப்புலனைந்தும் வணங்கி நெறிப்படவென் நெஞ்சில் நின்றிடுவாய்
நெஞ்சில் உன் நினைவின்றி என் மூச்சும் இல்லை உணர்கின்றேனே!

<u>கருத்துரை</u>

அம்பிகையே! துன்பம் மிகுந்த வாழ்வினிலே உன்னைத்தவிர தஞ்சமாக ஒன்றையும் அறியேன். உன்னைவிட எனக்கு துணையேது மில்லை அம்மா! அன்று சினம் மிக்க அசுரர்களை எல்லாம் கொன்று உலகினையே காத்தருளிய துர்க்கை அன்னையே! என்னை வஞ்சனை புரியும் புலன்களையும் நெறிப்படுத்தி ஆண்டு கொள்ள என் நெஞ்சினுள்ளே வந்திடுவாயே! உன் நினைவு இன்றி என் மூச்சு உடலில் தாங்காது என்று உணர்கிறேன். துன்பத்திற்குக் காரணமான புலன்களை நெறிப்படுத்த வேண்டுமென்றால் அன்னையின் அருளை எப்போதும் நினைத்து இருக்க வேண்டும் என்பதையே அவளுடைய நினைப்பு இல்லாவிட்டால் என் உயிர் நீங்கிவிடும் என்று உறுதியாக அவள் நினைவை மனதில் வைத்திருக்க வேண்டும் என்பதைக் கூறுகிறேன்.

பாடல்: 77

## அகிலம் ஒளிபெறவே ஒளிரும் உலகேஸ்வரியே!

உணர்கின்ற அடியார் உள்ளத்தில் ஒளிர் ஞானச்சுடரொளியே
கணபதியைப்பெற்றிடவே களிறுடன் பிடியுமாய்க் கூடிய கௌரியே
குணம்கடந்த வேலன் உதித்திட அமையா இன்பத்தில் அமர்ந்தாய்
வணங்குகின்றேன் அகிலம் ஒளிபெறவே ஒளிரும் உலகேஸ்வரியே!

<u>கருத்துரை</u>

அம்பிகையே உந்தன் அருளை அறிந்து உன்னை உணர்கின்ற அடியார்கள் உள்ளத்தில் ஞானச்சுடரொளியாய் நிற்பாய் அன்றோ! மேலும் அன்று விநாயகப் பெருமான் தோன்றுவதற்கு களிறாக நின்று சிவபெருமானுடன் பிடியாக நின்ற அன்னையும் கௌரியே. மேலும் குணங்களெல்லாம் கடந்த ஞான சொரூபமாம் கந்தன் தோன்ற சிவபெருமானுடன் கூடாது இன்பத்தில் தனித்திருந்தவளே! அகில அண்டங்களும் ஒளி பெறும்படியாக அருட்பெரும் சோதியான உலகேஸ்வரியே! உன்னைப் போற்றுகின்றேன். முதற்கூறிய பாடலில் குறிப்பிட்டவாறு எப்போதும் அன்னையின் நினைப்புடன்இருக்கும் அடியார்கள் உள்ளத்தில் ஞானச்சுடராக விளங்குபவள் அன்னை. மேலும் அகிலாண்டமும் ஒளிபெற பராசக்தியாக விளங்கும் உலக நாயகியே! உன்னை வணங்குகின்றேன். இப்பாடல் பிள்ளையார் கதையைப் படித்துக்கொண்டு இருக்கும் போது உதயமான பாடல் ஆகும்.

பாடல்: 78

## உன்னைத்தேடவைத்தாய்

உலகினைக்காணவைத்து மயங்கவைத்து உன்னை மறைத்து நின்றாய்
உலகினை மறையவைத்து என் விழி வைத்து உந்தனைத்தேடவைத்தாய்
மலங்கப்புலனைந்தும் வஞ்சனைசெய் மனதினில் மறைந்து நின்றாய்
மலங்கப்புலனைந்தும் சிந்தனையைச்செய் மனதில் துலங்கினாயே!

<u>கருத்துரை</u>

எனக்கு இரு விழிகளைத்தந்து உலகினைக் காணவைத்து மயங்கவும் வைத்தாய். பின் என் கண்களைப் பார்வை இழக்க வைத்து அதன்மூலம் உலகினை மறைத்து என் அக விழியைத் திறந்து உனைத்தேடவைத்தாய். என் புலன்களைத் தெரியாமல் மறைத்திருந்தாய். பின்பு உன் அருளாலே என் புலன்களை நெறிப்படுத்தி உன்னைத்தேடும் தெளிந்த மனதினுள்ளே உனது காட்சியைத் துலங்க வைத்தாய். இறைவியினுடைய அருள் நூல்களை படிப்பதற்கும் அருள்தரும் ஆலய விழாக் கோலங்களையும் கண்டு இறை அருளைப்பெற்று உய்வடைய வேண்டிய நேரத்தில் இறைவி தந்த கண்களினால் மனம் போன போக்கிலே உலக இன்பங்களில் ஆசை கொண்டு மயங்கிய என்னை தடுத்து ஆட்கொள்ள புறக்கண்ணை இழக்கவைத்து அகத்தினுள்ளே பார்க்கும் ஞானக் கண்ணைத்தந்து அகத்தினுள்ளே அவளைக்காண வைத்த நிலையைப் பாடி உருகுகின்றேன்.

பாடல்: 79

## அதிசயமாய் அருள்செய்வாளடியவர்க்கு!

துலங்குகின்றாள் கனகதுர்க்கை இங்கிலாந்தின் ஈலிங்கில்
அலங்கார நாயகி அதிசயமாய் அருள் செய்வாளடியார்க்கு
குலம் காக்கும் துர்க்கையவள் குங்குமத்தையணிந்து கொண்டு
தலம்காண எழிதாம் எம்பெருமாட்டி நின் தண்ணளியே!

### கருத்துரை

அபிராமி அந்தாதியில் 79 பாடல் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அதாவது அப்பாடலை அபிராமிப்பட்டர் பாடிக்கொண் டிருக்கும்போது அந்த அமாவாசை இரவில் அம்பிகை தோட்டினை வானத்தில் வீசப் பூரணை நிலவாகக் காட்சி கொடுத்து அடியார்களுக்கு தன்னுடைய அருளை அதிசயமாகக் காட்டி நின்றாள். அது போல கனக துர்க்கை அந்தாதியில் 79 பாடலில் இங்கிலாந்தில் ஈலிங் பகுதியில் உள்ள ஆலயத்தில் அன்னை எழுந்தருளி இருப்பதாகவும் அலங்கார நாயகியாய் வந்து தரிசிக்கும் அடியார்களுக்கு அதிசையமாக அருள் செய்வதையும் குறிப்பிட்டுள்ளேன். மேலும் புலம் காக்கும் நாயகியாய் அவளின் மஞ்சள் குங்குமத்தை அணிந்து கொண்டு தரிசிக்கும் அடியார்களுக்கு அன்னையின் அருள் கிட்டுமென்பது எனது நம்பிக்கை. அன்னையின் அந்தாதியில் 79ம் பாடலை இப்படிப்பாடவேண்டுமென அடியேன் நினைத்திலேன். பாடல் இவ்வாறு தானாகவே அமைந்தது அன்னையின் அருளன்றோ! அதிசயமாக எனது வழித்தடி ஆலயத்தில் முதல் நாள் மறைந்தமையும் அடுத்த நாள் மிகவும் விசேஷமான ஒரு பவுர்ணமித்திதியில் என்னைத் திருவாளர் இராஜசிங்கம் அவர்களின் இல்லத்திற்கு அனுப்பிவைத்து 79வது பாடலில் தொடங்கி அந்தாதிக் கருத்துரைகள்யாவையும் பதிவு செய்து அந்தாதி ஆக்கத்தை நிறைவேற்றிய அன்னையின்அருளை

என்ன சொல்வேன்! அன்று அன்னை என்னைத் தடுத்த காரணம் நான் எனது குடும்பத்துடன் நின்று அன்று கோயிலில் நடைபெற்றுக் கொண்டிருந்த நாகபூஷணி அம்மன் தேர் உற்சவப் பூசையில் கலந்து அன்னையை வழிபட்ட பின்புதான் மறு நாளான விசேஷ திதியில் அந்தாதி ஆக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவும் என்று எண்ணுகிறேன்.

பாடல்: 80

## ஞானவிழி தந்தருளிய ஞானேஸ்வரியே !

தண்ணளி தந்து தமயேனை ஆண்டுகொண்ட தாயே தயாபரியே!
கண்ணொளி இழந்தாலும் ஞானவிழி தந்திட்ட ஞானேஸ்வரியே!
பண்ணமையச் சொல்தொடுத்து அந்தாதி பாடியுனைப் பணிகின்றேன்
விண்ணவரும் மண்ணவரும் போற்றிடும் கனகதுர்க்கை நாயகியே!

**கருத்துரை**

அடியார்களைப்போல எனக்கும் உன்னுடைய அருட்பார்வையை தந்து ஆண்டுகொண்ட தாயே தயாபரியே! அடியேன் கண்பார்வையிழந்து உன்னை வணங்கி நின்ற போது அருட் கண்ணைத் தந்து ஆண்டு கொண்ட அன்னையும் நீயன்றோ! ஆதலினால் உன் அருளைப் புகழ்ந்து இவ்வந்தாதியாம் பாமாலையைச் சூட்டி மகிழ்கின்றேன் அம்மா! உன் கருணையை எப்படி விண்ணவரும் மண்ணவரும் போற்றாதிருக்க முடியும்? அம்பிகையே! உன்னுடைய அருட்கடாட்சத்தைத் தந்து என்னுடைய புறவிழியை இழந்தபோது என்னை நெறிப்படுத்தி அகத்தினுள்ளே உனைக்கண்டு ஆனந்தமாய் வாழ ஞானக்கண் தந்த ஞானேஸ்வரியே என்று உன்னைப் புகழ்கிறேன் அம்மா!

பாடல்: 81

## நல்லதொரு கண்ணாடி காட்டிநின்றாய்

நாயகி உன்னுருவம் காண ஒரு கண்ணாடி காட்டி நின்றாய்
காயமே கோயிலாய் இதயத்தில் நீ நிற்கக் கண்டுவிட்டேன்
மாய இருள் அகற்றி மகிஷாசுரமர்த்தனியாய் ஒளிரக் கண்டேன்
தூயவனாக்கிய உன் நேசத்தினை நான் என் சொல்வேனே!

கருத்துரை

தாயே! என் இதயத்தில் உறைந்த உன்னை காணும் கண்ணாடியாக கோயிலின் கருவறையைக்காட்டி அதனுள் திருவாசியாம் இதயத்தில் காட்சி தந்தாய். இதனால் என் காயமே ஆலயமாகவும் உள்ளம் கருவறையாக அதனுள் இருளை அகற்றி உன் அருள் ஒளியை வீசுகின்றாய். ஆதலினால் என்னையும் தூயவனாக்கி ஆண்டுகொண்ட உந்தன் நேசத்தை எப்படிச் சொல்வேன்? அடியார்கள் எல்லோரும் மூலஸ்தானத்தில் அன்னையைத் தரிசிக்கும்போதுஅவர்கள் எல்லோரும் கண்ணாடியைப் பார்ப்பது போலவும் அவர்கள் இதயத்தில் வீற்றிருக்கும் அன்னையையே அவர்கள் கண்ணாடிக்குள் பார்ப்பது போலக் கருவறைக்குள் அன்னையைப் பார்ப்பது தோன்றியதால் இப்பாடலில் கண்ணாடிக் கருவறையெனக் கூறினேன். மேலும் திருமூலரும் திருமந்திரத்தில் "உள்ளம் பெரும் கோயில்" என்றதை இங்கு நினைவுகூருகிறேன்.

பாடல்: 82

## கல்லான என்மனதில் சிலையாக(ப்) பதிந்துவிட்டாய்

சொல்லிவிட எவராலும் உன் புகழைச் சொல்லி முடியாதன்றே!
பொல்லாத சுந்தரியே அந்தாதிப் பாமாலை பாடிப்புகழ்கின்றேன்
கல்லான என்மனதில் சிலையாகப் பதித்திட்டாய் உந்தனையே
அல்லும்பகலும் அகலாது என் மனதிலுன் திருக்கோலமன்றோ!

<u>கருத்துரை</u>

அம்மா! உன்னுடைய அருளைக் கூறிமுடிக்க முடியுமா? ஆதலினால் உன் அருளைப் புகழ்ந்து பாடும் அந்தமும் ஆதியுமாகத் தொடரும் அந்தாதியினை பாமாலையாக உனக்குச்சூட்டி பரவசமடைகின்றேன். கல்லான என் நெஞ்சத்தில் நிரந்தரமாக உன் உருவத்தை சிலையாகப் பதித்துவிட்டாய் அம்மா ! ஆதலினால் உன் கோலம் என் நெஞ்சத்துள் என்றுமே நீங்காதிருக்குமே! சொல்லிமுடிக்க முடியாத அன்னையின் புகழை சொல்வதற்கு அந்தாதிப் பாடலே சிறந்த வழி என்று மாணிக்க வாசகரும் அபிராமி பட்டரும் பாடியது போல உள்ளத்தில் தோன்றும் அருட்பாடல்களான மலர்களை ஒன்றாகத்தொடுத்து அருள் மணக்கும் அந்தாதிப் பாமாலையாக அன்னைக்குச் சூட்டி மகிழ்கின்றேன்.

பாடல்: 83

## ஒன்றாயரும்பி பலவாய் விரிந்து உலகமெங்குமாய் நின்றாய்

கோலமொன்றாயரும்பிப் பலவாய் பிரிந்து நிறைந்து நின்றாய்
ஞாலமியற்றிடவே ஐவரைப்படைத்து ஆங்காரியாகி நின்றாய்
காலச்சக்கரம் கையில் சுழற்றி காளியாய் மறைந்து நின்றாய்
சீலமுடன் நாம் வாழ மாய இருள் நீக்கி அருள்புரிவாயே?

<u>கருத்துரை</u>

அன்னையே! நீ அண்டசராசரங்கள் தோன்ற முன்பே கருவற்ற கருவாக ஏகமான சக்தியாய் நின்றாய். பின் பலவாகப்பிரிந்து அண்டசராசரங்களையும்படைத்து அவற்றுள் நிறைந்து பரப் பிரம்மமாய் நிற்கின்றாயே! இவ்வாறு உலகினை இயக்கும் ஆதிபராசக்தியாக பிரம்மா விஷ்ணு உருத்திரன் மகேஸ்வரன் சதாசிவன் ஆகிய ஐவரையும் படைத்தாய். காலத்தைக் குறிக்கும் காலச்சக்கரத்தை கையில் தாங்கி காளியாகவும் காட்சி தந்தாலும் நீ எங்கும் நிறைந்தவளன்றோ! சீலமுடன் எழியோன் வாழ உன் மாயம் நீக்கி அருள் புரிவாயம்மா!

பாடல்: 84

### அந்தாதிப்பாமாலை அகமகிழ்ந்து
### கேட்டவர்க்கு அருள்கொடுப்பாள்

புரிந்திட்டாள் அடியார்க்கு அதிசயங்கள் பலவினையே இவ்வுலகில்
சொரிந்திட்டார் அன்னைக்கு அடியாரும் புகழ் கூறும் பாமலர்கள்
தரித்திட்டார் அன்னைக்கு அருள்மணக்கும் அந்தாதிப் பாமாலை
துரிதமாய் அன்னை கேட்டவர்க்கு அருட்பாலைக் கொடுப்பாளன்றோ!

<u>கருத்துரை</u>

இவ்வுலகில் பல அடியார்களுக்கு அதிசயங்கள் செய் திருக்கின்றாள் அதுபோல அடியேனுக்கும் அவள் பல அதி சயங்களைச் செய்துள்ளாள். இவற்றை பல பாடல்களில் அடியேன் குறிப்பிட்டுள்ளேன். ஆதலினால் அன்று அடியார்கள் செய்தது போல் அடியேனும் அன்னைக்கு அம்மலர்களைத் தூவுகின்றேன். அம்மலர்களைத் தொடுத்து அருள் மணக்கும் அந்தாதிப் பாமாலையாகத் தொடுத்து சூட்டுகின்றேன். இவ்வந்தாதிப் பாடல்களை அடியார்கள் பாட அன்னை கேட்டு அருள் கொடுப்பாளன்றோ!

பாடல்: 85

## என் பாடல்குரல் கேட்டால்
## வாராளோ என் தாய் !

கொடுக்கும் தகமை என்தாய்க்கு புதிதன்று அன்றும் இன்றும்
எடுத்திட்டார் பல வரங்கள் விண்ணவரும் மண்ணவரும் என்றறிந்தோம்
படுத்திருந்து அழும் சேயின் குரல் கேட்டுப் பதைத்துவரும் தாய்போல
தொடுத்திடும் என் பாடல் குரல் கேட்டவுடன் வாராளோ என் தாயே!

கருத்துரை

இப்பாடலைத் தொடங்க முடியாமல் இருந்த நேரத்தில் கனவு ஒன்று கண்டேன் தொட்டிலில் படுத்திருந்த குழந்தை அழுவதையும் ஓடிவந்து தாய் குழந்தையைத் தூக்குவதையும் கண்டு யாரென்று பார்க்க நினைத்த போது விழித்துவிட்டேன். மறு நாட் காலை இதற்கு முதல் பாடலை பாடி இப்பாடலைத் தொடங்கும்போது தாயின் தனிப்பெரும் கருணையை வியந்து இப்பாடலின் மூலம் அக்காட்சியை மறவாத வண்ணம் பதித்துள்ளேன். மேலும் கொடுக்கும் தன்மை அன்னைக்கு புதியதல்ல அன்றோ! இதனால் அன்றும் இன்றும் விண்ணவரும் மண்ணவரும் பல வரங்களைப் பெற்றதையும் அறிவோம். அடியேனும் அந்தாதிப் பாடல்களைப் பாடி உருகி நிற்கும்போது அழுகின்ற சேயின் குரல் கேட்டு வரும் தாய் போல வாராளோ என் தாய்!

பாடல்: 86

## மண்ணில் வாழ நல்வழி காட்டிடுவாள்

தாயாக எமைத்தேடி நிற்குமுன் திருக்கோலம் கண்டுகொண்டேன்
சேயாகச் செல்வோரை அணைத்(து) அருட்பாலைத் தந்திடுவாய்
பேயாக அலைந்திடும் எம்மனதைப் பக்குவமாய் சமைத்திடுவாய்
மாயப் பிரபஞ்ச மயக்கம் நீக்கி மண்ணில் வாழ வழி காட்டுவாயே!

**கருத்துரை**

எம்மைத்தேடி இங்கு வந்து அன்னை பராசக்தி கோயில் கொண்டுள்ளாள். தாயின் திருக்கோலத்தைக்கண்டு குழந்தையாக மாறி அவள்முன் நாம் சென்றால் அவள் தாயாக நின்று எமை அணைப்பாளன்றோ! உலக வாழ்வில் அல்லல் பட்டு பேயாக அலையும் மனதை மயக்கம் தீர்த்து பக்குவப்படுத்தி வாழ அருள் வழி காட்டி நிற்பாள் அன்னையன்றோ! கலியுகத்தின் இறுதி காலத்தில் காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாத்சரியம் ஆகிய அசுரகுணங்களினால் ஈர்க்கப்பட்டமக்கள் அறியாமையினால் அல்லற் படுவதைக்கண்டு அவர்களைக் காக்கும் பொருட்டு அன்னை தாயாக வந்து கோயில் கொண்டாள் என்றும் குழந்தைகளைப் போல் நாம் அவளிடம் சென்று திருவருளைப் பருகுவதால் எம் மனம் பக்குவப்படும் என்பதையும் மண்ணில் வாழ நல்ல வழி பிறக்கும்என்பதையும் இப்பாடலில் அன்னையின் பெருமையாகக் கூறுகிறேன்.

பாடல்: 87

## பாட்டிசைக்க அடியெடுத்து(த்) தந்துவிட்டாள் பலதடவை!

காட்டிவிட்டாள் கனகதுர்க்கை கனவில் சிறுபெண்ணாய் தன் உருவம்
கூட்டிவிட்டாள் தன் அருளை நெஞ்சினிலே இருள்நீக்கி ஒளி பெறவே
பாட்டிசைக்கப் பக்குவமாய் அடியெடுத்துத் தந்திட்டாள் பலதடவை
கேட்டிசைந்து அருள்தருவாள் ஒன்றேனும் பாடிப் பணிபவர்க்கே!

<u>கருத்துரை</u>

அடியேனுக்கு என் அன்னையே பல தடவை அருட்கனவுகளைத் தந்து என் மனதைப் பக்குவப்படுத்தி தன் அருளினால் இப்பாடல்களுக்கு அடியெடுத்துத்தந்தாள் என்றதை நினைக்குந்தோறும் என் மனம் உருகுகின்றது. ஆதலினால் இப்பாடல்களில் ஒன்றையேனும் பக்தியுடன் பாடிப்பணிவோர்க்கு அன்னை கேட்டு மகிழ்ந்து நிச்சயமாக அருள் கொடுப்பாள் என்பது என் கருத்தாகும். ஒன்றும் தெரியாத எனக்கு பல முறை கனவுகளிலே காட்சிதந்து அருள் எண்ணங்களை உதிக்கச் செய்து என் வாக்கினிலே நின்று அம்பிகையே பாடவைத்த தன்மையினால் இப்பாடல்களில் ஒன்றையேனும் பாடினால் அன்னை கனகதுர்க்கை ஓடிவந்து அருள் செய்வாள் என்பது அடியேனின் நம்பிக்கையாகும்.

பாடல்: 88

## தணித்திடுவாள் தமிழ் மக்கள் தாகமதையங்கே!

பணிகின்றோம் பக்தியுடன் பாடுகின்றோம் கனகதுர்க்கை தாயவளை
அணிகின்றோம் அன்னைக்கு அலங்காரச்சேலைகளும் மாலைகளும்
பிணிதீர்த்து ஆட்கொள்வாள் அன்னையவள் அடியார்கள் குறையறிந்தே
தணித்திடுவாள் நிச்சயமாய் தமிழ் மக்கள் தணியாத தாகம் அங்கே!

<u>கருத்துரை</u>

நாள்தோறும் ஆலயத்தில் வந்து அபிஷேசங்கள் பல செய்து வண்ணப்பொற் சேலைகளும் மாலைகளும் அன்னைக்கு அணிந்து வழிபடுகின்ற அடியாரின் கஷ்டங்களைத் தீரப்பதுடன் அவர்களின் தாயகமாம் ஈழத்தில் அமைதியை நிலைக்க வைத்து அவர்கள் தாகமதைத் தீர்த்திடுவாள் எமதன்னையன்றோ! இப்பாடலில் அமைதியற்று இருக்கும் எமது நாட்டிலிருந்து புலம் பெயர்ந்துவந்தமக்கள் தாயகத்தின் அமைதியின் பொருட்டு ஆலயங்களில் கடவுளை வேண்டுவது இயல்பு, அவ்வாறே எமது கனக துர்க்கையின் சந்நிதியிலும் எமது உறவுகளுடன் இணைந்து எமது நாட்டுப் பிரச்சனைகள் தீர்ந்து நல்வாழ்வு பெற வேண்டுகிறேன்.

பாடல்: 89

## புத்தாண்டில் புதுவாழ்வு மலர வேண்டுகிறோம்

அங்கிருக்கும் அவலைகட்கும் உறவிழந்த குழந்தைகட்கும்
இங்கிருக்கும் ஈலிங்கில் எழுந்தருளும் தாயான துர்க்கையளே!
எங்கிருக்கும் உறவுகள் அனைத்தையும் அணைத்திடும் தாய் நீயே
பொங்கிவரும் புத்தாண்டில் புதுவாழ்வு தந்திடு உன்னருளே!

<u>கருத்துரை</u>

எமது தாய் நாட்டில் அல்லலுற்று உறவுகளை இழந்த குழந்தைகளுக்கு அருள் புரியும் ஆலய அறக்கட்டளையினால் செயற்படுத்தும் திட்டங்கள் மூலம் எவ்வளவோ உதவி புரியும் கனகதுர்கை அம்மா நீ அல்லவோ! மேலும் எங்கிருந்தாலும் உன்னைத் தேடும் உறவுகளையும் உன் அருட்கடாட்சத்தினால் அணைப்பவள் நீயன்றோ! இனிவரும் புத்தாண்டில் அவர்களின் துயர் நீங்கி புதுவாழ்வு பெற உன்னருளை வேண்டுகின்றேன். இப்பாடல் சிறப்பாக எமது அன்னையின் ஆலயத்தில் மேற்கொள்ளப்படும் எமது ஊனமுற்ற உறவுகளினதும் குறிப்பாக சிறுவர்களினதும் பராமரிப்புக்காக செயற்படும் அறக்கட்டளைகளின் சேவைகளை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது. அன்னையின் அணைக்கும் கரங்களின் அணைப்புகளுக்கும் எல்லையுண்டோ!

பாடல்: 90

## ஆனந்த(க்) கொடிதனில் பூத்திட்ட அவதாரக்கோலம் நீயே

அருள்தரும் ஆனந்தக் கொடி பூத்த அவதார அன்னை நீயே
பொருள்தரும் அம்மா நாம் வளம்பெற உன்னை வேண்டுகின்றோம்
மருள் அகற்றும் மகிஷாசுரமர்த்தனியே நீக்கிடுவாய் மனமாயையினை
இருள் நீங்கித் தருமம் தழைக்க இவையனைத்தும் வேண்டும் அம்மா!

<u>கருத்துரை</u>

மகிஷாசுரனை அழித்து அவதாரக்கொடியில் பூத்துத் துலங்கும் உன் கோலம் காண்பவர்க்கு ஆனந்தத்தைத்தருகிறதே! மேலும் உன்னை வழிபடும் மக்களுக்கு பொருளையும் அருளையும் கொடுத்து மன மயக்கத்தைத்தீர்த்து சீலர்களாய் வாழவைப்பாய் அன்றோ! இருள் நீக்கித் தருமமே தழைக்க உன்னருளை வேண்டுகின்றோம்.

பாடல்: 91

## அம்மாவெனும் சொல்கேட்டால் என் உள்ளம் இனித்திடுதே!

அம்மா அம்மா என்ற சொல்லினிலே வரும் சுகமே சுகமன்றோ!
இம்மானிலத்தில் இனிமை பல இருக்குதம்மா அந்த உறவினிலே
பெம்மானவன் எம்மான் சிவனையுமே அம்மாவென்பார் அடியாரும்
சும்மாவேனும் அம்மா சொல்கேட்க என்னுள்ளம் இனித்திடுதே!

<u>கருத்துரை</u>

உன்னை அம்மா என அழைக்கும்போது கிடைக்கும் சுகத்திற்கும் எல்லையுண்டோ? இப்பாடலை அம்மா என்ற உறவே உலகில் பெருமையான உறவு என்பதையும் அம்மா எனும் சொல்லின் பெருமையையும் காட்ட அமைத்துள்ளேன். இதனால்தான் சிவபெருமானை நாயன்மார்கள் தாயென்ற உறவு கூறி வழிபட்டார்கள். எப்பொழுதும் அம்மா என்ற சொல்லை யாராவது கூறக்கேட்கும்போது இனிமையான உணர்வு என் உள்ளத்தில் சேருவதை அறிகின்றேன். இப்பாடலில் தமிழ் மக்களாகிய நாங்கள் எல்லோரும் தாய்மொழியில் குழந்தைகள் அன்னையை அம்மா என்றழைக்கப்பயிற்ற வேண்டும். குழந்தைகள் கூறும் அம்மா என்ற சொல்லில் அன்னையின்அருளைக் காணலாம்.

பாடல்: 92

**கனிகின்றது என் வாழ்வு அம்மா**
**உன் அருட்கடாட்சத்தினாலன்றோ !**

இனிக்கின்றது என்னுள்ளம் (அம்மா!) உன் அருட்காட்சி நினைக்கும்போது
தனிக்கின்றது என்மனம் (அம்மா!) உன் நினைவினிலே மூழ்கும்போது
பனிக்கின்றது என்கண்கள் (அம்மா!) உனைப்பாடி(ப்) பரவசமாகும்போது
கனிக்கின்றது என் வாழ்வு (அம்மா!) உன் அருட்கடாட்சத்தினாலன்றோ!

கருத்துரை

உன் காட்சிகளை நினைத்துப் பார்க்கும்போது என் மனம் ஆனந்தத்தில் மூழ்கி உன் நினைவில் தனிமை அடைகின்றதே! உனைப்பாடிப் பரவசமடையும்போது என் கண்களில் நீர் சொரிகின்றதே! இவ்வாறு என் வாழ்வும் உன் அருட்கடாட் சத்தினால் கனிந்து பக்குவமாகின்ற தன்றோ! அன்னையின் அருட்காட்சிகளை நினைக்கும் தோறும் உள்ளம் பரவசமாகுவதோடு அவள் நினைப்பில் மனம் மூழ்கி ஒருமைப்படுவதையும் புலன்கள் அழிந்து ஆத்ம நினைவுடன் இருப்பதையும் மேலும் அவள் அந்தாதிப்பாடல்களைப் பாடி பரவசமாய் கண்ணீர் மல்குவதனாலும் உள்ளத்தைக் கனிய வைக்கின்ற நிலையையும் இப்பாடலில் நினைவு கூருகிறேன்.

பாடல்: 93

**என்னை கடைக்கண்ணால்**
**காத்திடுவாய் நான் உன் சேயே !**

கடாட்சித்திடவே நீ கனவிலும் நினைவிலும் வந்து நிற்பாய்
படாத பாடுபட்டு பிறவியிலே சுழன்று இளைத்து நின்றேன்
தடாதகையாய் தரணியிலே தமிழ் வளர்த்த மீனாட்சியே!
விடாமல் காத்திடுவாய் கடைக்கண்ணால் நான் உன் சேயே!

<u>கருத்துரை</u>

கடாட்சித்துக் காத்திடவே அருட்காட்சிகளை தந்தாயன்றோ! பாரதத்தில் மதுரையில் மீனாட்சியாகத்தோன்றி ஆட்சி செய்து தமிழ்ச் சங்கத்தின் மூலம் தமிழையும் வளர்த்தாயன்றோ! சேயாகி நிற்கும் என்னை கடைக்கண்ணால் என்றும் காத்திடுவாயன்றோ! சுழல் பிறவியில் பிறந்து பிறந்து களைத்து நின்ற எனக்கு உன்னுடைய அருட்கடாட்சத்தை கனவிலும் நினைவிலும் தந்து ஆட்கொள்ளுகின்றாய். மதுரையில் பாண்டியன் மகளாக அவதாரம் செய்து மக்களைப் பரிபாலனம் செய்யும் சிறப்பான அருட்பார்வையுடைய மீனாட்சியே என்னையும் உன் சேயாகக் கருதித் தொடர்ந்து காத்திடுவாயம்மா!

பாடல்: 94

**ஓயாது பிறவியிலே விளையாடும் என்னை**
**கடைக்கண்ணால் உகந்து பாராய் !**

சேயாக எனைக்கண்டு அகமகிழ்ந்து அருட்புனலால் கழுவிடுவாய்
பேயாக அலைந்திடும் என் மனதால் பேதை மதியிழந்தேன்
தாயாக எனை அணைத்(து) அருட்பாலை ஊட்டி மழலை கேட்டு
ஓயாது பிறவியிலே விளையாடும் பாலனையும் கடைக்கண் பாராய்!

<u>கருத்துரை</u>

விளையாட்டு மேடையில் விளையாடி ஆலயமாம் வீட்டினுள் வரும்போது குழந்தைகளைப் போல எம்மை அணைத்து அருட்பார்வையெனும் அருட்சுனையால் கழுவி புனிதமாக்கும் என் தாயே! பிறவியில் பேயாக எமை அலைத்திடும் மனதினால் சக்தியிழந்த என்னை தாயாக அணைத்து வேண்டுதல் செய்யும் மழலை மொழிகளைக்கேட்டு மீண்டும் வாழ்க்கையில் உலகெனும் மேடையிலே விளையாடும் போது உன் கடைக்கண்ணால் பார்த்து அருள்வாயே!

பாடல்: 95

## தாயிருக்க விளையாடும்
## சேயெனக்கு பயமே ஏது?

பார்த்திருக்கும் தாயிருக்க விளையாடும் சேயெனக்கு பயமே ஏது?
மார்புதட்டி நடந்திடவும் விழிவைத்துப் பார்த்திடுவாள் துர்க்கையன்னை
கார்முகிலின் மேனிபெறும் கண்ணனவன் தங்கையுமாம் காளியவள்
வார்சடையோன் கண்டத்தில் நஞ்(சை) அமுதாக்கியவளும் இவளே!

<u>கருத்துரை</u>

வாழ்க்கையிலே மனத்துணிவுடன் எம்மை விளையாடவைத்து விளையாடும் குழந்தைகளைப் பார்த்திருக்கும் தாய்போல கனகதுர்க்கை காத்து நிற்கின்றாள். அன்னை நீயே கார்முகில் வண்ணனான கண்ணனுக்கு சகோதரியாக அவதாரம் செய்த காளியே! மேலும் திருப்பாற்கடலில் கடைந்த போது திரண்ட நஞ்சினை தேவர்களைக் காப்பதற்கு சிவபெருமான் உண்டபோது அதை அவருடைய கண்டத்தில் அமுதமாக்கிய அம்பிகையும் நீயல்லவோ!

பாடல்: 96

## இவளின்றி அவனில்லை

இவளின்றி அவனில்லை அவனுக்குள் இவள் இருந்து ஆடுகின்றாள்
புவனங்கள் பதினான்கும் ஆடிட ஆடும் பிரானுடன் கூடி நின்றாள்
அவனுக்கும் இவளுக்கும் உறவு பல வென்று சொல்லிவிட்டார் மூலருமே
தவமிருந்து ஈசனையும் தன்தவத்தால் ஈர்த்து அணைத்திட்டாளே!

<u>கருத்துரை</u>

இப்பாடல் சக்தியில்லாமல் சிவனில்லை என்ற தத்துவத்திற்கு அமைய ஒன்றுக்குள் ஒன்றாக நின்று பதின் நான்கு உலகங்களையும் இயக்குகின்றாள் என் அன்னை. இருந்தாலும் அன்னைக்கும் அப்பனுக்கும் பல உறவு முறைகளை திருமூலரும் திரு மந்திரத்தில் சொல்லி வைத்தார். (மாணிக்கவாசகரும் இதேபோல் அம்பிகைக்கும் சிவனுக்கும் பல உறவு முறைகளை திருவாசகத்தில் குறிப்பிட்டுள்ளார்). தவக்கோலம் பூண்டு சிவபெருமான் இருந்த போது சக்தியாய் அன்னை தவம் செய்து சிவபெருமானை பாகமாக அணைத்துக்கொண்டாள்.

பாடல்: 97

## அணைக்கின்ற அன்னையின் உறவு

அணைக்கின்ற உறவினிலே மேலான உறவு உந்தனன்றோ!
பிணையெடுப்பாள் பிறவியெனும் சிறையில் பிணக்கும் தீர்ப்பாள்
துணையாக வந்து துன்பம் போக்கிடுவாள் துர்க்கையன்னை
இணையற்ற இன்பம் பெற்றிடலாம் குறையில்லை வாழ்வினிலே!

<u>கருத்துரை</u>

உறவுகளில் மேலான உறவு தாயின் உறவே. தாயின் உறவே எப்போதும் அணைக்கின்ற உறவாக இருக்கின்றது. இதனால்தான் தாயில் சிறந்த கோயில் இல்லையென்பார்கள். அன்னை பராசக்தி சிறைக்கூடம் போல் இருக்கும் வாழ்க்கையிலே வருகின்ற பிணக்குகளையும் கஷ்டங்களையும் தீர்த்துவைப்பதுடன் பிறவியெனும் சிறையிலிருந்தும் மீட்டிடுவாள். துர்க்கையன்னை வாழ்வில் துணையாக இருப்பதுடன் துன்பங்களையும் நீக்கிவிடுவாள். அவளை வணங்குவதால் எல்லையில்லா இன்பம் பெற்று குறையேதுமின்றி வாழ்ந்திடலாம்.

பாடல்: 98

## ஏழ்மை நீக்கி இன்பம் தந்திடுவாள்

வாழ்வு வளம்பெற வந்து நின்ற துர்க்கையை வணங்கிடுவோம்
தாழ்வு நீங்கித் தர்மம் தழைத்திடப் போற்றிடுவீர் எந்நாளுமே
ஊழ்வினை நீங்கி உயர்ந்திடத் தாயவளை நினைத்திடுவோம்
ஏழ்மை போக்கி இன்பம் பெறத் தொழுதிடுவீர் எப்போதுமே!

<u>கருத்துரை</u>

வாழ்க்கை வளமாக அமைய வணங்குவதுடன் தாழ்வு நீக்கி தர்மம் தழைக்க துர்க்கையை எந்நாளும் போற்றிடுவோம். ஊழ்வினை நீங்கி உயர்வு பெற்று வாழ்வதற்கு அன்னையை உள்ளத்தில் எந்நாளும் நினைத்திடுவோம். எங்கள் ஏழ்மை நீங்கி இன்பமாய் வாழ எந்நாளும் அன்னையைத் தொழுதிடுவோம். புலம்பெயர்ந்து வந்த எம்மைக்காத்திட வந்து கோயில் கொண்ட கனகதுர்க்கை அன்னையை வாழ்வு வளம்பெறுவதுடன் ஊழ்வினை நீங்கி உயர்வினைப்பெறவும் தாழ்ந்த மனப்பான்மையும் அதர்மமும் நீங்கி தர்மம் தழைக்கவும் வறுமை நீங்கி இன்பமுடன் வாழவும் எப்போதும் தொழுதிடுவோம்.

பாடல்: 99

## அப்போதைக்கு இப்போதே செல்லிவைத்தேன்

எப்போதும் உன் நினைவு என்மனத்தே அகலாது இருக்க வேண்டும்
முப்போதில் எப்போது வெங்காலன் எனையழைக்க வருவானோ!
தப்பாமல் நீ வந்து தமியேனுக்(கு) அருட்காட்சி தரவே வேண்டும்
அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன் உள்ளம் உருகிடவே!

<u>கருத்துரை</u>

அன்னையே! உன்னை எப்போதும் மறவாதிருக்க அருள்தர வேண்டும். மேலும் எல்லோர்க்கும் எப்போது வருவானென்று தெரியாமல் இருக்கும் நிலையில் அவன் வந்து என்னை அழைக்கும்போது தப்பாமல் நீ வரவேண்டுமென்று உடலும் உள்ளமும் உருக இப்போதே சொல்லி வைக்கின்றேன் என் தாயே! மணிவாசகர் முதல் அபிராமி பட்டர் வரை ஞானத்தைப்பெற்ற யாவரும் இவ்வுலகில் பிறந்தவர்க்கு மரணம் நிச்சயம் என்றும் அது எப்போது எவ்வுருவில் வரும் என்று தெரியாது ஆகையால் அந்த நேரத்தில் இறைவன் நினைவு வருமோ வரமாட்டாதோ என்ற நிலையை அறிந்து அவ்வாறு மரணம் வரும்போது நீ அப்பனுடன் வந்து காட்சி தரவேண்டும் என்று இப்போதே அன்னையை மனமுருகி வேண்டுகிறேன்.

பாடல்: 100

## கருணை மழை பொழிவாள் கனகதுர்க்கை

உருகித்தொழும் அடியார்கள் உள்ளத்தில் ஆனந்தம் பொங்கி நீர்
பெருகிவர கைத்தலம் உச்சிமேற்குவிய அம்மாவென்று மெய்சிலிர்க்க
கருணைமழை பொழியும் கனகதுர்க்கை அம்பிகையின் அருட்கோலம்
அருள்தரும் ஆனந்தக்கோலமாய் நெஞ்சில் எப்போதும் உதித்திடுமே!

<u>கருத்துரை</u>

*அம்மா! உன்னை மெய்யன்புடன் உருகித்தொழும் அடியார்கள் உள்ளத்தில் ஆனந்தம் பொங்கிவர அவர்கள் விழிகளில் கண்ணீர் சொரிந்தோட மெய்சிலிர்த்து இருகரங்களும் சிரசின் மேல் குவிய அவர்களுக்கு கருணை மழை பொழியும் கனக துர்க்கையாய் நிற்கும் உனது திருக்கோலம் என் நெஞ்சினுள்ளே எப்போதும் உதித்து நிற்குமன்றோ!*

குறிப்பு: இவ்வந்தாதிப்பாடல்களின் கருத்துரைகளைப் பல நாட்களாக தொடர்ந்து எழுதி வரும் வேளையில் முற்றிலும் எதிர்பாராத விதமாக அன்று அபிராமிப் பட்டருக்காக 79வது பாடலைப் படிக்கும்போது பூரணை நிலவைக்காட்டியது போல இன்று 13.7.2003 கனகதுர்க்கை அந்தாதியை 79வது பாடலில் இருந்து தொடங்கி முழுப்பாடல்களின் கருத்துரையையும் எழுதிமுடித்தபோது அன்னையின் அருட்கடாட்சத்தினால் இன்று சிறப்பான நாளான பூரணை திதியாகவும் வியாசரின் குருபூசையுமாய் அமைந்ததை உணர்ந்தேன். நேற்றைய தினம் (12.7.2003) இதைஎழுதி முடிக்கத் தீர்மானித்திருந்தும் ஆலயத்தில் நாகபூஷணி அம்மன் பூசையைச் சீக்கிரம் முடித்து பிற்பகல் 3.00 மணிக்கு திருவாளர் இராஜசிங்கம் அவர்கள் வீட்டுக்குப் புறப்பட்டபோது ஆச்சரியமாக என்னுடைய வழித்தடி ஆலயத்தில் காணாமல் போனதும் அன்னை என்னைத் தடுத்ததும் அவளின்

திருவிளையாடலன்றோ! இதன் விளக்கத்தை முற்றாக அறிவதற்கு 79வது பாடலையும் கருத்துரையையும் வாசிக்கும்படி வாசகர்களை தயவுடன்கேட்டுக் கொள்ளுகிறேன்.

## கனகதுர்க்கை அந்தாதி நூற்பயன்

ஆத்தாளைக் கனகதுர்க்கை அம்பிகையை அடியார்கள் உள்ளத்தில்
பூத்தாளை நீல முகில் மேனியாளை புவியடங்க அன்று அவதரித்துக்
காத்தாளை மகிஷாசுரமர்த்தினியை சங்குசக்கரம் சூலமும் கொண்டு
சேர்த்தாளை முக்கண்ணி தொழுவார்க்கு ஒருபோதும் தீங்கில்லையே!

<u>**கருத்துரை**</u>

*உலகத்திற்கு தாயானவளே எங்கள் கனக துர்க்கை அம்பிகையே! உன்னைவணங்கும் அடியார்கள் உள்ளத்தில் பூத்து நிற்பவளே! நீல முகில் நிற திருமேனி உடையவளே! மகிஷாசுரனை அழித்து உலகினைக் காத்து மகிஷாசுர வர்த்தினியானவளே! சங்கோடு சக்கரமும் சூலமும் கொண்டவளே! மூன்று நயனங்கள் உடையவளே! உன்னைத்தொழும் அடியார்களுக்கு வாழ்வில் ஒரு தீங்கும் ஏற்படாதன்றோ!*

இவ்வந்தாதி
5, பிளாசா பரேட், 29-33 ஈலிங் றோட், வெம்பிளி, இலண்டன்,

**வெஸ்ரன் ஜுவல்லர்ஸ் & ரெக்ஸ்டைல்ஸ்**
**(Western Jewellers & Textiles)**
நிறுவனத்தின் ஆதரவில் வெளியிடப்படுகிறது.



கவிஞர்
கூடலூர் **நாகராஜன்**

**Sri Kanagathurkai Amman Temple.**

No. 5 Chapel Road, West Ealing,
London W13 9AE.